VIJRS

# Vaaranam International Journal of Religious Studies

# வாரணம் பன்னாட்டுச் சமய ஆய்விதழ்

VOL:1 ISSUE:1 MARCH 2025

(Quarterly: March, June, Septumber, December)

Published by Niththilam Publications

# Editorial Board

**Founder | Publisher**
**Mr. P Jayakrishnan**

**Editor in Chief**
**Dr Priyakrishnan**

**Editorial Board Members**

**Dr. S. Saravanan**

Professor and Head, Department of Saiva Siddhantam, University of Madras, Chennai, India

ssaravanan@unom.ac.in

**Dr.K.Dayanidhi**

Assistant Professor & Head i/c, Department of Vaishnavism, University of Madras, Chennai, India

dayanidhi@unom.ac.in

**Dr B. Dhananjayan**

Associate Professor and Head, Sir Theagaraya College, Old Washermenpet, Chennai, India

**Dr. S. Madhavan**

Head of Department, Postgraduate and Department of Tamil Studies, Rajeswari Vedachalam Government Arts College, Chengalpat, India

**Dr. Y. Paul Prabu Santharaj (MCC)**

Professor, Madras Christian College, Chennai. India | paulprabu@mcc.edu.in

**Dr. S. Inqulab (Jr. Inqulab)**

Assistant Professor, Department of Tamil, The Quaide Milleth College for Men, Medavakkam, Chennai, India

வாரணம் பன்னாட்டுச் சமய ஆய்விதழில் வெளிவரும் ஆய்வுக்கட்டுரைகள் சக மதிப்பாய்வு (peer Review) செய்யப்பட்டு காலாண்டு (மார்ச், ஜூன்,செப்டம்பர்,டிசம்பர்) இதழாகப் பதிவு செய்யப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

Phone: 044 47906750, Mob. +91 9677756236
www.niththilampublications.com | vaaranamjournal@gmail.com

# அணிவகுப்பு

பிள்ளையாரும் முப்பத்திரண்டு திரு வடிவங்களும்
முதுமுனைவர் பிரியாகிருஷ்ணன்

திருப்பாவையில் அவதாரச் சிறப்பு
முனைவர் ப.தனஞ்செயன்

பக்கீர்களும் தர்கா வழிபாட்டுச் சடங்குகளும்
முனைவர் சா.இன்குலாப்

ஆழ்வார்களின் அருளிச் செயல் "நாலாயிரம் பாடல்கள்"
ம. ஜெயப்பிரகாஷ் நாராயணன்

கந்தர் கலிவெண்பாவில் உகந்து உள்ளுறைவோன்
முனைவர் பூ.சேகர்

சப்தவிடங்க திருத்தலங்களில்
தியாகராஜர் வழிபாடும் எழுவகை நடனங்களும்
சு.திவ்யா

வள்ளாரும் விவேகானந்தரும் செய்த சமுக பணிகள்
முனைவர் நா. தீபாராணி

வாரணம் பன்னாட்டுச் சமய ஆய்விதழ் தொகுதி: 1 இதழ்: 1 மார்ச் 2025
VAARANAM INTERNATIONAL JOURNAL OF RELIGIOUS STUDIES | VOL: 1 ISSUE: 1 MARCH 2025
Published by Niththilam Publications | www.niththilampublications

# *Pillayar and his Thirty-two forms*

***Dr Priyakrishnan***

*Orcid ID:https://orcid.org/0009-0005-1909-0522*

***Abstract;***

*Some consider the worship of Pillaiyar to be something that was added later. Accordingly, scholars have found that the archaeological evidence found in Pillaiyar dates back to the 5th century AD. It is customary for Tamil literature to begin with a prayer to God. But it is not possible to know from which period the principle that one should start any work only after worshipping Pillaiyar may have emerged. This article examines Pillaiyar and his deities.*

***Keywords:****Pillaiyar, Pillayarpatti, Yaanaimugan, Erukkam, Ganapathi*

# பிள்ளையாரும் முப்பத்திரண்டு திரு வடிவங்களும்

**முதுமுனைவர் பிரியாகிருஷ்ணன்**

*Orcid ID:https://orcid.org/0009-0005-1909-0522*

**ஆய்வுச்சுருக்கம்:**

பிள்ளையார் வழிபாடு பிற்காலங்களில் இணைக்கப்பட்ட ஒன்றாகச் சிலர் கருதுவர். அதற்கேற்பத் தொல்லியல் சான்றுகள் மூலமாகக் கிடைத்திருக்கும் பிள்ளையார் காலத்தாற் பிற்பட்டதாக கி பி 5 ஆம் நூற்றாண்டைச் சார்ந்ததாக அறிஞர் கண்டறிந்துள்ளனர். தமிழ் இலக்கியங்கள் கடவுள் வாழ்த்துடன் தொடங்கி அமைக்கப்படுவது பண்டுதொட்டு வழக்கம். ஆனால் பிள்ளையார் வணங்கிய பின் தான் எந்த செயலையும் துவங்க வேண்டும் என்ற கோட்பாடு எந்த காலத்திலிருந்து உருவாகியிருக்கக் கூடும் என்பதைப் பற்றி அறிய இயலவில்லை. இக்கட்டுரை பிள்ளையார் குறித்தும் அவரது திரு உருவங்கள் குறித்தும் ஆராய்கிறது.

**திறவுச் சொற்கள்:** பிள்ளையார், பிள்ளையார்பட்டி, யானைமுகன், எருக்கம், கணபதி

**முன்னுரை:**

பிள்ளையார் வழிபாடு இந்துக்கள் அனைவருக்கும் உரிய வழிபாடாக உள்ளது.சைவ சமயத்துக்கு உரியவாரகப் போற்றப்பட்டாலும் அனைவரும் விரும்பும் இஷ்ட தெய்வமாக விளங்குபவர். வைணவ



V I J R S 2 0 2 5

சமயத்தினரும் தங்களது திருக்கோயில்களில் தும்பிக்கை ஆழ்வார் என்னும் பெயரில் வணங்கி வருகின்றனர். இது பிற்காலத்தில் எழுந்த வழக்கமாக இருந்திருக்கக்கூடும். வைணவர்களின் திவ்விய தேசங்களான ஸ்ரீரங்கத்திலுள்ள அரங்கநாதர் கோயிலிலும், காஞ்சிபுரம் பெருமாள் கோயிலிலும் திருவல்லிக்கேணி பார்த்தசாரதிப் பெருமாள் கோயிலும் தும்பிக்கை ஆழ்வாரைப் பார்க்க முடிகின்றது. புராணங்களில் முதன்மையானதாகக் கருதப்படும் பார்க்கவ புராணத்துப் பிரணவப்பொருளாகவும் பேதாபேதப் பொருளாகவும், அவை அனைத்தையும் கடந்து நிற்கும் ஏக தத்துவப் பொருளாகவும் பிரம்மானந்த ரூபமாகவும் விளங்கும் விநாயகப் பெருமானின் மகிமையைவிளக்கிக் காட்டியிருப்பதால் இதை விநாயக புராணம் என்றும் குறிப்பிடபடுவதால் முதன்மை புராணத்தின் நாயகன் விநாயகன் என்னும் தெய்வதை முன்னிருத்தி வணங்கும்வழங்கும் வந்திருக்கலாம்.

**சங்க இலக்கியத்தில் பிள்ளையார்:**

தொல்காப்பியம், பத்துப்பாட்டு, எட்டுத்தொகை ஆகிய சங்க நூல்களில் ஆனைமுகன் பற்றிய செய்தி சங்கநூல்களுள் அகச்சான்றாகக் கிடைக்கவில்லை. திருமுருகாற்றுப்படையின் இறுதியில் உள்ள பத்து வெண்பாக்களில், ஏழாவது வெண்பாவில் மட்டும் 'ஒருகைமுகந்தம்பியே' என்று முருகாற்றுப்படை குறிப்பிடுவதை காணமுடிகிறது. ஒருகைமுகன் என்ற இந்த வெண்பா பிற்காலத்தில் எழுதப்பட்டிருக்கலாம் என்பதும் ஒரு சாரார் கருத்து. "திருமுருகாற்றுப்படையும் பரிபாடலும் கி பி ஐந்தாம் நூற்றாண்டுக்குப் பிறகு தோன்றிய நூல்களாகும்.சங்ககால நூல்களில்லை" என்று சங்க நூல்களில் முருகன் என்னும் நூலில் (ப:47) பி எல் சாமி குறிப்பிடுவது உற்று நோக்கத்தக்கது.

ஆனால், புறநானூற்றுப் பாடலில்,

"நல்லவும் தீயவும் அல்ல: குவியிணர்ப்
புல்லிலை எருக்கம் ஆயினும், உடையவை,
கடவுள் பேணேம் என்னா: ஆங்கு,
மடவர் மெல்லியர் செல்லினும்
கடவன் பாரி கைவண்மையே" (புறம்: 106)

கடவுள், தாழ்வாகக் கருதப்பெறும் எருக்க இலையைத் தந்து வழிபட்டாலும் எல்லா பக்தர்களையும் ஒன்றாகத்தான் கருதும்.வேறுபாடு காட்டாது என்பது இப்பாடலின் மையப்பொருள். இங்கு எருக்கு இலை குறிப்பிடப்படுவது கணபதி வழிபாட்டை நினைவுபடுத்துகிறது என்றும், எருக்கு மாலையைத்தான் கணபதிக்குச் சூட்டி மக்கள் வழிபடுவர் என்றும், ஆதலால் சங்ககாலத்திலேயே கணபதி வழிபாடு இருந்தது

என்பது இதன்மூலம் தெளிவுறும் என்றும் அருணாசலம் எழுதியுள்ளார் என்று நடன.காசிநாதன் (கல்வெட்டுக்காலாட்டு இதழ்-45,ப:27) குறிப்பிடுவது இங்கு கவனிக்கத்தக்கது.

**தொல்லியல் பார்வையில் விநாயகர்:**

தமிழகத்தில் கணபதி வழிபாடு தொன்றுதொட்டு நிலவியதா அல்லது ஒரு கால கட்டத்தில் வேறு இடத்திலிருந்து தமிழகத்துக்கு வந்ததா என்பது பற்றி இன்றும் கருத்து வேறுபாடு இருந்து வருகிறது. ஆனால் பெரும்பாலான கருத்து இவ்வழிபாடு சாளுக்கிய நாட்டின் தலைநகரான வாதாபியிலிருந்து கிபி ஏழாம் நூற்றாண்டில் பல்லவப் பெரு வேந்தன் நரசிம்மவர்மன் காலத்தில் அவரது தளபதியான பரஞ்சோதி என்னும் சிறுத்தொண்டரால் கணபதி உருவத்தைக் கொணர்ந்து தமிழகத்தில் தொடங்கப்பட்டது என்பதாகும் என்று நடன்.காசிநாதன் குறிப்பிடுகிறார்.

**பிள்ளையார்பட்டி பிள்ளையாரும் கல்வெட்டும்:**

பிள்ளையார் பட்டியிலுள்ள குடைவரைக் கோயிலில் உள்ள பிள்ளையாரின் புடைப்புச் சிற்பமும், கல்வெட்டும் கிபி ஐந்தாம் நூற்றண்டு அல்லது ஆறாம் நூற்றாண்டைச் சேர்ந்தது என்று ஐ.மகாதேவன் குறிப்பிட்டுள்ளார். கல்வெட்டில்,

'எருகாட்டூரு
க்கோன்பெருந்தசன்'

எருக்காட்டூர்த் தாயங்கண்ணனார் என்ற சங்ககால புலவரின் பெயரலிருந்து எருக்காட்டூர் என்ற ஊர் சங்காலத்திலிருதே இருந்துள்ளதை அறியமுடிகிறது.ஆதலால் கி பி ஐந்து ஆறாம் நூற்றாண்டிலிருந்தே பிள்ளையார் வழிப்பாடு இருந்துள்ளது என்று நடன காசிநாதன் குறிப்பிடுகிறார்.

**திண்டிவனம் பிள்ளையார் கல்வெட்டு:**

விழுப்புரம் மாவட்டம், திண்டிவனம் வட்டம், ஆலகிராமத்தில் எமதண்டீஸ்வரர் கோயிலில் அரிய வட்டெழுத்து பொறிப்புகளுடன் கூடிய பிள்ளையார் சிற்பத்தில் உள்ள பீடத்தில் மூன்று வரிகளில் கல்வெட்டு உள்ளது. இது பொ.ஆ. 5 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது. (ஆவணம்:27)

**பிரமிறை பன்னூரு சேவிக- - - மகந்- - -கிழார் கோந்- கொடுவித்து**

குறிப்பு: இந்த பிள்ளையார் சிற்பமே தமிழகத்தில் உள்ள விநாயகர் சிற்பங்களில் முதன்மையானது என்பது பத்மஸ்ரீ இராவதம் மகாதேவன் அவர்களின் கருத்தாகும்.

**அயல்நாடுகளிலும் பிள்ளையார்:**

தமிழர்கள் கடல் கடந்து சென்று வியாபாரம் செய்யும் காலத்தில் தங்களின் வழித்துணையாக விநாயகர் உருவத்தை எடுத்துச் செல்வது வழக்கம். அவ்வாறு எடுத்துச்சென்ற விநாயகர் சிலைகளைக் கொண்டே அவர்கள் சென்ற நாடுகளில் கோயில் கட்டியுள்ளனர். இதனால் விநாயகர் வழிபாடு பரவலாக உலகம் முழுவதும் பல நாடுகளில் காணப்படுகிறது. மேலும் பிற்காலச் சோழர் காலத்தில் விநாயகர் வழிபாடு தென்கிழக்கு ஆசிய நாடுகளுக்கும் பரவியது. நேபாளம், தாய்லாந்து மற்றும் லாவோஸ் நாடுகள் வெளியிட்ட தபால் தலையில் விநாயகர் உருவம் உள்ளது. இஸ்லாமியர்கள் அதிகமாக வாழும் இந்தோனேசியா நாட்டின் ருபியா நோட்டில் விநாயகர் உருவம் அச்சிடப்பட்டுள்ளது. சங்ககாலம் முதல் தமிழர்கள் மியான்மாருடன் (பர்மா) வணிகத்தொடர்பு கொண்டிருந்தனர். மியான்மாரில் விநாயகரை மகாபைனி என்கிறார்கள். கி.பி.1800களில் தான் அதிக அளவில் தமிழ்நாட்டிலிருந்து கூலி வேலைக்காகவும் வணிகத்துக்காகவும் பர்மாவிற்குத் தமிழர்கள் அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர். பின்னர் பர்மாவில் கி.பி. 1860 இல் முதல் கோயில் சித்தி விநாயகர் கோயிலும் கட்டடப்பட்டது என்று அறிஞர்களின் கருத்தாகும்.

**புராணத்தில் பிள்ளையார் வரலாறு:**

கணபதியினுடைய தோற்றம் என்பது சிவன் தடத்த இலட்சண நிலையில் காட்சி கொடுக்கும் வடிவாமாகக் கருதப்படுகிறது. இந்நிலையில் புராணங்கள் ஒவ்வொரு சம்பாசனையின் ஊடாக தோற்றம் கூறப்படுகிறது. காஞ்சிப்புராணத்தில் திருக்கலையில் சிவனும் உமையும் "ஏழுகோடி மந்திரசாலா"என்னும் பூஞ்சோலைச் சித்திர மண்டபத்திற்குச் சென்றார். அங்கே ஒரு பிரணவம் பிரிந்து இறைவன் எழுத்தாகிய அகரம் களிறாகவும் அம்மை எழுத்தாகிய உகரம் பிடியாகவும்" ஆயிற்று. அவை இரண்டும் ஒன்றுகூடி விநாயகர் தோன்றினார் என்கிறது. விநாயகர் புராணத்தில் விபுதை மாகதர் என்னும் அசுரர்க்குப் பிறந்த கஜமுகாசுரன் ஆணவ அகந்தயைப் போக்கத் தேவர்களுக்கு வாழ்வு கொடுக்க தோன்றிய மூர்த்தி என்பர்.

சிவபுராணத்தில் உலக மாதாவாகிய உமாதேவி தாமும் ஒரு பிள்ளையைப் பெற்றுக் கொஞ்சிக் குலாவ வேண்டும் என எண்ணினார். மண்ணினால் உருச்சமைத்தார். அதனால் சிவன் அகமகிழ்ந்து தேவர்கள் அனைவரையும் வரவழைத்து மகிழ்வித்து இருக்கும் நிலையில் சனீஸ்வர பார்வையால் சிரசு ஒடிந்ததும் சிவன் களிற்றான் தலையினைப் பொருத்தி வேழமுகனாய் தோற்றுவித்தார். இதேபோல தேவி பராக்கிரகம் கணபால சிருஷ்டி என்று குறிப்பிட்ட பகுதியில் பார்வதிதேவி மஞ்சளிலே பிள்ளையாரைத் தோற்றுவித்து நீராட செல்லும் போது காவலனாய் இருத்திச் சென்றார் என்றும் கூறுவார்கள். பிள்ளையார் சிவசக்தியின் பிள்ளையே என்பதை பிடியதன் உருஉமை..." என்பதனூடாக சம்பந்தர் தெளிவுபடுத்துகிறார். இவ்வாறாக புராணங்களும் இலக்கியங்களும் பிள்ளையாரின் வரலாற்றை பதிவு செய்துள்ளன.

வாரணம் பன்னாட்டுச் சமய ஆய்விதழ் தொகுதி: 1 இதழ்: 1 மார்ச் 2025
VAARANAM INTERNATIONAL JOURNAL OF RELIGIOUS STUDIES | VOL: 1 ISSUE: 1 MARCH 2025
Published by Niththilam Publications | www.niththilampublications

VIJRS 2025

**விநாயகரின் தோற்றம்:**

தும்பிக்கையும் சேர்த்து உகரத்தின் தோற்றத்தைப் புலப்படுத்துகிறதல்லவா? உகரமானது இறைவனின் காத்தற் தொழிலை உணர்த்தும் என்ற கொள்கையின் அடிப்படையில் இவ்வடிவத்தைக் காக்கும் வடிவமாகக் கொண்டு சுகபோகங்களை விரும்பும் மக்களால் பெரிதும் விரும்பி வழிப்படப்படுகிறது. ஒரு செயலை துவங்கும் போது பிள்ளையார்சுழி எழுதி ஆரம்பிக்கும் வழக்கம் இங்கிருந்தே ஆரம்பித்திருக்கின்றது.



பிந்து புள்ளி வடிவம். இது சக்தி, நாதம் கோடு வடிவம். இது சிவம் .சக்தியும் சிவமும் இணைந்த வடிவமே பிள்ளையார் சுழி என்பர்.வினை நீகும்விநாயகன்,வருமுன் காப்பவன்,அவனே எழுத்துகட்கெல்லாம் தொடக்கமாக அமைகிறான்.பிள்ளையாரை வழிபட்டே செயலைத் தொடங்கவேண்டும். பிள்ளையார் சுழி போட்டு எழுதத் தொடங்கும் எழுத்துகள் நல்லனவாக அமையும். நிறைவானதாக அமையும் என்பதால் பிள்ளையார் சுழி போட்டு எழுதுவது மரபாயிற்று.

**பிள்ளையாரின் வடிவம்:**

விலங்காய்,மனிதராய்,பூதமாய்,தேவராய் இந்நான்கு படைப்புகளின் இணைந்த உருவமாய்ப் பிள்ளையார் தோன்றுகிறார். யானைத் தலையும், சுளகுச் செவியும்,தும்பிக்கையும் யானையாகிய விலங்கிடம் இருந்து பெற்றார். புருவ வடிவத்தையும் கண்களையும் மனிதரிடமிருந்து பெற்றார்.பேழை வயிற்றையும் குறுகிய கால்களையும் பூத கணத்தையும் பெற்றார்.நான்கு கைகளையும் தேவர்களிடம் இருந்து பெற்றார்.இதனைத்தான்,

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தின் இளம்பிறைபோலும் எயிற்றனை
நந்தி மகன்தனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின் றேனே.(திருமந்திரம்- பத்தாம்திருமுறை- விநாயகர் காப்பு)

என்று திருமூலர் விநாயகரின் வடிவததைப் பாடுகின்றார்.

**பிள்ளையாரின் திருவடிகள்:**

இறைவனின் திருவடிகளை அடைந்து பேரின்பப் பெருவாழ்வு பெறுவதே உயிர்களின் நோக்கம்.பிள்ளையாரின் திருவடிகள் ஞானமாக உள்ளன.

**பிள்ளையாரின் வயிறு:**

பிள்ளையாரின் வயிறு பெரும் வயிறு.பேழைப் போன்ற வயிறு.அந்த வயிற்றினுள் யாவுமே அடக்கம் என்பர். பரவெளி,அண்டங்கள்,உலகம்,உயிர்கள் அனைத்தும் பிள்ளையாரின் வயிற்றினுள் அடங்கியுள்ளன.அங்கு இங்கு எனாதபடி எங்கும் பரந்து வியாபித்து இருக்கும் தத்துவத்தையே பேழை வயிறு குறிக்கிறது.

**பிள்ளையாரின் ஐந்து கைகள்:**

பிள்ளையாருக்கு நான்கு கைகளுடன் தும்பிக்கையும் சேர்த்தால் ஐந்து கைகள்.ஒரு கையில் பாசமும்,ஒருகையில் அங்குசமும்,ஒரு கையில் அஞ்சேல் என்ற அபயமும்,ஒரு கையில் மோதகமும் உள்ளது.

**பிள்ளையாரின் 32 திரு உருவங்கள்:**

1. பால கணபதி, 2. தருண கணபதி, 3. பக்தி கணபதி, 4. வீர கணபதி, 5. சக்தி கணபதி, 6. துவிஜ கணபதி, 7. சித்தி கணபதி, 8. உச்சிஷ்ட கணபதி, 9. விக்ன கணபதி, 10. க்ஷிப்ர கணபதி, 11. ஹேரம்ப கணபதி, 12. லட்சுமி கணபதி, 13. மகா கணபதி, 14. விஜய கணபதி, 15. நிருத்த கணபதி, 16. ஊர்த்துவ கணபதி, 17. ஏகாட்சர கணபதி, 18. வர கணபதி, 19. த்ரயக்ஷர கணபதி, 20. சிப்ரப்ரசாத கணபதி, 21. ஹரித்ரா கணபதி, 22. ஏகதந்த கணபதி, 23. சிருஷ்டி கணபதி, 24. உத்தண்ட கணபதி, 25. ருணமோசன கணபதி, 26. துண்டி கணபதி, 27. துவிமுக கணபதி, 28. மும்முக கணபதி, 29. சிங்க கணபதி, 30. யோக கணபதி, 31. துர்க்கா கணபதி, 32. சங்கடஹர கணபதி.

**பால கணபதி:** நான்கு திருக்கரங்களும், யானை முகமும் உடையவர். உதிக்கின்ற செங்கதிர் ஒன்ற நிறம் உடையவர். குழந்தைத் திருமேனியினை உடையவர். வாழைப்பழம், மாம்பழம், பலாப்பழம், கரும்பு இவற்றை நான்கு திருக்கரங்களிலும் தாங்கியவர். இவரது துதிக்கையில் மோதகம் இருக்கும்.

**தருண கணபதி:** எட்டுத் திருக்கரங்களை உடையவர். யானை முகத்தை உடையவர்.கைகளில் பாசம், அங்குசம், பணியாரமாகிய மோதகம், விளாம்பழம், நாவற்பழம், ஒடிந்த தன் கொம்பினை உடையவர். நண்பகலில் தோன்றுகின்ற கதிரவனைப்போல சிவந்த மேனியினர்.

**ஸ்ரீ பக்தி கணபதி:** சரத்காலத்து நிறைமதி போன்ற வெண்ணிறம் படைத்தவராக, தேங்காய், மாம்பழம், வாழிப்பழம், பாயஸ பாத்திரம் இவற்றை நான்கு திருக்கரங்களில் ஏந்தி, யானை முகம் கொண்டவர்.

**வீர கணபதி:** வேதாளம், வேல், அம்பு, வில், சக்கரம், கத்தி, கேடகம், சம்மட்டி, கதை, அங்குசம், நாகம், பாசம், சூலம், குந்தாலி, மழு, கொடி ஆகிய பதினாறையும் தாங்கிய பதினாறு திருக்கரங்களுடையவர். சிவந்த திருமேனியினையும் ,வீரம் வாய்ந்த சினம் பொருந்திய திருமுகத்தையும் உடையவர்.

**சக்தி கணபதி:** செவ்வந்தி வானம் போன்ற நிறத்தையும், பச்சைநிற மேனியளாய தேவியைத் தழுவிக்கொண்டு இருப்பவர் .ஒருவர்க்கொருவர் இடுப்பில் கைகொடுத்துத் தழுவுக்கொண்டிருப்பது தனியழகு. பாசம் ,பூமாலை இவற்றைத் தாங்கிய திருக்கரத்துடன் அஞ்சலென்கிற அபயகரமும் உடையவர்.

**துவிஜ கணபதி;** நான்கு திருக்கரங்களிலும் முறையே புத்தகம், அட்சமாலை, தண்டம், கமண்டலம் இவற்றைத் தரித்தவர்.

**சித்தி கணபதி ;** மாம்பழம், பூங்கொத்து, கரும்புத் துண்டு, எள்ளுருண்டை, பரசு இவற்றைத் துதிக்கையில் வைத்திருப்பவனும், பொன் கலந்த பசுமை நிறமுடையவர்.

**உச்சிஷ்ட கணபதி ;** நீலோற்பலம், மாதுளம்பழம், வீணை, நெற்கதிர், அட்சமாலை இவற்றைத் தரித்தவரும் ,நீல நிறத் திருமேனி உடையவராக விளங்குபவர்.

**விக்ன கணபதி ;** சங்கு, கரும்பு வில், புஷ்ப பாணம், கோடரி, பாசம், சக்கரம், கொம்பு, மாலை, பூங்கொத்து, பாணம் முதலியவற்றோடு கூடிய திருக்கரங்களை உடையவர். ஆபரணங்களை நிரம்புத் தரித்தவரும், பொன்மேனியுடன் விளங்குபவருமாவார்.

**க்ஷிப்ர கணபதி:** தந்தம், கற்பகக்கொடி, பாசம், ரத்ன கும்பம், அங்குசம் இவற்றை ஏந்தியவர். செவ்வரத்தம் பூப்போன்ற அழகிய மேனியர். செந்நிறமுடைவர்.

**ஹேரம்ப கணபதி(ஏரம்ப கணபதி):** அபயம், வரதமாகிய கைகளை உடையவர். பாசம், தந்தம், அட்சமாலை, மாலை, பரசு, சம்மட்டி, மோதகம், பழம் இவற்றைத் தாங்கியவர். சிங்க வாகனத்தில் ஏறியவர். யானைமுகமுடையவர், பசுமை கலந்த கருமை நிறம் உடையவர்.

**லட்சுமி கணபதி:** லட்சுமி கணபதி என்பது விநாயகரின் 32 திருவுருவங்களில் ஒன்றாகும், லட்சுமி கணபதி விநாயகரின் முப்பத்து இரண்டு திருவுருவங்களில் 12 ஆவது திருவுருவம் ஆகும். இது லட்சுமி தேவியுடன் இணைந்ததாகக் காட்டப்படுகிறது. இந்த திருவுருவம் விநாயகரை வெண் மை நிறத்துடன், லட்சுமி தேவி நீலத் தாமரைப் பூவுடன் இரு கைகளில் ஏந்திய நிலையில் காட்டும். இவர் எட்டுக் கைகளுடன் கிளி, மாதுளம்பழம், கலசம், அங்குசம், பாசம், கற்பகக்கொடி, கட்கம், வரதம் போன்றவற்றை ஏந்திக் கொண்டு விளங்குகிறார்.

**மகா கணபதி:** மாதுளம்பழம், கதை, கரும்பு வில், சக்கரம், தாமரை, பாசம், நீலோத்பலம், நெற்கதிர், தந்தம், ரத்ன கலசம் இவற்றைத் தாங்கியவர். மூன்று கண்களையுடைய முக்கண்ணர். பிறை முடியர். மடிமீது எழுந்தருளியிருக்கிற தாமரையை ஏந்திய தேவியாற் சுவையோடு தழுவப் பெற்றவர்.

**விஜய கணபதி:** பாசம், அங்குசம்,தந்தம்,மாம்பழம் இவற்றைத் தரித்தவர். எலி வாகனத்தில் ஏறியிருப்பவர். செந்நிறமானவர்.

**நிருத்த கணபதி:** இவர் கூத்தாடும் பிள்ளையார்.மோதிரங்களணிந்த விரல்களையுடைய கைகளால் பாசம், அங்குசம், அபூபம்,கோடரி,தந்தம் இவற்றைத் தரித்தவர்.பொன்போன்ற நிறமுடைய திருமேனியர்.கற்பக விருட்சத்தினடியில் எழுந்தருளுபவர்.

***ஊர்த்துவ கணபதி:*** நீலப்பூ, நெற்பயிர், தாமரை, கரும்புவில், பாணம், தந்தம் ஆகியவற்றை உடையவர். பொன் வண்ணம் கொண்டவர்.பச்சை நிற மேனியுடைய தேவியைத் தழுவியிருப்பார்.

***ஏகாட்சர கணபதி:*** செந்நிறமானவர். செம்பட்டாடையர் ,செம்மலர் மாலையர், பிறை முடியர், முக்கண்ணர், குறுந்தாளர், குறுங்கையர், மாதுளம்பழம், பாசம், அங்குசம், வரதம் இவை தாங்கிய கரங்களையுடையவர். யானைமுகத்தையுடையவர். பதுமாசனத்திருப்பவர். எலி வாகனர்.

***வர கணபதி:*** செவ்வண்ணமுடைவர். யானை முகத்தை உடையவர். முக்கண்ணர். பாசம், அங்குசங்களைத் தரித்தவர். தேன்நிறைந்தமண்டையையுடைவர். பிறை முடியர்.

***த்ரயக்ஷர கணபதி:*** அசைகின்ற செவிகளில் சாமரையணிந்தவர். பொன்நிறத்தினர். நான்கு கரங்களை உடையவர். பாசம், அங்குசம், தந்தம், மாம்பழம் இவற்றைத் தாங்கியவர். துதிக்கையில் மோதகமுடையவர்.

***சிப்ரப்ரசாத கணபதி:*** பாசம் அங்குசம், கல்பலதை, மாதுளம்பழம், தாமரை, தருப்பை விஷ்டரம் இவற்றைத் தரித்தவர்.திருவாபரணங்களை அணிந்து பேழை வயிற்றை உடையவர்.

***ஹரித்ரா கணபதி:*** மஞ்சள் நிறத்தையுடைய நான்கு திருக்கரங்களுடன் விளங்குபவர். பாசம்,அங்குசம், தந்தம், மோதகம் இவற்றைத் தரித்திருப்பவர்.

***ஏகதந்த கணபதி:*** பேழை வயிறும், நீலமேனியும், கோடரி,அட்சமாலை,லட்டு,தந்தம் ஆகியவற்றை உடையவர்.

***சிருஷ்டி கணபதி:*** பாசம், அங்குசம், தந்தம், மாம்பழம் இவற்றைக் கரங்களில் தாங்கி எலி வாகனத்தில் சிவந்த மேனியுடன் விளங்குபவர்.

***உத்தண்ட கணபதி***: நீலம், தாமரை, மாதுளம்பழம், கதை, தந்தம், கரும்பு வில் , இரதன கலசம், பாசம், நெற்கதிர், மாலை இவற்றை தமது திருக்கரங்களில் ஏந்தியவர். அழகிய தாமரைப்பூவை ஏந்திய பச்சை மேனியாளாகிய தேவியைத் தழுவிக்கொண்டு அருள்பாலிப்பவர்.

***ருணமோசன கணபதி ;***பாசம், அங்குசம், தந்தம், நாவற்பழம் இவற்றைத் தாங்கிய கரங்களையுடைவர். வெண்பளிங்குபோன்ற மேனியர். செந்நிறப்பட்டாடை உடுத்தியவர்.

***துண்டி கணபதி:*** அட்சமாலை,கோடரி,இரத்னகலசம்,தந்தம் இவற்றை ஏந்தியவர்.

***துவிமுக கணபதி:*** தந்தம், பாசம், அங்குசம், இரத்னபாத்திரம் இவற்றைக் கையில் ஏந்தியவர்.பசுநீலமேனியர், செம்பட்டாடையும், இரத்தின கிரீடமும் அணிந்தவர். இருமுகமுடையவர்.

***மும்முக கணபதி:*** வலது கைகளில் கூரிய அங்குசம்,அட்சமாலை,வரதம் ஆகியவற்றை உடையவர். இடது திருக்கரங்களில் பாசம், அமுதகலசம்,அபயம் ஆகியவற்றை உடையவர்.பொற்றாமரை ஆசனத்தில் மூன்று முகங்களோடு எழுந்தருளியிருப்பவர். புரசம் பூப் போன்ற சிவந்த நிறம் உடையவர்.

***சிங்க கணபதி:*** *வீணை, கற்பகக்கொடி, சிங்கம், வரதம் ஆகியவற்றை வலது திருக்கரங்களிலும் ,தாமரை, இரத்னகலசம், பூங்கொத்து, அபயம் இவையமைந்த இடது திருக்கரங்களிலும் உடையவர். வெண்ணிறமான மேனியர், யானை முகத்தவர், சிங்க வாகனத்தில் வீற்றிருப்பவர்.*

***யோக கணபதி:*** *யோக நிலையில் யோகபட்டம் தரித்துக்கொண்டு, இளஞ்சூரியன் போன்ற நிறத்தோடு, இந்திரநீலம் போன்ற ஆடையை உடுத்திக்கொண்டு, பாசம், அட்சமாலை, யோகதண்டம், கரும்பு ஆகியவற்றை ஏந்தியவர்.*

***துர்க்கா கணபதி:*** *சுட்ட பசும்பொன்னிறம், எட்டுக்கை, பெரிய மேனி, அங்குசம், பாணம், அட்சமாலை, தந்தம் ஆகியவற்றை வலது திருக்கரத்திலேந்தியவர். பாசம், வில், கொடி, நாவற்பழம் இவற்றை இடது திருக்கரங்களில் ஏந்தியவர்.செந்நிற ஆடை உடுத்தியவர்.*

***சங்கடஹர கணபதி:*** *இளஞ்சூரியன் போன்ற நிறத்தினர். இடப்பாகத் தொடையில் பசும்மேனியுடைய நீலப்பூவை ஏந்திய அம்மையை உடையவர். வலது கையில் அங்குசம் ,வரதம் உடையவர். செந்தாமரைப் பீடத்தில் நின்ற கோலத்தில் நீலநிற ஆடையை அணிந்து காட்சி தருபவர்.*

***முடிவுரை:***



*இது காறும் பிள்ளையாரின் வரலாறும், திரு உருவம், 32 உருவங்கள் ஆகியவற்றைப் புராணங்களின் வழி கண்டோம். பிள்ளையார் வழிபாடு கிபி5 ஆம் நூற்றாண்டிலிருந்துதான் சிறப்புற்று விளங்கியிருப்பதையும் தொல்லியல் சான்றுகள் வழி அறிந்தோம். கோயிலுள்ள பிள்ளையார் சிற்பத்தில் உள்ள கல்வெட்டுகள் வழி பிள்ளையார் உருவ வழிபாடு குறித்து அறிந்து கொண்டோம்.*

***துணைநின்ற நூல்கள்: -****சிற்பச் செந்நூல் - வை.கணபதி ஸ்தபதி - ப: 275*

1. சங்கநூல்களில் முருகன் - பி.எல்.சாமி - ப: 47
2. கல்வெட்டு - அக்டோபர் - 2008 - திரு.தி.நா இராமச்சந்திரன் - ப:4
3. கல்வெட்டுக் காலாண்டிதழ்-45, நடன.காசிநாதன், தமிழ்நாசு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை
4. பிள்ளையார் வழிபாடு, காந்தளகம்,41, அஞ்சலகவீதி, 834 அண்ணாசாலை, சாவகச்சேரி, சென்னை-600002, பதிப்பு :1997
5. பிள்ளையார் புராணம், லேனா தமிழ்வாணன்,மணிமேகலைப் பிரசுரம், தபால்பெட்டி எண் 1447, 4, தணிகாசலம்சாலை, தியாகராய நகர், சென்னை-600 017, இரண்டாம் பதிப்பு 1994

**இணையதளங்கள்:**

1. https://en.wikipedia.org/wiki/Gardez_Ganesha
2. https://shreeganesh.com/site/about/829/32-forms-of-lord-shree-ganesh

**புகைப்படம் உதவி - இணையம் - நன்றி**

VIJRS 2025

# The Speciality of the Incarnation at Thiruppavai

***Dr.B.Dhananjayan***, *Head of Department and Associate Professor,Department of Tamil, Sir Thyagaraya College, Chennai. 21*

***Abstract:***

*The Tirupavai bestowed by Andal in the acts of the Alwars is the source of all the Vedas. Periyavachan Pillai, who is praised as the interpreter of this Tamil Tirupavai, has given a speech titled Muvaiyarapadi. In keeping with Andal's devotional experience, Periyavachan Pillai shows the excellence of the incarnations found in the Tirupavai verses to the world as a lamp placed on a hill. The essence of this Tirupavai is the Kalpa Vriksha that dispels the darkness of ignorance and bestows the divine knowledge of true knowledge. This article examines the excellence of the incarnations in Tirupavai.*

***Keywords***: *Thirupaavai, Andal, Avathaaram, Moovaayirampadi, periyavaachaanpillai*

***References;***

*[1]Thiruppavai moolamum uraiyum, sri vaishnava sri pathippagam, srirangam, trichy,1982*

*[2]Thiruppavai moovayirampadi urai,sri vaishnava sutharsanam, uraiyur, trichy.1970.*

# திருப்பாவையில் அவதாரச் சிறப்பு

**முனைவர் ப.தனஞ்செயன்,** *துறைத் தலைவர் மற்றும் இணைப் பேராசிரியர்,தமிழ்த் துறை, சர் தியாகராயா கல்லூரி, சென்னை. 21*

**ஆய்வுச்சுருக்கம்;**

*ஆழ்வார்கள் அருளிச் செயல்களில் ஆண்டாள் அருளிய திருப்பாவை வேதத்திற்கெல்லாம் வித்தாய் அமைகின்றது. இந்தக் கோதைத் தமிழானத் திருப்பாவைக்கு வியாக்கியான சக்கரவர்த்தி எனப் போற்றப்படும் பெரியவாச்சான் பிள்ளை மூவாயிரப்படி என்னும் தலைப்பிட்டு உரை வழங்கியுள்ளார். ஆண்டாளின் பக்தி அனுபவத்திற்கு ஏற்றார்போல் திருப்பாவை பாசுரங்களில் அமைந்துள்ள அவதாரங்களின் சிறப்பை பெரியவாச்சான்பிள்ளை குன்றின் மீது இட்ட விளக்காக உலகத்திற்குக் காட்டுகின்றார்.*

அஞ்ஞானம் என்னும் இருளைப் போக்கி மெய்ஞானம் என்கின்ற இறைஞானத்தை அருளும் கல்ப விருட்சமாக இத்திருப்பாவையின் சாரம் அமைகின்றது. இக்கட்டுரை திருப்பாவையில் உள்ள அவதாரச் சிறப்புகளை ஆராய்கின்றது.

***திறவுச் சொற்கள்:*** திருப்பாவை, ஆண்டாள், அவதாரம்,மூவாயிரப்படி,பெரியவாச்சான்பிள்ளை

***முன்னுரை:***

மார்கழித் திங்களில் திருப்பாவை பாசுரங்கள் நாள்தோறும் இசைக்கப்பட்டு பக்தர்களுடைய மனதில் பரவசத்தை ஏற்படுத்தும் வண்ணம் இறைவழிபாடிற்கு வித்திடுகின்றன. இத்தேனமுதப் பாசுரங்களில் அவதாரங்களின் சிறப்பு மனதில் நிற்கும் வண்ணம் பாவை எழிலாள் பாசுரமிட்டிருப்பது சிறப்பு. இயல்பாக மனிதனின் பிறப்பு என்பது கருமத்தினால் ஏற்படும். இதுவன்றி உலக உயிர்களை ஆட்கொள்ளும் பொருட்டு அருள் உள்ளம் கொண்டு மண்ணுலகில் பிறப்பெடுக்கும் நிலையை அவதாரம் என்பர். அவதாரங்கள் அனைத்தும் இறைவனுக்கு பெருமை தருவதனால் அவை வைணவத்தில் விபவங்கள் எனப் போற்றப்படுகின்றன. திருப்பாவையில் திருவிக்ரம அவதாரம் இராமவதாரம் பற்றிய பாடல்கள் வழி அந்தந்த அவதாரத்தின் பெருமையை அறிய முடிகின்றது. திருப்பாவையில் ஆண்டாள் வெளிப்படையாக கண்ணன் பெயரைக் கூறாவிடினும் அவனது அவதாரச் செயல்களைப் பல பாடல்களில் கூறியிருப்பதனை பெரியவாச்சான்பிள்ளை, தமது உரையில் கூறியுள்ளார். அதன்படி, கண்ணனுடைய பிறப்பு, இயல்பு, குணம், திருவிளையாடல்கள் எனப் பலவிதமான கருத்துக்களைப் பெரியவாச்சான்பிள்ளை எடுத்தியம்பியுள்ளதை அறியலாம்.

***உலகளந்த உத்தமன்:***

ஆண்டாள் தாம் பாடிய திருப்பாவையில் உலகளந்த உத்தமனைக் குறித்து மூன்று இடங்களில் குறிப்பிட்டுள்ளார்.

ஓங்கி உலகளந்த உத்தமன்
பேர் பாடி
நாங்கள் நம் பாவைக்கு சாற்றி
நீராடினால்
தீங்கின்றி நாடெல்லாம்
திங்கள் மும்மாரி பெய்து
ஓங்கு பெரும் செந்நெல்
ஊடுகயல் உகளப்

பூங்குவளை போதில்

பொறிவண்டு கண்படுப்ப.

தேங்காதே புக்கிருந்து தீர்த்த

முலைப் பற்றி

வாங்கக் குடம் நிறைக்கும்

வள்ளல் பெறும் பசுக்கள்

நீங்காத செல்வம் நிறைந்தேலோர் எம்பாவாய்

ஓங்கி உலகளந்த உத்தமன் என்ற தொடருக்கு பாற்கடலில் பையத்துயன்ற பரமன், மகாபலியின் துன்பம் பொறுக்கமாட்டாத இந்திரன் முதலான தேவர்களின் கூக்குரலுக்கு செவி சாய்த்து அழகிய வாமனனாய் வந்து சிறிய வடிவைக் காட்டி பெரியவனாகிய சிறுகாலைப் பெருகாலாலே நீட்டி உலகையெல்லாம் அளந்து அது காரணமாக உத்தமன் என்று பெயர் பெற்றான் என்பர் பெரியவாச்சான் பிள்ளை. அதாவது , தன்னை அழிய மாறியாகிலும் பிறர் வாழ வகை செய்பவன் உத்தமன். இந்நிலையில் மற்றவர்களுக்கு உதவி செய்ததாக நினைக்கை அன்றிக்கே எம்பெருமான் தன் பேறாக நினைத்திருக்கும் தன்மையனாக குறிப்பர். இதனால், எம்பெருமானின் திருநாமச் சிறப்பு சொல்லப்பட்டது.

அடுத்து, 'அம்பர மூடறுத்து ஓங்கி உலகளந்த உம்மர் கோமான்' என்ற இடத்தில் வேறு பயனைக் கருதுவதில் ஊற்றமுடைய இந்திரன் முதலான தேவர்களுக்காக ஆகாயம் உள்ளீடாக உள்ள எல்லா உலகையும் ஒருவரம்பின்றி ஊடறுத்து விம்ம வளர்ந்தான் வாமனன்; வளர்ந்ததோடல்லாமல் வரையாதே எல்லார் தலையிலும் திருவடிகளை வைத்து பூமியை அளந்து கொண்டான். இதனால் இன்னார் இனியர் என்ற வேறுபாடு தோன்றாது வேறு காரணமின்றியே இயற்கையான காத்தற் தன்மையை உடையவன் எம்பெருமான் என்பதை பெரியவாச்சான் பிள்ளை உரையில் காணமுடிகிறது; இதனால் எம்பெருமானுடைய காத்தற்தன்மைக்கு ஏற்ப வீரச்செயல் புரிந்ததைச் சொன்னபடி.

மேலும், ஆண்டாள் பிராட்டி 'அன்று இவ்வுலகம் அளந்தாய் அடி போற்றி' என்ற இடத்தில் காலம் கடந்த காட்சியின் அனுபவத்தை கூறுமுகமாக மகாபலி உலகையெல்லாம் தன்னுடையது என்று அபிமானித்தார் என்றும், இவ்வபிமானத்தை தவிர்த்து இப்பூமி தன்னுடையது என்று எம்பெருமான் மகாபலி இடத்திலிருந்து மீட்டு அன்று அவன் எல்லார் தலையிலும் திருவடிகளை வைத்து தூளி தானம் பண்ணினான் எனப்போற்றுவர். அடுத்து உரைக்கும் பெரியவாச்சான் பிள்ளை எம்பெருமான் உலகளந்த உத்தமனது திருவடியானது பெரிய பிராட்டியாருக்கும் பூமி பிராட்டியாருக்கும் பூ தொடுமா போலே கூசிப்பிடிக்கும் படியாக இருந்தது என்றும், அதத்திருவாடியாலே காட்டையும் அதில் உள்ள ஓடையையும் அன்று அளந்த அந்த ஆயாசம் தீர இன்று 'அடிபோற்றி' என்று பல்லாண்டு பாடுவதாக பெரியவாச்சான் பிள்ளை தம்

உரையில் பதிவு செய்துள்ளார். இதனால் எம்பெருமானுடைய வீரச்செயலுக்கு அன்று வாழ்த்துக் கூறாத குறை தீர இன்று அத்திருவடிகளுக்கு மங்களாசாசனம் செய்ததாகப் பிள்ளை உரைப்பர்.

**இராமன்:**

எம்பெருமான் ஸ்ரீமந் நாராயணன் எடுத்த அவதாரங்களில் இராமவதாரம் முக்கியமானதாகும். இந்த இராமவதாரத்தைப் பற்றி மூன்று பாடல்களில் ஆண்டாள் பாடியுள்ளார்.

**மனத்துக்கினியான்:**

'கனைத்திளங் கற்றெருமை' என்னும் பாடலில் கண்ணனைப் பிரியாமல் இலக்குவனைப் போலே இருக்கிறவனுடைய தங்கையை எழுப்புகிறாள் ஆண்டாள். இப்பாடலில் உள்ளே இருக்கின்ற பெண்மணி பேசாமலே இருந்ததால் சினத்தினால் தென்னிலங்கைக் கோமானைச் சென்ற மனத்துகினியானை என்று பாசரமிடுகிறாள். இதனால் இராமனுடைய கருணை உள்ளமும் மனத்துக்கினிமையும் தருபவனாக இருக்கும் தன்மையும் சொன்னபடி. சினத்தினால் என்பதனால் குளிர்ச்சியாக இருக்கிற இரா கண்மனுக்கும் கோபம் வருவதற்கு காரணம் யாதெனில் அடியார்களுடைய பகைவர்கள் இவருக்கும் பகைவர்கள் ஆவர் என்று சொன்னபடி. எடுத்துக்காட்டாக தன் நண்பனான சுக்ரீவனுக்கு சீற்றம் பிறந்த போது வாலியை கொன்றார்; சுக்ரீவன் அழுதபோது இராமனும் அழுதார் என்று கூறவே இராமனுடைய கருணை உள்ளம் அறியமுடிகிறது. அதே சமயத்தில் மனத்துக்கினியானை என்பதினால் பெண்களை படுகு அடிக்கும் கண்ணனை போல் இன்றிக்கு ராமன் ஒரு மனைவியை உடையவன் என்றும் பெண்களை துன்புறுத்தி பின்னர் இரக்கமில்லாமல் இருக்கும் கண்ணனைப் போல் இன்றைக்கே பகைவர்களையும் அழியச் செய்யும் தன்மையுடையவன் ராமன் என்றும் பெரியவாச்சான் பிள்ளை குறிப்பிட்டுள்ளது நோக்கத்தக்கதாகும்.

'புள்ளின் வாய் கீண்டானை' என்ற பாடலில் கண்ணழகு படைத்த பெண்ணை எழுப்பும்போது 'பொல்லா அரக்கனைக் கிள்ளிக்கலைந்தானைக் கீர்த்திமை' என்று இராமனுடைய வீர சரிதத்தைக் காட்டி ஆண்டாள் பாசுரமிடுகிறாள். இவ்விடத்தில் இராவணனுடைய தங்கையான சூர்ப்பனகை வாயால் விபீஷணனை நல்ல அரக்கன் என்றும், இராவணன் பொல்லா அரக்கன் என்றும் சொன்னதற்கு ஏற்ப தோட்டத்தில் புழுக்கள் இருக்கின்ற இலையை கிள்ளி போகட்டுமா போலே இராவணனுடைய தலைகளை இராமன் துணித்ததை அவனுடைய வீர செயலுக்குச் சேர உரைப்பர். அதே சமயத்தில் கீர்த்திமை என்ற சொல்லுக்கு ஏற்ப எதிரிகளுக்கும் நெஞ்சு பயத்தினை உண்டு பண்ணும் படியான வீர சரிதத்தை உடையவன் என்றும் உகவாதிருக்கும் விடாவொண்ணாத வீரம் படைத்தவன் இராமன் என்றும் இராவணன் இராமன் வீரத்துக்கு இலக்கானான்; தங்கை சூர்ப்பனகை இராமன் அழகிலே கண்கலங்கினாள்; தம்பியான

விபீஷணன் குணத்துக்கு இலக்கானான்; என்று இராமனுடைய வீரம் அழகு குணம் ஆகியவற்றை முறையே பிள்ளை அழகாக எடுத்துரைப்பது காணமுடிகிறது.

மேலும், வீரத்தைப் பற்றிச் சொல்லும்போது அன்று இராமனுடைய மிடுக்குக்குப் பல்லாண்டு பாடாத குறைதீர 'சென்றங்குத் தென்னிலங்கை செற்றாய் திறல் போற்றி' என்று பாசரமிடுகிறாள், இந்த இடத்தில் தென்னிலங்கை செற்றாய் என்ற பொழுது இலங்கைக்குச் செல்லுகை நிச்சமாய் இருக்க அங்கு சென்று புலி கிடந்த புதரிலே செல்லுமா போலே பிராட்டியைப் பிரித்த இராவணன் இருந்த இடத்திற்கு இராமன் சென்றான் என்பதை வியப்புத் தோன்ற சொல்லுவது அறியற்பாலதாகும், மேலும் சென்று என்பதினால் வழிப்போக்கிலே கபந்தன் விராதன் முதலானவர்களை அழியச்செய்ததைச் சொன்னபடி.

**பலராமன்:**

பலராமன் அவதாரத்தை பற்றி திருப்பாவையில் ஒரே ஒரு இடத்தில் வந்துள்ளதை அறியலாம், 'அம்பரமே தண்ணீரே' என்ற பாடலில் நந்தகோபன் நப்பின்னை யசோதை இவர்களை எழுப்பி கண்ணனை எழுப்புவதற்கு முற்பட்டு அவன் உலகளந்த வீரச் செயலைச் சொல்லி எழுந்திராமையால் முந்துற நம்பி மூத்தபிரான் என்று கண்ணனுடைய அண்ணனான பலராமனை எழுப்பாமல் முறைகேடாக செய்தோம் என்ற எண்ணி செம்பொற்கழலடிச் செல்வா பலதேவா என்று பலராமரை எழுப்பு பாசுரம் இடுகிறாள் ஆண்டாள். இவ்விடத்தில் பிள்ளை பிறக்கைக்கு பொற்கால் பொழியப்பிறந்த சீமானே என்று பலராமனை விளித்து உரையிடுவர். அதாவது கண்ணன் பிறப்பதற்கு விரும்பத்தக்க சந்ததியின் உயர்த்தியிலே பிறந்த சீமான் என்றபடி. அப்படிப்பட்ட பலராமன் மூலமாக கண்ணனை பெற உம்பியும் நீயும் உறங்கேல் என்று பலராமனுக்கு அடங்கியவனான கண்ணனையும் கண்ணனுக்கு அடங்கியவனான ளபலராமனையும் உறங்காது இருக்கச் சொல்கின்றனர்.

**கண்ணன்:**

இறைவன் தோன்றிய அவதாரங்களில் கிருஷ்ணவதாரம் முழுமை பெற்றதாகும். பெரியாழ்வாருடைய திருமகளான ஆண்டாளும் இறைபக்தி மிகுதியாலே ஆய்ப்பாடியிலே கண்ணனும் பெண்களுமாய் திருக்குரவை கோத்த நிகழ்ச்சியை அனுகரித்து தாம் பிறந்த திருவல்லிபுத்தூரே ஆய்பாண்டியாகவும் அங்குள்ள பெண்கள் இடைப் பெண்களாகவும் ஆண்டாளும் அவர்களுள்ஒருத்தியாகவும் வடபெருங்கோயில் நந்தகோபர் திருமாலியாகவும் உள்ளே நிற்கிறவன் கண்ணனாகவும் நினைத்து ஆண்டாளுடைய உள்ளடங்கா பக்தி முற்றி இடையர்களுடைய நடையும் இடையர்களுடைய தலைமுடியும் இடையர்களுடைய பேச்சும் ஆண்டாளுக்கு இயல்பாக அமைந்திருந்ததை பிள்ளை உரைமூலமாகக் காட்டவே ஆண்டாளுடைய ஆராத கண்ணனிடம் உள்ள பக்தி அறியமுடிகிறது.

ஆகவே கண்ணனுடைய பிறப்பு தொடக்கமாக வீரச்செயல்கள் செய்ததனையும் சுட்டப்பட்டிருப்பதை அறியலாம் . அவையாவன கண்ணன் பிறப்பு, பேய்முலை உண்டது, சகடத்தை முறித்தது, கபிதாசுரனைக் கொன்றது, பகாசுரனைக் கொன்றது, மலையை குடையாகப் பிடித்தது, கேசியை கொன்றது, குவலாயப்பீடத்தைக் கொன்றது, நப்பின்னையின் உறவு என இவற்றை சொல்லலாம்.

**கண்ணன் பிறப்பு:**

ஆண்டாள் அருளிய திருப்பாவையில் கண்ணனுடைய பெயர் நேராக இடம் பெறவில்லை. ஏனெனில் ஆண்டாள் அனுகரித்தது கிருஷ்ணாவதார நிகழ்ச்சிகளாகையாலே கண்ணன் பெயரை கூறிவிட்டால் கம்சன் காதுக்கு எட்டிவிடும் என்று பெயர் காட்டாமையே கண்ணனுடைய பிறப்பு, செயல் இவைகள் மூலமாக ஆண்டாள் வெளிப்படுத்துகிறாள் என்று பெரியோர் பணிப்பர். இப்படிப்பட்ட இடங்களை எல்லாம் பெரியவாச்சான் பிள்ளை விளக்கி நிலை நாட்டுவது குறித்த ஒன்றாக அமையும். ஆண்டாள் கண்ணனுக்கு கொடுந்தொழிலன் நந்தகோபன் குமரன் என்று பெயரிடுகின்றாள் இதற்கு உரையிட்ட பிள்ளை கண்ணன் பிறப்பதற்கு முன்பு நந்தகோப்பனுடைய பசும்புல் சாவாமிதியாத கருணையும் கண்ணன் பிறந்த பின்பு அவன் மேல் உண்டான அன்பினாலே அவனுக்கு தீங்கொன்றும் வாராமல் இருக்க வேலினை ஒளி வீசும் படியாக தீட்டி பிடித்துக் கொண்டிருந்ததாகவும் உரைப்பார். அப்படிப்பட்ட நந்தகோபன் முன் மற்றவர்கள் வந்து முறையிட்டாலும் கண்ணன் விநையம் தோற்ற இருப்பதினாலே குமரன் என்று பெயர் வழங்கியதை காட்டுவர். இப்படி நந்தகோபன் நன்மையை செய்பவர் என்று கண்ணன் அங்கு விநயம் தோற்ற நின்றபடி சொல்லி 'யசோதை இளஞ்சிங்கம்' என்று யசோதையானவள் பிரியமாக நடத்துபவள் ஆகையாலே கண்ணனானவன் செருக்கு நிறைந்த தோற்றம் இருப்பதை எண்ணி இளஞ்சிங்கம் என்று சொல் அமைந்ததை காணலாம். அதுமட்டுமின்றி சிறுமியருக்கு ஒத்த பருவமாக இருக்கையாலே இளஞ்சிங்கம் என்றபடி இதுபற்றியே பட்டரும் சிங்கக்குருகு என்று அழைத்ததாக கூறுவர்.

கண்ணன் பிறப்பும் வளர்ப்பும் வியப்பானது. இது பற்றியே ஆண்டாளும் ஒருத்தி மகனாய் பிறந்து ஓர் இரவில் ஒருத்தி மகனாய் ஒளித்துவளர என்கிறாள். கண்ணனை பெற்றெடுத்த தேவகியானவள் எல்லா உலகங்களையும் நியமிப்பவனையும் கூட நியமிக்குமவளாகியும் நாட்டில் தனக்கு ஒப்பற்று இருக்கும் அவள் என்பதற்குச் சேர ஒருத்தி என்று தேவகியை குறிப்பிட்டதை காட்டி உரைப்பர் பெரியவாச்சான் பிள்ளை, அதே சமயத்தில் எல்லா உலகங்களுக்கும் தந்தையானவன் ஒருத்தி மகனாவது என்று வியப்புத்தோற்ற ஒருத்தி மகனாய் என்றதாக உரைப்பர். அவ்வாறே ஒருத்தி மகனாய் ஒளித்து வளர என்ற தொடருக்கு ஏற்ப ஒருத்தியான யசோதையைச் சொல்லும்பொழுது இவனை மகனாகப் பெற வேண்டும் என்று தேவகிக்கு அவதார சுவையைக் கொடுத்தான் என்றும் யசோதைக்கு லீலா சுவையை அனுபவிப்பித்தான் என்றும் உரைப்பர்.

கண்ணன் ஆயர் குலத்தினில் பிறந்தான். இதுபற்றிய ஆண்டாளும் பெற்றம் மேய்த்து உண்ணும் குலத்தில் பிறந்து நீ என்று பாசரமிடுகிறாள். அதாவது பசுக்கள் மேய்த்து உண்ணக் கடவதான இடைச் சாதியிலே வந்து பிறந்ததால் எளியவன் என்றும், காக்க வேண்டிய பசுக்கள் வயிறு நிறைந்தால் அல்லது தாங்கள் உண்ணாத குலத்தில் பிறந்ததால் காப்பாளன் என்றும், கண்ணனாய் பிறந்த பிறவியின் சிறப்பினை எடுத்துரைப்பர்.

கண்ணனுடைய தீம்புக்கு பயந்து அவனை கண்ணிநுண் சிறுத்தாம்பினால் கட்டுகிறாள் யசோதை. அதனால் கண்ணன் வயிற்றில் தழும்பு ஏற்படுகிறது. இதுபற்றியே ஆண்டாளும் தாயைக் குடல் விளக்கம் செய்த தாமோதரன் என்று பெயரிடுகிறாள். இதற்கு வயிற்றில் தழும்பாலே யசோதைப் பிராட்டியை விளங்கப் பண்ணினவன் என்று பிள்ளை உரையிடுவது நோக்கத்தக்கதாகும். அதே சமயத்தில் கண்ணன் யசோதையிடும் அடங்கியிருப்பதாலும் அவனை நாட்டார் கொண்டாடும்படி பண்ணினவன் என்ற பெயருக்குச்சேர தாமோதரன் என்று பெயர் சூட்டியதையும் உரைப்பர் பிள்ளை.

**பேய்முலை உண்டது:**

கம்சனால் ஏவப்பட்ட பூதனையை கண்ணன் முடித்தான். இச்செயலை கருத்தில் கொண்டு ஆண்டாள் பேய்முலை நஞ்சுண்டு என்று பாசமிடுகிறாள். இதற்குப் பெற்ற தாயும் உதவாத தனிமையிலே பாதிக்க வந்த பூதனையை முடித்து கண்ணனை முடிக்க வந்தவள் தன்னோடே போகும்படி பண்ணி என்று உரையிடுகின்றார் பெரியவாச்சான் பிள்ளை.

**சகடத்தை முறித்தது:**

யசோதை வண்டியின் பக்கத்தில் கண்ணனை விட்டு வைக்கிறாள். அந்தவகையில் கண்ணனுக்கு காப்பு என்று நினைத்தாள். ஆனால் அந்த வண்டியில் அசுரன் ஆவேசத்தோடு கண்ணனுக்கு அபாயத்தை செய்ய எண்ணினான் அத்தகைய வண்டியின் கட்டுக்கோப்பு குலையும் படி குழந்தையான கண்ணன் திருவடிகளை வீசினான். மூரி நிமித்த திருவடிகள் பட்டு அந்த வண்டியானது முறிந்தது. இது பற்றியே ஆண்டாள் கள்ளச்சகடம் கலக்கழியக் காலோச்சி என்று குறிப்பிடுவதனை அறியலாம். இப்படி தாயும் உதவாத நிலையிலே முயலாமல் திருவடிகளாலே சகடாசுரனை அழித்த புகழைச் சொல்லும் வகையில் பொன்றச்சகடம் உதைத்தாய் புகழ் போற்றி என்று ஆண்டாள் அருளியதாக உரைப்பர் பெரியவற்றான் பிள்ளை.

**கபிதாசுரனைக் கொன்றது:**

கம்சனால் ஏவப்பட்ட ஒரு அசுரன் விளாங்கனியாய் இருந்தான். மற்றொரு அசுரன் கன்றாய் நின்றான். கன்றாய் நின்ற அசுரனை எறிதடியாகக் கொண்டு விளாங்கனியாய் இருந்த அசுரன் மீது எறிந்தான்

கண்ணன். அவ்வாறு எறிந்தபோது ஒருகால் மடக்கி நின்றதைப் போற்றும் வகையில் கன்று குணிலா எறிந்தாய் கழல் போற்றி என்று பாசுரமிடுகிறாள். எனவே குஞ்சித்த திருவடிகளுக்குத் திருப்பல்லாண்டு பாடுகிறார்கள் என்று உரை வழங்கியது குறிப்பிடத்தக்கதாகும்.

**பகாசுரனைக் கொன்றது:**

கண்ணழகு படைத்த ஒரு தோழியை எழுப்பும் வகையில் கண்ணனின் வீரச் செயல்களைச் சொல்லி எழுப்புகிறாள் ஆண்டாள். அப்பொழுது மேய்கிற கொக்கிலே ஒரு அசுரன் ஆவேசித்தான்.. இதனை அறிந்த கண்ணன் பறவை உருகொண்டு வந்த பகாசுரனுடைய வாயை பிளந்தான் . இதுபற்றியே புள்ளின் வாய் கீண்டானை என்று பாசுரமிடுகின்றாள் ஆண்டாள்.

**மலையைத் குடையாகப் பிடித்தது:**

இந்திரன் செய்த செயலுக்காக கண்ணன் மலையை குடையாக எடுத்து பசுக்களுக்கும் இடையர்களுக்கும் வந்து ஆபத்தை போக்கினான். மலையை எடுத்துக் கொண்டு நின்ற கண்ணனுடைய கருணை என்னும் குணத்திற்குச் சேர குன்று குடையாய் எடுத்தாய் குணம் போற்றி என்று பாசரமிடுகிறாள்.

**கேசியைக் கொன்றது:**

எல்லோரும் வந்து அழைக்கும்படி கண்ணனாலே விரும்பப்படுகின்ற ஒருத்தியை எழுப்பும்போது அவனுடைய வீரச் சரிதங்களைச் சொல்லுகிறாள். கம்சனால் ஏவப்பட்ட குதிரையை இடச்சிகளுக்கு உதவுவதற்காக அதனுடைய வாயைப் பிளந்தான். எனவே மாவாய் பிளந்தானை என்பதற்கு விளக்கமாக நமக்காக கேசி என்ற குதிரையைப் பிளந்து நம்மையும் தன்னையும் உண்டாக்கி தந்தவன் என்பர் பிள்ளை.

**குவலாயாபீடத்தைக் கொன்றது:**

கண்ணனை நலிவதற்காக வலிமைமிக்க உலகக்கெல்லாம் அலங்காரமான குவலாயா பீடம் என்னும் யானையை வாசலில் நிறுத்தி வைத்தான் கம்சன். அதனைக் கொன்று தன் வலிமையைக் காட்டினான் கண்ணன் . அத்தகைய கண்ணனுக்குத் தோற்று வல்லானை கொன்றானை என்று பாட அழைக்கின்றாள் ஆண்டாள்.

**மல்லரைக் கொன்றது:**

முரடனான சாணூரனோடு போர் புரிய கண்ணன் வருகிறான். கண்ணன் அவர்களைக் கொன்று பெண்களுக்கு உதவினான். பெரிய மேன்மை உடையவராய் இருக்கிறவன் இவ்வாறு சாணூர முஷ்டிகளை அழியச்செய்து அரண்மனையில் பெண் பிள்ளைகளோடு உண்டான பழக்கத்தாலே பெரிய நாகரீகம்

படைத்தவனானான் கண்ணன். இதுபற்றியே ஆண்டாளும் மல்லரை மாட்டிய தேவாதி தேவன் என்று பாசரமிடுகிறாள்.

**கம்சனைக் கொன்றது:**

கண்ணன் ஆய்ப்பாடியில் மறைந்து வளர்வதை கேட்ட கம்சன் தரிக்க மாட்டாதிருந்தான். பயந்து, பரிந்து வாழ்த்த வேண்டிய இறைவனாகிய கண்ணனிடத்திலே தீமையை நினைத்தான். இதுபற்றியே ஆண்டாள் தான் தீங்கு நினைத்த என்று பாசரமிடுகிறாள். இதில் தான் என்பதற்கு கம்சனை கொடியவன் என்று கூறுவர் பிள்ளை. அதாவது அசுரத்தன்னை உடையவன் என்றபடி. மேலும் அவன் நிலையற்றவன் என்பதற்குச் சேர மேல் நொடியிலே படப்புகுகிற பாடறியாத தான் என்றும் உரைப்பர். மேலும் கம்சனுடைய தீய நினைவை அவன் தன்னோடே போகும்படி பண்ணினான் கண்ணன் என்பதற்குச்சேர கருத்தைப் பிழைப்பித்து என்கிறான் ஆண்டாள். கம்சன் வெகுகாலமாக சேர்த்து வைத்த பாவங்களனைத்தையும் கண்ணனைக் கண்ட காட்சியிலே அனுபவித்து முடியும்படி நின்றவன் என்றும், தேவகி வசுதேவர்கள் வயிற்றில் நெருப்பை கம்சன் வயிற்றில் கொளுத்தினவன் கண்ணன் என்றும் கூறுவர். இப்படி அடியார் பக்கல் அதிகமான ஆசையாலே கண்ணன் செய்ததை நினைத்து ஆண்டாள் நெடுமாலே என்கிறாள்.

**நப்பின்மையின் உறவு:**

நப்பின்னை என்பவள் ஆய்ப்பாடியிலே கும்பனுடைய மகள். கும்பன் வைத்த பந்தயத்தில் ஏழு எருதுகளை வென்று நப்பின்னையை மணந்தான் கண்ணன் . அவள் புருசகாரமாக கண்ணனைப் பற்றுவது முறையாகும் . அந்த நப்பின்னையானவள் நந்தகோபனுடைய மருமகளாவாள் . ஆண்டாள் உள்ளிட்ட ஆய்ச்சியர்கள் நந்தகோபாலன் மருமகளே நப்பின்னாய் என்று நப்பின்னையை மருமகளாக அழைப்பதில் ஆசையுடையவர்கள் . அந்த நப்பின்னையினுடைய திருக்குழலோ பரிமளம் தான் வாசனை பொரும்படியாக இருப்பது பற்றி கந்தம் கமழும் குழலி என்கிறாள் . அது மட்டுமின்றி அவளுடைய திருக்குழலானது எல்லா வாசனைகளும் நிறையப்பெற்ற இறைவனான கண்ணனுக்கு கொடுக்கும்படி பரிமளம் மிக்கிருப்பதாக உரைப்பார் பிள்ளை. பந்தார் விரலீ என்பதற்குச் சேர நப்பின்னையானவள் கண்ணனோடு பந்தடித்து அவனை தோர்ப்பித்து அவனை ஒரு கையில் பந்தை ஒரு கையில் அனைத்து கொண்டு கிடப்பதாக உரைப்பர். கண்ணன் நப்பின்னைக்கு அனுபவிக்கும் கருவி என்றும், பந்து அவளுக்கு விளையாட்டுக் கருவி என்றும், அவள் ஒரு கையில் நாரமாகிய பந்தையும் ஒரு கையில் நாராயணன் ஆகிய இறைவனையும் வைத்திருக்கிறாள் என்றும் உரைப்பது குறிப்பிடத்தக்கதாகும். இது தன்னையே ஒரு கையில் விபூதியாய்த்து, ஒரு கையிலே விபூதி மானாய்த்து என்று உரைப்பர். அவள் கையோ செந்தாமரைக் கை என்பதற்கு ஏற்ப கண்ணனும் ஆசைப்படும் கையாகும்.அவள் முன் கையில் வளை கழலாதிருக்கும் .

இங்ஙனம் நப்பின்னையினுடைய தன்மைகளை குத்து விளக்கெரிய, முப்பத்து மூவர் ஆகிய பாடல்களில் குறிப்பிட்டது அறியத்தக்கதாகும்.

**கண்ணனின் பண்பு நலன்களைக் காட்டல்:**

கிருஷ்ணாவதாரத்தில் கண்ணனும் ஆய்ச்சியரும் சேர்ந்து நோன்பு நோற்பதின் அடிப்படையில் ஆண்டாளும் அதனை அப்படியே அனுகரித்து திருப்பாவை பாடுகிறாள். இத்திருப்பாவையில் கண்ணனுடையப் பெயரை நேராக ஆண்டாள் சூட்ட வில்லையாயினும் அவன் செய்த தொழில்களின் அடிப்படையில் அமைந்த பெயர்கள் பல பல. முக்கியமாக கண்ணனுடைய எளிவந்த தன்மையை எடுத்துக்காட்டு வகையில் பாடல்களில் உள்ள சொற்களுக்கு உரை வழங்கியுள்ளார் பெரியவாச்சான் பிள்ளை. அவை பின்வருமாறு மாயன் என்ற சொல் அடிப்படையில் ஆய்ப்பாடிக்கு தன்னைக் கொடுத்து நேர்மையைச் சொன்னபடி. வையத்து வாழ்வீர்கள் என்ற சொல் அடிப்படையில் இங்கு வாழ்ச்சிக்கு பரமபதமும் ஒப்பில்லை என்றுச் சொல்லி அங்கு மேன்மை குணத்தைதான் காணலாம். ஆனால் இங்கு கண்ணனின் நீர்மைக் குணத்தைக் கண்டு அனுபவிக்கலாம். பெரும் பசுக்கள் என்ற சொல் அடிப்படையில் புல்லும் தண்ணீரும் இட்டு வளர்த்தவையன்றிக்கே என்று கண்ணனுடைய தொடுதலாலே பசுக்கள் வளமாக இருக்கும். இதனால் கண்ணனுடைய நீர்மைச் சொல் சொல்லப்பட்டது .சீர்மல்கும் ஆய்ப்பாடி என்ற சொல் அடிப்படையில் கண்ணனுடைய நீர்மை பரமபதிலும் சென்று அலை எறிக்கும்படி இருக்கும். கற்றக் கறவை என்ற சொல் அடிப்படையில் பரமபதத்தில் நித்யசூரிகள் இறைவனுடைய சம்பந்தத்தாலே 25 வயது உடையவர்களாவர். அதுபோல ஆய்ப்பாடியில் பசுக்களுடைய வயது கண்ணனுடைய சம்பந்தத்தாலே கீழ்நோக்கி போகும் . இதனால் கண்ணனுடைய நீர்மை சொல்லப்பட்டது . நந்தகோப்பனுடைய கோயில் என்ற சொல் அடிப்படையில் அடியார்கள் இட்ட வழக்காய் அவர்களைத் தலைவராக வைத்து அவர்களோடு கலந்து பரிமாற இங்கு வந்த அவதரித்தான் என்று நீர்மைச் சொல்லப்பட்டது. மணிவண்ணன் என்ற சொல் அடிப்படையில் தாழா நில்லாவிடினும் விடவொண்ணாத வடிவழகு என்று கண்ணனுடைய எளிவந்த தன்மையை உரைப்பர். மாலே என்ற சொல் அடிப்படையில் சரம சுலோகத்தில் மாம் என்ற சொல்லுக்கு உரிய குணங்களில் எளிவந்த தன்மையைச் சௌலப்பியத்தை சொல்கிறார். இதனால் கண்ணனுடைய எளிவந்த தன்மை சொன்னபடி.மேலும், ஆய்ச்சியர்கள் மகாபாரதத்திற்கு உள்ளீடான மையல் குணத்தையும் இவர்கள் நிலைநாட்டியதைச் சொன்னபடி.கோவிந்தா என்ற சொல் அடிப்படையில் ஆய்ச்சியர்கள் விட்டுச் செல்லாமையாலே ஆய்ப்பாடியில் வந்து அவதரித்து ஆய்ச்சியர்களுக்கு கையாளாய் இருந்த நீர்மைச் சொன்னபடி.

வாரணம் பன்னாட்டுச் சமய ஆய்விதழ் தொகுதி: 1 இதழ்: 1 மார்ச் 2025
VAARANAM INTERNATIONAL JOURNAL OF RELIGIOUS STUDIES | VOL: 1 ISSUE: 1 MARCH 2025
Published by Niththilam Publications | www.niththilampublications

இங்ஙனம், திருப்பாவையில் ஆண்டாள் நாச்சியார் திருவாய் மலர்ந்தருளிய பாசுரங்களில் அவதாரங்களின் சிறப்பினை பெரியவாச்சான்பிள்ளை, தமது உரையில் செவ்வனே எடுத்தியம்பியுள்ளார்.

**பயன்பட்ட நூல்கள்:**

1. 'திருப்பாவை மூலமும் உரையும்', ஸ்ரீவைஷ்ணவ ஸ்ரீ பதிப்பகம், ஸ்ரீரங்கம், திருச்சி. 1982

2. திருப்பாவை = மூவாயிரம் படி உரை, ஸ்ரீ வைஷ்ணவ சுதர்சனம், உறையூர்,திருச்சி . 1970

# *Fakirs and the rituals of dargah worship*

***Dr S. Inqulab**, Assistant professor, Department of Tamil, The Quaide Milleth College for Men, Medavakkam, Chennai -600 100*

***Abstract***

*In Islam, the Faqirs, who are called musicians, live with individual identities. They come begging for alms wearing a turban, a 'jolnara' bag on their shoulders, and a small drum called a tahira in their hands, playing and singing songs. In areas where Muslims live in large numbers, especially the devotees called dargahs, have established their dwelling places around the burial sites of their devotees. Dargahs are the places of worship of the Faqirs, who are called by various names such as religious mendicants and spiritualists. A person starts his life as a Faqir, enters the spiritual path and lives in the dargah until the end. About fifty years ago, dargah worship was accepted by most Muslims. Therefore, the Faqirs considered the dargah as a suitable place for their income and worship. The Faqirs who lead a spiritual life follow various rituals. Especially in 'santhanakoodu' festivals held to commemorate the saints buried in dargahs, people of other religions also participate in the rituals followed. The breaking of coconuts, carrying flowers, fruits, etc., which are followed in temple worship, are also included in dargah worship. It is necessary to understand the difference between a mosque and a dargah, which are the places of worship of most Muslims. Therefore, this article aims to explain the Faqirs, the organization of dargahs, the dargah worship methods, and the social and religious harmony embodied in them.*

***Keywords:***

*Definition of the word "Faqir", Islamic pilgrims, Explanation of Dargah, Dargah structure, Mosque-Dargah: Differences, Dargah worship methods, Alternative views on Dargah worship.*

# பக்கீர்களும் தர்கா வழிபாட்டுச் சடங்குகளும்

முனைவர் சா.இன்குலாப், உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை,காயிதே மில்லத் ஆடவர் கல்லூரி, மேடவாக்கம், சென்னை -600 100

**ஆய்வுச் சுருக்கம்**

இஸ்லாமிய மார்க்கத்தில் இசைப் பாணர்கள என்று அழைக்கப்படுகின்ற பக்கீர்கள் என்போர் தனிப்பட்ட அடையாளங்களோடு வாழ்கின்றனர். தலைப்பாகையும், தோளில் 'ஜோல்னா' பையும், கையில் தாஹிரா கொட்டினை இசைத்துக்கொண்டும் பாடல்களைப் பாடியும் யாசகம் கேட்டு வருவார்கள். இசுலாமியர்கள் அதிகமாக வாழ்கின்ற பகுதிகளிலும், குறிப்பாகத் தர்காக்கள் என்றழைக்கப்படுகின்ற

இறைநேசர்கள், இறையடியார்களின் அடக்கத்தலங்களைச் சுற்றித் தங்கள் வாழ்விடங்களை அமைத்துக்கொண்டுள்ளனர். இரவலர்,ஆன்மீகவாதி எனப் பல்வேறு பெயர்களுடன் அழைக்கப்படுகின்ற பக்கீர்களின் வழிபாட்டுக்குரிய இடமாகத் தர்காக்கள் அமைந்துள்ளன. ஒருவர் பக்கீராக தன் வாழ்க்கையைத் தொடங்கி, ஆன்மீகப் பாதையில் நுழைந்து இறுதி வரையிலும் தர்காவைச் சார்ந்து வாழ்கின்றார். சுமார் ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பு தர்கா வழிபாடானது இஸ்லாமியர்களில் பெரும்பாலோரால் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒன்றாக இருந்தது. அதனால் பக்கீர்கள் தங்கள் வருமானத்திற்கும் வழிபாட்டிற்கும் ஏற்ற இடமாகவே தர்காவைக் கருதினர். ஆன்மீக வாழ்க்கையை மேற்கொள்ளும் பக்கீர்கள் பல்வேறு சடங்கு முறைகளைப் பின்பற்றுகின்றனர். குறிப்பாகத் தர்காக்களில் அடக்கமாகியுள்ள இறைநேசர்களின் நினைவு நாளை முன்னிட்டு நடைபெறுகின்ற சந்தனக்கூடு விழாக்களில் பின்பற்றப்படுகின்ற வழிபாட்டுச் சடங்குமுறைகள் மாற்று மதத்தவரும் கலந்துகொள்கின்றனர். கோயில் வழிபாட்டில் பின்பற்றப்படுகின்ற தேங்காய் உடைத்தல், பூ,பழம் முதலானவற்றை கொண்டு செல்லுதல், தர்கா வழிபாட்டிலும் இடம்பெறுகிறது. பெரும்பாலான இஸ்லாமியர்களின் வழிபாட்டுத் தலமாக இருக்கின்ற பள்ளிவாசலுக்கும், தர்காவிற்கும் உள்ள வேறுபாட்டையும் அறிந்துகொள்ள வேண்டியது அவசியமாகிறது. ஆகையால் இக்கட்டுரையில் பக்கீர்கள் குறித்தும் தர்காக்கள் அமைப்பு, தர்கா வழிபாட்டு முறைகள் பற்றியும் அவற்றில் பொதிந்துள்ள சமூக, மத நல்லிணக்கம் குறித்தும் விளக்கும் வகையில் இக்கட்டுரை அமைகிறது.

**திறவுச் சொற்கள்**

பக்கீர் சொல் விளக்கம், இசுலாமிய இரவலர்கள், தர்கா விளக்கம், தர்கா அமைப்பு, பள்ளிவாசல் - தர்கா: வேறுபாடுகள், தர்கா வழிபாட்டு முறைகள், தர்கா வழிபாட்டில் மாற்றுக் கருத்துகள்

**முன்னுரை**

இஸ்லாமியச் சமயத்தின் தனித்த அடையாளத்தோடு விளங்குகின்ற பக்கீர்கள் என்போர் இரவலர்களாகவும் அதே நேரத்தில் ஆன்மீகவாதிகளாகவும் காணப்படுகின்றனர். அவர்கள் பெயருக்கான காரணங்குறித்து விளக்கும் வகையிலும், அவர்களுடைய வாழ்விற்கு ஆதாரமான தர்காக்களின் அமைப்பு குறித்தும் விளக்கவேண்டியுள்ளது. பெரும்பாலான இஸ்லாமியர்களின் தொழுகைக்குரிய இடமாக பள்ளிவாசல் இருக்கின்றபோது, சிலர் தர்காவிற்கும் செல்கின்ற காரணத்தால் அவ்விரண்டிற்கும் இடையே உள்ள வேறுபாட்டினை அறிவது அவசியமாகிறது. மேலும், இக்கட்டுரையில் தர்கா வழிபாட்டுச் சடங்கு முறைகள் குறித்தும், தற்காலத்தில் அதன் மீது வைக்கப்பட்டுள்ள மாற்றுக் கருத்துக்கள் குறித்தும் விளக்கப்பட்டுள்ளது.

**'பக்கீர்' என்ற சொல் விளக்கம்**

பக்கீர் என்பதற்கு இரப்பவர் அல்லது இரவலர் என்று பொருள் தரக்கூடிய பாரசீக சொல்லாகும். இச்சொல் குறித்து அப்துல்ரஹீம் விளக்குகையில்,

> "ஃபக்கீர் என்ற பாரசீகச் சொல் ஃபகீர் என்ற மூலத்திலிருந்து தோன்றியிருக்கலாம் எனக் கருத முடிகிறது. ஃபகீர் என்றால் எல்லாத் தேவைகளுக்கும் இறைவனை எதிர்பார்க்கும் தன்மை என்றும்,

ஃபக்கீர் என்றால் எல்லாத் தேவைகளுக்கும் எதிர்பார்ப்பவர் என்றும், இந்தத் தேவை ஆன்மீகத் தேவையும், உலகாயுதத் தேவையும் குறிக்கும்" என்பார்[1].

மேலும், பக்கீர் என்பதற்கு இஸ்லாமியப் பரதேசி, பிச்சைக்காரர் என்று தமிழ் அகராதி பொருள் தருகிறது[2].

அரபி மொழியில் பக்கீர் என்ற சொல் வறியவர் என்ற பொருள் தருகிறது. பர்சியன் மொழியில் 'தர்வீஷ்' என்றும் அழைக்கப்படுகின்றனர். ஆன்மீகப் பயன்பாட்டில் பக்கீர் என்ற சொல் மனிதனின் ஆன்மீகத் தேவையை விளக்குவதற்கு பயன்பட்டுள்ளது. இந்தியாவில் இஸ்லாம் பரவிய ஆரம்ப காலத்தில் இச்சொல் இந்து சமயத்தில் உள்ள சாது,பிக்கு போன்ற துறவிகளுக்கும் வழங்கப்பட்ட மாற்றுச் சொல்லாகப் பயன்பட்டதைக் காண முடிகிறது[3].

யூத, கிறிஸ்துவ சமயத்தில் ஏழை என்பதற்கு 'எபியோனைட்ஸ்' என்ற சொல் பயன்பாட்டில் உள்ளது. இஸ்லாத்தின் தொடக்க காலத்தில் ஆன்மீகப் பொருளுக்கு நெருங்கிய தொடர்புடையதாக இச்சொல் இருந்தது. வறியவர் என்ற பொருள் தருகின்ற பக்கீர், தர்வீஷ் முதலான சொற்கள் ஆங்கிலத்திலும் அவ்வாறே பயன்படுத்தப்பட்டுள்ளன. இவ்வார்த்தைகள் ஒரு மனிதனின் ஆன்மீக வாழ்க்கை அல்லது மெய்யுணர்வு இவற்றின் மறைபொருள்களைப் பெற்றிருக்கிறது என்பதை அறியமுடிகிறது [4].

**இஸ்லாமிய இரவலர்கள்**

இஸ்லாமிய சமயத்தைப் பின்பற்றுகின்ற இரவலர்களை மிஸ்கின், முசாபர், பக்கீர் எனவும் பிரித்துள்ளனர். பக்கீர்களை பிச்சைக்காரர், பரதேசி என்று கருதுவதற்கு அவர்களைப் போலவே தோற்றம் கொண்டவர்களாகவும், ஆனால் நடத்தைகளில் வேறுபட்ட தன்மை உடையவர்களாகவும் மற்ற இரு பிரிவினரும் இருப்பதே காரணங்களாகும். மிஸ்கின் என்பது ஒரு அசிரிய சொல்லாகும். இச்சொல் சுதந்திர மனிதர்களுக்கும் அடிமைகளுக்கும் இடையில் உள்ள வகுப்பாரைக் குறிக்க பயன்படுத்தப்பட்டுள்ளது என்றும், அரசகுலத்தைச் சேர்ந்த சுதந்திர மனிதனைக் குறிக்க இச்சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது என்றும், இரு வேறு விதமாகக் கூறப்படுகிறது. மேலும் இச்சொல்லானது 'ஏழை' என்ற பொருளில் அரபி, ஹிப்ரு, அபீஸினிய, இத்தாலி, பிரஞ்சு மொழிகளில் பயன்படுத்தப்பட்டு வருகிறது [5].

முசாபர் என்போர் வழிப்போக்கர்களாவர். முசாபர் என்ற அரபுச் சொல்லிற்கு பயணி என்ற பொருளும் உண்டு. இவர்கள் நாடோடி வாழ்க்கையை மேற்கொண்டிருந்தனர். வழிப்பயணத்தின் போது யாசித்து,காசு முதலான பொருட்களை பெற்று வாழ்ந்து வருகின்றவர்களை அவ்வாறு அழைத்துள்ளனர். முசாபர் என்ற சொல் நாடோடிகளாகத் திரிபவரைக் குறிக்கும் வகையில் பயன்பட்டுள்ளது. இதுகுறித்து இஸ்லாமிய இலக்கிய வரலாறு குறிப்பிடுகையில் "சபர் என்னும் சொல் அரபு மொழியிலே பிரயாணம் செய்தலை, தேச சஞ்சாரத்தில் ஈடுபடுதலைக் குறிக்கிறது சபர் அடியாக பிறந்த பெயர் சொல்லான முசாபர் என்பது பயணியை, தேச சஞ்சாரியைக் குறிக்கின்றது. இத்தகைய பயணிகளான முஸாபர் பலர் ஒன்று கூடும் இடத்தை அவர்கள் மொழியில் முசாபரி என்று அழைத்திருக்கலாம். இஸ்லாத்தில் குறிக்கப்பட்டுள்ள கட்டாயக் கொடையைப் பெறத் தகுதியுடைய பக்கீர் கூட்டத்தவர்கள், பயணிகளான முசாபர்களும் இடம்பெறுகின்றனர் என்று விளக்குகிறது"[6] .

மேற்கண்ட குறிப்புகளிலிருந்து பக்கீர் என்ற சொல் வறியவர், யாசிப்பவர், தேவையுள்ளவர், தேச சஞ்சாரி, இறைவனின் நல்லடியார், ஆன்மீகவாதி, எல்லாத் தேவைகளுக்கும் இறைவனை எதிர்பார்ப்பவர் என்றும், துறவு நிலையில் உள்ளவர்களை குறிப்பதற்கும் பயன்பட்டுள்ளது என்பதை அறிய

முடிகிறது. பக்கீர்கள் அனைவரும் சமய கருத்துகளைப் பரப்புகின்ற ஆன்மீகவாதிகளாக இருந்த போதிலும் பிச்சைக்காரர்களைப் போல் அலைந்து திரிந்த காரணத்தினால் மக்களிடம் சரியான இனம் காணும் தன்மை இல்லாத சூழல் ஏற்பட்டது. ஆகவே, பக்கீர்களையும் பிச்சைக்காரர்கள் என்று அடையாளப்படுத்தியுள்ளனர் என்பதை அறிய முடிகிறது.

**தர்கா விளக்கம்**

தர்கா என்பது இறைையடியார்களின் அடக்கத்தலமாகும். ஏறக்குறைய ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பு தர்கா வழிபாடு இஸ்லாமியர்களில் பெரும்பாலோரால் ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. ஆகையால், பக்கீர்கள் தங்கள் வருமானத்திற்கும் வழிபாட்டிற்கும் ஏற்ற இடமாக தர்காவைத் தேர்ந்தெடுத்தனர். பக்கீர்கள் இறையடியார்கள் மீது கொண்டிருந்த மிகுந்த நம்பிக்கையும் அதற்கு காரணமாக இருந்தது. இன்றளவும் பக்கீர்கள் தர்கா வழிபாட்டைப் பின்பற்றுவோராக இருக்கின்றனர். தர்கா என்ற சொல்லினைக் குறித்தும், தர்கா வழிபாட்டு முறைகளில் பக்கீர்களின் செயல்பாடுகள் குறித்தும், தர்காவின் அமைப்பு பள்ளிவாசல் இவற்றுக்கு இடையிலான வேறுபாடுகள் குறித்தும், தர்காக்களில் நடைபெறும் விழாக்கள், பக்கீர்களின் நிகழ்த்துக்கலை மற்றும் பல்வேறு சடங்குகள் குறித்தும் இனிக்காணலாம்.

தமிழகத்தில் கீர்த்தி ஏழாம் நூற்றாண்டிற்கு பிறகு அரபியாவிலிருந்து பிறந்த வணிக குழுக்கள் இஸ்லாமிய சமய பிரச்சார குழுவினர் தமிழகத்தின் கடற்கரை பகுதிகளில் தங்கள் வாழ்விடங்களை அமைத்துக் கொண்டனர். அவ்வாறு வந்தவர்கள் தங்களது பேச்சாலும், எழுத்தாலும், சிந்தனையாலும் சமயப் பணியாற்றினர். அவர்கள் இறைநேசர்களாகவும், மெய்ஞ்ஞானிகளாகவும் கருதப்பட்டனர். அவர்களது அடக்கத் தலங்கள் தர்காக்கள் என்று அழைக்கப்பட்டன.

'தர்'என்பது பார்ஸி சொல்லாகும். இதன் பொருள் 'கதவு' அல்லது 'வாயில்' என்பதாகும். அரபியில் 'பாப்' என்ற சொல்லுக்கு நிகரான பார்ஸி சொல்லாகும். 'தர்' என்ற இச்செல்லும் 'காஹ்' என்ற பார்ஸி சொல்லும் சேர்ந்து தர்காஹ் (தர்கா) என்ற சொல் உருவாகியது என்பர். மேலும் தர்கா என்ற சொல்லிற்கு அடக்கவிடம் என்பது பொருள். இஸ்லாமிய மெய்யடியார்களான இறைநேசர்களின் அடக்கவிடத்தினையே இது குறிக்கிறது. ஈரானில் அரசர்களின் அரண்மனையை குறிக்கவும் இச்சொல் பயன்படுகிறது [7].

இஸ்லாமிய சமயத்தைப் பரப்பிய மெய்ஞ்ஞானிகளை 'வலிமார்'கள் என்றும் 'அவுலியா' என்றும் அழைப்பார்கள். 'வலி' என்ற அரபு சொல்லின் பன்மை வடிவமே 'அவுலியா' ஆகும். இதன் பொருள் நெருங்கியவர், நண்பர் என்பதாகும். தர்காக்களில் அடக்கமாகியுள்ள வலிமார்கள் போன்றோர் இருக்கின்ற போதும், இறந்த பிறகும் அற்புதங்கள் செய்வதில் ஆற்றல் படைத்தவர்களாக இருக்கின்றனர் என்பதை இஸ்லாமியர்கள் நம்பினர். குறிப்பாகத் தர்கா வழிபாட்டை மேற்கொள்வோருக்கு இந்த நம்பிக்கை அதிகமாக இருக்கிறது. இதன் அடிப்படையிலேயே பக்கீர்கள் தங்கள் வழிபாட்டுக்குரிய இடமாகத் தர்காக்களைக் கருதினர்.

**தர்கா அமைப்பு**

இந்தியாவில் முகலாயர்களின் ஆட்சி ஏற்பட்ட போது பாரசீக கட்டடக் கலையின் அடிப்படையில் பள்ளிவாயில்கள், தர்காக்கள் முதலியன கட்டப்பட்டன. முகலாய மன்னர்களின் காலத்தில் இறந்த ஞானிகளின் அடக்கவிடங்களில் சமாதி எழுப்பும் முறை உருவாகியது. அதன் அடிப்படையில் இந்தியா முழுவதும் இறையடியார்களுக்கு அடக்கத் தலங்கள் உருவாயின. இஸ்லாமியர்களின் அடக்கத்

தலத்திற்கு அரபு மொழியில் 'கபுறு' என்று பெயர். புதைகுழி உள்ள இடம் கபுறுஸ்தான் (கபுறு+ஸ்தான்= கப்ருஸ்தான்) எனப்படுகிறது. புதைகுழி மீது கட்டப்படும் சமாதி 'கோரி' என்று அழைப்பர். ஓர் இறையடியாரின் கோரியை அடிப்படையாக வைத்து எழுப்பப்படும் கட்டடத்தை தர்கா என்பர். தர்காவில் காணப்படுகின்ற 'கோரி' என்ற சமாதியைப் பச்சை நிறப் போர்வையால் போர்த்தப்பட்டிருப்பதைக் காணலாம். புகழ்பெற்ற அவுலியா ஒருவர் அடக்கம் செய்யப்பட்ட இடத்தில் அவர் நினைவாக உருவானப் பிறகு, வேறு சில ஊர்களில் அவர் நினைவாக உருவாக்கப்பட்ட தர்காவில் 'கோரி'யின்றி இருப்பதைக் காணமுடியும்[8] என்று ஆ.சிவசுப்பிரமணியன் குறிப்பிட்டுள்ளார்.

**பள்ளிவாசல் - தர்கா : வேறுபாடுகள்**

இஸ்லாமியரின் வழிபாட்டிற்குரிய இடமாகத் தர்காக்கள் அமைந்திருக்கின்றன என்பதை காணும் பொழுது முற்றிலும் மாறுபட்ட இடமாக பள்ளிவாசல்கள் அமைந்துள்ளன. இஸ்லாமியர்களில் பெரும்பாலானோர் பள்ளிவாசல்களுக்குச் செல்வோராக இருக்கின்றனர். மிகச் சிலரே தர்கா வழிபாட்டு முறையைப் பின்பற்றக் கூடியவர்களாக இருப்பதையும் காண முடிகிறது. இரண்டிற்கும் இடையே உள்ள வேறுபாட்டை காண்போம்.

- ★ பள்ளிவாசல்கள் இறைவணக்கம் செய்கின்ற இடமாகவும், தர்காக்கள் இறையடியார்களின் அடக்கத் தலமாகவும் இருக்கிறது.
- ★ பள்ளிவாசல்களில் தொழுகைக்கான அழைப்பு கூறப்பட்டு தொழுகையின் போது ஒருவர் முன் நின்று அதனை நடத்தி வைப்பார். தர்காக்களில் தொழுகை நடைபெறாது. எவரும் வழிநடத்தாமல் அவரவர் விருப்பம் போல் வழிபடுவர்
- ★ பள்ளிவாசலில் பிற சமயத்தவருக்கு அனுமதி இல்லை ஆனால் தர்காவில் பிற சமயத்தவர்களும் வழிபாடு செய்கின்றனர். குறிப்பாக கோயில்களுக்கு செல்வோர் பூ,பழம் கொண்டு செல்லுதல், தேங்காய் உடைத்தல் போன்ற சடங்குகள் செய்வதைப் போலத் தர்காக்களுக்கும் கொண்டு சென்று வழிபடுவதைக் காணமுடிகிறது.
- ★ பள்ளிவாசலில் ஏக இறைவனாகிய அல்லாஹ்வை மட்டும் முன்னிலைப் படுத்தித் தொழுகின்றனர். ஆனால், தர்காவில் அடக்கம் செய்யப்பட்டுள்ள அவுலியாவை முன்னிலைப் படுத்துகின்றனர்.
- ★ பள்ளிவாசல்களில் நேர்த்திக்கடன், பலியிடுதல் போன்றவை இல்லை. ஆனால் தர்காவில் அவையெல்லாம் செய்யப்படுகின்றன.

மேற்கண்ட வேறுபாடுகளில் இருந்து நாம் அறிந்து கொள்வது யாதெனில் பள்ளிவாசல்கள் தொழுகைக்கு மட்டுமே உரிய இடமாகவும் ஆனால் தர்காக்கள் பல்வேறு வகையான சடங்குகளைச் செய்வதற்கான இடமாகவும் இருப்பதைக் காண முடிகிறது. தர்காக்களில் மேற்கொள்ளப்படுகின்ற சடங்குகளை மாற்று மதத்தினரும் விரும்புகின்ற காரணத்தினால் சமயம் கடந்த ஒரு நிலையை நாம் தர்காக்களில் காண முடிகிறது.

**தர்கா வழிபாட்டுச் சடங்குமுறைகள்**

தர்காக்களுக்கு செல்வோர் தங்களுடைய தேவைகளை நிறைவேற்றக் கூடிய ஆற்றல் அவ்லியாக்களுக்கு இருக்கிறது என நம்புகின்றனர். அதன் அடிப்படையில் குழந்தைப்பேறு வேண்டியும்

குடும்ப உறவு மற்றும் பொருளியல் சிக்கல்களை தீர்ப்பதற்காகவும் தவிர பேய் பிடித்தவர்கள், பில்லி, சூன்யம் போன்றவற்றால் பாதிக்கப்பட்டவர்களென, மன நோய்க்கு ஆளானவர்களை பல மாதங்கள் அல்லது ஆண்டு கணக்கில் தர்காவில் தங்க வைக்கின்றனர். இவற்றின் அடிப்படையில் தர்காவிற்கு என சில வழிபாட்டு முறைகளும் பின்பற்றப்படுகின்றன.

- ★ இறந்தவர்களின் அடக்க இடங்களைத் தரிசித்தல். இறைவனிடம் 'துஆ' எனப்படும் 'இறை வேட்டலை' கேட்டல் முதலானவை பின்பற்றப்படுகின்றன.
- ★ குர்பான் எனப்படும் பலியிடுதல் சடங்கு தர்காக்களில் நடைபெறுகிறது. பலியிடுவதற்காக ஆடு, கோழி, புறா முதலானவற்றை தர்காக்களுக்கு கொண்டு செல்கின்றனர். பலியிடப்பட்ட இறைச்சியை ஏழை, எளியவருக்கு பகிர்ந்து அளிக்கின்றனர்.
- ★ இஸ்லாமியர்கள், குழந்தை பிறந்த நாற்பதாவது நாள் மற்றும் இறந்தவரின் நினைவாகவும் குர்பான் கொடுப்பதைப் பின்பற்றுகின்றனர். இம்முறையானது நேர்த்திக்கடன் என்ற பெயரில் தர்காக்களில் பின்பற்றப்படுகிறது.
- ★ இறை நேசர்களின் நினைவு நாளான 'கந்தூரி' தமிழக முழுவதும் உள்ள தர்காக்களில் கொண்டாடப்படுகிறது. பதினைந்து நாட்கள் கொடியேற்ற விழாவும், சந்தனம் பூசுதலும் ஆண்டுதோறும் தர்காக்களில் நடைபெறுகின்றன இவ்விழாவின் தொடக்க நாள் முதல் இறுதி வரை பல்வேறு நேர்த்திக்கடன்களுக்காகச் சமைத்த உணவுகளைப் பக்கீர்களுக்கும் ஏழைகளுக்கும் அளிக்கின்றனர்.
- ★ கந்தூரி விழாவின் தொடக்க நாளில் கொடியேற்றுதல் என்னும் சடங்கு நடைபெறுகிறது. பச்சை வண்ணத் துணியில், வெண்மை நிறத்தில் நட்சத்திரமும், பிறை நிலவும் அமைந்த கொடியேற்றப்படுகிறது.
- ★ 'உர்ஸ்' என்று அழைக்கப்படும் 'சந்தனக்கூடு எடுத்தல்' என்ற நிகழ்வை அவுலியாவின் நினைவு நாளில் கொண்டாடுகின்றனர். மின்விளக்குகளாலும் உன்ன காகிதங்களாலும் அலங்கரிக்கப்பட்ட சந்தனம் பூசிய கூட்டைத் தேர் போன்று வடிவமைக்கப்பட்ட மாட்டு வண்டிகளில் வைத்து எடுத்து வருவார்கள். அப்போது பக்கீர்கள் தாஹிரா கொட்டுகளை இசைத்த வண்ணம் சந்தனக்கூட்டிற்கு முன்பாக வருவார்கள்.
- ★ சந்தனக்கூடு வரும்பொழுது மக்கள் அனைவரும் மல்லிகை பூச்சரத்தைப் பந்து போல உருட்டி கூட்டின் மீது வீசுவார்கள். பூச்சரம் கூட்டின் மேல் விழுந்து ஒட்டிக் கொண்டால் தங்களது வேண்டுதல் நிறைவேறும் என்றும், இவ்வாறு ஒட்டாமல் கீழே விழுந்து விட்டால் துன்பங்கள் நேரும் என்றும் நம்புகின்றனர்.
- ★ தர்காக்களில் கொடியேற்றிய பத்தாம் நாளில் சந்தனம் பூசுதல் என்ற சடங்கு நடைபெறுகிறது. நன்றாகக் குழைக்கப்பட்ட சந்தனத்தைக் குடத்திலிட்டு அதைத் தலையிலோ அல்லது மாட்டு வண்டியிலோ வைத்து ஊர்வலமாக எடுத்து வருவார்கள். குடத்தில் உள்ள சந்தனத்தை இறைநேசரின் சமாதியின் மீது பூசி,பிறகு அச்சந்தனத்தை எடுத்து வந்து அனைவருக்கும் பிரசாதம் போல் தருவார்கள். ஒரு சிலர் அச்சந்தனத்தை உருண்டை வடிவில் தங்கள் வீடுகளுக்கு எடுத்துச் செல்கின்றனர். அப்படிச் செய்வதால் தங்கள் வீடுகளில் எவ்வித பிணியும் துன்பமும் வராது என்று நம்புகின்றனர்.

- ★ தர்கா சடங்குகளில் முக்கியமான ஒன்றாக ராத்தீப் என்ற நிகழ்த்துகலையும் செய்யப்படுகிறது. கூர்மையான ஆயுதங்களால் உடல் முழுவதும் வெட்டிக் கொள்வதும், கூர்மையான கம்பிகளால் உடலில் குத்திக் கொள்வதுமாக இந்தச் சடங்கு நடைபெறுகிறது. கூறிய கம்பிகளால் குத்திக் கொள்ளக்கூடிய சடங்கு முறை இந்து சமயத்தில் காணப்படுகின்ற அழகு குத்துதலுக்கு இணையாக சொல்லப்படுகிறது.
- ★ பக்கீர்கள் ராத்திபு செய்வதற்கு முன்பு 40 நாட்கள் நோன்பு இருக்க வேண்டும். நிகழ்ச்சி நடக்கவிருக்கும் ஏழு நாட்களுக்கு முன்பு மீன், இறைச்சி போன்றவற்றை தவிர்க்க வேண்டும். அப்படிக் கட்டுப்பாடு இல்லாமல் செய்வார்களேயானால் குத்துப்பட்ட இடங்களில் ரத்தம் வருவது போன்றவை நிகழும் என்று களஆய்வின் போது தெரிவிக்கப்பட்டது.

**தர்கா வழிபாட்டில் மாற்றுக் கருத்துகள்**

தற்போதைய காலத்தில் தர்கா வழிபாடு சிறு தெய்வ வழிபாட்டுக்கு இணையாக கருதப்படுகிறது. காணிக்கை செய்தல், தேங்காய் உடைத்தல், பலியிடுதல், வலிமார்களின் சமாதியை வலம் வருதல், கொடி கட்டுதல், சந்தனக்கூடு எடுத்தல் போன்றவை இஸ்லாத்தின் ஓரிறைக் கொள்கைக்கு மாறானவை என்னும் கருத்து வலுப்பெற்று வருகிறது.. இதுகுறித்து ஹெச். ஜி ரசூல் குறிப்பிடுகையில்,

> "தர்கா தொடர்புடைய விழா நிகழ்வுகளில் பிற சமயத்தவர்களின் பங்களிப்பாக பால் வழங்குதல் நேர்ச்சை வைத்தல் காணிக்கை வழங்குதல் போன்ற பல்வேறு நல்லிணக்க இழைகள் அறுபடாமல் இருப்பதை பார்க்கலாம் இது இருவேறு சமயத்தார்கள் இடம் சமாதான வேண்டுதலை மேற்கொள்ளுவதற்காக விட்டுக் கொடுத்தலையும் புரிதலையும் ஏற்படுத்தும் நடவடிக்கைகள் ஆகும்"[9] என்கிறார்

மேற்கண்ட கூற்றிலிருந்து நாம் அறிவது, தர்கா வழிபாடு மத நல்லிணக்கத்திற்கு மட்டுமின்றி பக்கீர்களின் வாழ்வாதாரத்திற்கும் அடிப்படையாக அமைந்துள்ளது. தர்காக்களில் நடைபெறுகின்ற சடங்குகள், திருவிழாக்கள் போன்றவை மக்கள் அனைவரையும் ஒன்றிணைக்கும் தளமாக இருக்கின்றன. எனவே, அது பக்கீர்களுக்கு வருவாய் அளிக்கக் கூடியதாக உள்ளது. மற்ற நாட்களில் 50, 100 என்று வருவாய் ஈட்டும் பக்கீர்கள், தர்காக்களில் நடைபெறுகின்ற திருவிழாக் காலங்களில் மட்டும் கணிசமான தொகையைப் (ஏறக்குறைய 300, 500) பெறுவதாகக் கூறுகின்றனர். தர்காவை முன்வைத்து பக்கீர்கள் தங்கள் வருமானத்தைத் தேடிக் கொண்ட போதிலும் இஸ்லாத்தின் அடிப்படையான ஓர் இறைக் கொள்கை, மற்ற கடமைகளை மறுப்பதில்லை. அதனால் இஸ்லாமிய கொள்கைகளுக்கு எந்த வகையிலும் தர்கா வழிபாடு தடையாக இருந்தது இல்லை என்றும் கூறுகின்றனர்.

**முடிவுரை**

பக்கீர்களின் வாழ்க்கை முறை பிற இஸ்லாமியர்களின் வாழ்க்கை முறையோடு வேறுபட்டிருப்பதை இங்குக் காண முடிகிறது. ஆன்மீக வழியில் தங்களை இணைத்துள்ள பக்கீர்கள் இரவலர்களாகவும், பல ஊர்களுக்கு அலைந்து திரியும் நாடோடிகளாகவும் இருப்பதை நாம் அறிய முடிகிறது. அவர்கள் தர்காக்களைச் சார்ந்து தங்கள் வாழ்க்கையை அமைத்துள்ளனர் என்பதைக் காணமுடிகிறது. மேலும், தர்காக்களின் அமைப்பும், இஸ்லாமியர்களின் வழிபாட்டுத் தலமான பள்ளிவாசலுக்கும் தர்காவிற்கும் இடையிலான வேறுபாட்டினையும் இங்கு சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

தர்கா வழிபாட்டுச் சடங்கு முறைகளில் கோயில் வழிபாட்டில் காணப்படுகின்ற பண்பாட்டுக் கூறுகளை ஏற்றுக் கொண்டுள்ளதால், மாற்று மதத்தினரும் தர்கா வழிபாட்டில் நம்க்கையுள்ளவராக வருகின்றனர். இதனால் மக்களிடையே கூட்டுணர்வு, மத நல்லிணக்கம், பொதுநலச் சிந்தனை முதலானவை ஏற்படுவதற்கு இத்தகைய வழிபாட்டு முறைகள் துணை புரிகின்றன. தர்அகா வழிபாடு இஸ்லாத்தின் ஓர்இறை கொள்கைக்கு முரணான ஒன்றாக கருதப்பட்டாலும் பக்கீர்களின் வாழ்வாதாரம், நம்பிக்கை, பண்பாடு முதலான பிரச்சனைகள் இதில் அடங்கியுள்ளன. ஆகையால், அதற்கான மாற்று ஏற்பாடுகள் அவர்களுக்காக உருவாக்கும் வரையில் தர்கா வழிபாடு தவிர்க்க இயலாத ஒன்றெனத் தோன்றுகிறது.

**அடிக் குறிப்புகள்**

1. அப்துல் ரஹீம், இஸ்லாமிய கலைக்களஞ்சியம், மூன்றாம் தொகுதி, ப. 687
2. Tamil Lexicon vol. IV.p.2378
3. The New Encyclopaedia Britanica, vol-4,p. 662
4. Julian baldick mystical Islam an introduction to sufism, p.219
5. அப்துற் ரஹீம், இஸ்லாமிய கலைக்களஞ்சியம், மூன்றாம் தொகுதி, ப. 687
6. ம. முஹம்மது உவைஸ், பீ.முஅஜ்மல்கான், இஸ்லாமிய தமிழ் இலக்கிய வரலாறு, தொ.1, ப.12
7. அப்துல் ரஹீம், இஸ்லாமியக் கலைக்களஞ்சியம் தொ. 3, ப.241
8. ஆ சிவசுப்பிரமணியன், தர்கா வழிபாடு, (தொ) ப.116
9. ஹெச். ஜி. ரசூல், தர்கா பண்பாட்டு அரசியல், திண்ணை வெளியீடு

**துணை நூற்பட்டியல்**

1.முகம்மது உவைஸ்.ம. அஜ்மல்கான்.பீ.மு, இஸ்லாமியத் தமிழ் இலக்கிய வரலாறு, தொ.1, மதுரை காமராசர் பல்கலைக்கழகம்

**களஞ்சியங்கள்**

1. அப்துல் ரஹீம், இஸ்லாமிய கலைக்களஞ்சியம், மூன்றாம் தொகுதி, யுனிவர்சல் பப்ளிஷர்ஸ், சென்னை
2. Tamil Lexicon vol. IV. Madras University
3. The New Encyclopaedia Britanica, vol-4, first Edison, 1968,

**கட்டுரைகள்**

1.சிவசுப்பிரமணியன்.ஆ.'தர்கா வழிபாடு'பண்பாட்டு வேர்களைத் தேடி நாட்டார் வழக்காற்றியல் ஆய்வு மையம், பாளையங்கோட்டை, 1999

2. ரசூல்.ஹெச். ஜி. தர்கா பண்பாட்டு அரசியல், திண்ணை வெளியீடு,2006

**ஆங்கில நூல்**

1. Julian baldick mystical Islam an introduction to sufism, London, I.B.Tauris & Co.Ltd.,1989

# THE ACT OF GRACE OF THE AZHVARGAL "NALAYIRAM SONGS"

Author: M. JEYAPRAKASH NARAYANAN, Ph.D., Research Scholar,
Sri Sathguru Sangeetha Vidyalayam, College of Music & Research centre,
Madurai, Tamil Nadu.
Research Guide: Dr. S. VANATHI, Asst. Professor,
Sri Sathguru Sangeetha Vidyalayam, College of Music & Research centre,
Madurai, Tamil Nadu.

*ABSTRACT*

*One who study closely the songs of Nalayira Divya Prabantham can clearly understand Alwars comprehensive devotion and wisdom. This literature carries the charm of our Tamil Language and rich with creative rhythm and excellence of ideas with in-depth meaning.*

*Alvars have made the content of Vedas simplified by sub dividing as simple pasuras in simple Tamil language for us. All the songs of Nallayira Divya Prabantham are spread across states and recited equivalent to North Indian Vedas in other languages such as Telugu, Kannada apart from Tamil.*

*This article talks about the abstract of the special qualities and information about the Nalayira Divya Prabandham written by twelve Alwars.*

*Key Words: Alwars, Nalayira Divya Prabandham, Nalayiram Songs, Iyarpa, Isaipa.*

## ஆழ்வார்களின் அருளிச் செயல் "நாலாயிரம் பாடல்கள்"

கட்டுரையாளர்: ம. ஜெயப்பிரகாஷ் நாராயணன், முனைவர் பட்ட ஆய்வாளர்,
ஸ்ரீ சத்குரு சங்கீத வித்யாலயம், இசை மற்றும் ஆராய்ச்சி மையம், மதுரை, தமிழ்நாடு.
நெறியாளர்: முனைவர் எஸ்.வானதி, உதவிப்பேராசிரியர்.
ஸ்ரீ சத்குரு சங்கீத வித்யாலயம், இசை மற்றும் ஆராய்ச்சி மையம், மதுரை, தமிழ்நாடு.

**ஆய்வுச்சுருக்கம்**

ஆழ்வார்கள் ஆழ்ந்த பக்தியையும் அறிவினையும் உடையவர்கள் என்பது அவர்கள் அருளிச் செய்த நாலாயிர திவ்விய பிரபந்தப் பாடல்களை உற்று நோக்குவார்க்கு நன்கு புலனாகும். இவை ஆழ்ந்தறியத்தக்க சொல்நயம், பொருள்நயம் உடையனவாக விளங்குகின்றன. ஆழ்வார்கள் மிக எளிய முறையில் எளிய தமிழில் வேதத்தின் உட்பொருளைப் பாசுரங்களாக வடித்துத் தந்துள்ளனர். இவை அனைத்தும் கன்னலே, பாலே, தேனே, அமுதே போன்று தித்திப்பவையாகும். இப்பாடல்கள் அனைத்தும் அருளிச்செயல்கள்

என்றும், ஏற்றம் மிகுந்தவையாகவும் போற்றப்படுகின்றன. வடமொழி வேதத்திற்கு இணையாகத் தென்தமிழ் வேதமாகிய நாலாயிர திவ்விய பிரபந்தப் பாடல்கள், பாசுரங்கள் தமிழகம் மட்டுமின்றி கன்னடம், தெலுங்கு உள்ளிட்ட மொழிகள் பேசும் மாநிலங்களிலும் பாராயணம் செய்யப்படுகின்றன. இக்கட்டுரையில் பன்னிரண்டு ஆழ்வார்கள் இயற்றிய நாலாயிர திவ்விய பிரபந்தம் பற்றிய சிறப்புகளையும், செய்திகளையும் சுருக்கமாகக் கூறப்பட்டுள்ளன.

திறவுச்சொற்கள்:ஆழ்வார்கள், திவ்யப் பிரபந்தம், நாலாயிரம் பாடல்கள், இயற்பா, இசைப்பா.

V I J R S 2 0 2 5

**முன்னுரை**

எம்பெருமான் திருமாலின் மீது பக்திகொண்டு அவரின் மங்கல குணங்களில் ஆழ்ந்தவர்கள் ஆழ்வார்களாவர். அத்தகைய ஆழ்வார்கள் பன்னிருவர் ஆவர். ஆழ்வார்கள் அருளிச்செய்த அருட்பனுவல் நான்காயிரம் பாடல்கள் அடங்கிய தொகுப்பு "நாலாயிர திவ்யப் பிரபந்தம்" ஆகும். இவை 108 திவ்ய தேசங்களில் பாடப்பட்டவையாகும். அனைத்துப் பாடல்களும் திருமாலின் அவதாரச் சிறப்புகளையும், பெருமைகளையும் ஆழ்வார்கள் சிறப்பாகப் பாமாலையாகத் தொடுத்திருக்கின்றனர். இப்பாசுரங்கள் திவ்யமான கவிகள். ஆதலினால் ஆழ்வார்கள் அருளிய இப்பாடல் தொகுப்புக்கு "நாலாயிர திவ்யப் பிரபந்தம்" என்று பெயர். திவ்யம் என்பதற்கு இனிமை மற்றும் மேன்மையானது எனப் பொருள்படும். பிரபந்தம் என்பது பாடல்களின் தொகுப்பாகும்.

கி.பி 6-ம் நூற்றாண்டு தொடங்கி 9-ம் நூற்றாண்டுக்குட்பட்ட முந்நூறு ஆண்டு காலத்தில் ஆழ்வார் பெருமக்கள் இப்பாசுரங்களைப் பாடி தமிழையும், இறையுணர்வையும், பக்தியையும் ஒருங்கே வளர்த்துள்ளனர். இவர்களின் பாடல்கள் எளிமையும், இனிமையும். அழகும் பொலிந்து தமிழின் பெருமையை நிலைநாட்டி வருகின்றன. பிறகு 11-ம் நூற்றாண்டில் இப்பாடல்களைத் தொகுத்து இசைப்பா, இயற்பா எனத் தந்தவர் நாதமுனிகள் ஆவார்.

**நாலாயிர திவ்யப் பிரபந்தம் நூல் வடிவம் பெறுதல்**

நாலாயிர திவ்யப் பிரபந்தத்தை முதன்முதலில் அச்சுக்கு கொணர்ந்தவர் திருப்புட்குழி. கூர்மாச்சார்யர் என்பராவார். ஏட்டுச் சுவடிகளில் இருந்து நாலாயிரத்தைப் பகுதிபகுதியாக 1856 ஆம் ஆண்டு முதல் 1859 ஆம் ஆண்டு வரை பதிப்பித்து முடித்த தனிச்சிறப்பு இவருக்கு உண்டு. (பெரிய திருமொழியை இவர் பதிப்பிக்கவில்லை)

"தாம்பரத்திற்கு அருகிலுள்ள முடிச்சூர் என்னும் சிற்றூரில் பிறந்து கி.பி.19-ம் நூற்றாண்டின் கடைசிப் பகுதியில் வாழ்ந்த அப்பாவு முதலியார் என்பவரே 1865-ல் திவ்யப் பிரபந்தங்கள் அனைத்தையும் வைப்பு முறைப்படி அமைத்து ஒரே பதிப்பாக அச்சிட்டவராவர். அத்துடன் தற்கால இராக தாளக் குறிப்புகளையும் இவரே அமைத்துத் தம் பதிப்பில் சேர்த்துள்ளார்." (கமலக்கண்ணன். இரா.வ, ப.112)

**பன்னிரு ஆழ்வார்கள்**

ஆழ்வார் என்ற சொல்லுக்கு மூழ்கியவர், ஆழ்ந்தவர் என்பது பொருள். இறைவனிடம் பக்தியில் ஆழ்ந்தவர்களாகிய அடியார்களே; ஆழ்வார்கள் என்ற பெயரைப் பெறுகின்றனர். பன்னிரு ஆழ்வார்கள் அவதார வைப்புமுறையை உபதேச இரத்தின மாலை பின்வருமாறு எடுத்தியம்புகின்றது.

பொய்கையார் பூதத்தார் பேயார் புகழ் மழிசை
அய்யன் அருள் மாறன் சேரலர்கோன்-துய்ய பட்ட
நாதன் அன்பர்தாள் தூளி நற்பாணன் நற்கலியன்
ஈதிவர் தோற்றத் தடைவாம் இங்கு. - (4)

ஆழ்வார் திருமகளார் ஆண்டாள் மதுரகவி
யாழ்வார் எதிராச ராமிவர்கள்-வாழ்வாக
வந்துதித்த மாதங்கள் நாள்கள் தம்மின் வாசியையும்
இந்த உலகோர்க்கு உரைப்போம்யாம்- (21)

உபதேச இரத்தின மாலை — மணவாள மாமுனிகள்

பன்னிரு ஆழ்வார்கள் பின்வருமாறு

1. பொய்கையாழ்வார்
2. பூதத்தாழ்வார்
3. பேயாழ்வார்
4. திருமழிசையாழ்வார்
5. நம்மாழ்வார்
6. மதுரகவியாழ்வார்

7. குலசேகராழ்வார்
8. பெரியாழ்வார்
9. ஆண்டாள்
10. தொண்டரடிபொடியாழ்வார்
11. திருப்பாணாழ்வார்
12. திருமங்கையாழ்வார்

ஆழ்வார்கள் பன்னிருவருள் ஒருவர் மட்டுமே பெண். அவர்தாம் ஆண்டாள் நாச்சியார். ஆழ்வாருள் பல வகுப்பினரும் உள்ளனர். இதன்மூலம் இறைவனிடத்தில் வைக்கின்ற உண்மையான அன்பு, பக்தி, அறிவு, தூய்மைக்கு எத்தகைய சிறப்பான உயரிய இடம் கொடுக்கப்பட்டிருந்தது என்பது புலனாகிறது.

நாலாயிர திவ்யப் பிரபந்தம் இசைப்பா, இயற்பா

நாதமுனிகள் தாம் வைணவ பாரம்பரியத்தின் முதல் ஆச்சாரியர் என்று சொல்லப்படுகின்றார். இவரால் நாலாயிர திவ்யப் பிரபந்தம் மீண்டும் உயிர்பிக்கப் பட்டதாக கருதப்படுகின்றது. இதனை வடிவழகிய நம்பிதாசரின் நாதமுனி குருபரம்பரை குறிப்பிடுகின்றது.

நாலாயிர திவ்யப் பிரபந்தம் பாசுரங்களை அருளிச்செய்த ஆழ்வார்கள் பண்ணுடன் பாடினர். நாதமுனிகள் நான்காயிரம் பாடல்களையும் இயல் இசைக்குத் தக்கவாறு பிரித்தார். அவ்வாறு பிரித்த ஒவ்வொரு பகுதியிலும் ஆயிரம் பாடல்கள் இருக்குமாறு அடைவு படுத்தினார். பாசுரங்களை இசைப்பா,

இயற்பா எனப்பிரித்து இசைப்பாக்களை மூன்று தொகுதிகளாகவும், இயற்பாக்களை ஒரு தொகுதியாகவும் வகுத்துள்ளார். இசைப்பா பண்ணுடன் பாடுதற்கு உகந்தவை என்னும் கருத்தில் இசைப்பா என்று தனியாகப் பிரித்துத் தொகுக்கப்பட்டன. இயற்பா இயலாக சேவிக்கத்தக்கது என்னும் பொருளில் அவ்வாறு பெயர் பெற்றது. இப்பாகுபாடு இயல், இசை, நாடகம் என்னும் பழைய தமிழ் இலக்கிய மரபை நினைவூட்டுவதாக உள்ளது.

நாதமுனிகள் இசைப்பாக்களை தேவ கானத்திலே ஏறிட்டு சேவித்ததாகவும் இயற்பாவை இயலாகச் சேவித்து வந்ததாகவும் கோயிலொழுகு என்னும் நூல் கூறுகின்றது.

நான்கு ஆயிரம் பாடல்கள், 24 நூல்கள்

ஆழ்வார்களும் அவர்கள் அருளிச் செய்த 24 நூல்களும், பாசுரங்களின் எண்ணிக்கையும் பின்வருமாறு காணலாம்.

வையகமெண் பொய்கைபூ தம்பே யாழ்வார்
மழிசையர் கோன் மகிழ்மாறன் மதுரகவிகள்
பொய்யில் புகழ்க் கோழியர்கோன் விட்டுச்சித்தன்
பூங்கோதை தொண்டரடிப் பொடி பாணாழ்வார்
ஐயனருட் கலியனெதி ராசர் தம்மோ
டாறிவர் ஒரொருவர் அவர் தாஞ்செய்த
துய்ய தமிழிருபத்து நான்கிற் பாட்டின்
தொகை நாலாயிரமு மடி யோங்கள் வாழ்வே

(தேசிகப் பிரபந்தம் 383 - பிரபந்த சாரம்: 17)

முதல் ஆயிரம் (நூல்கள் 9 - இசைப்பா)

| **வ. எண்** | **ஆழ்வார்** | **அருளிச்செய்தது** | **பாசுரம் எண்ணிக்கை** |
|---|---|---|---|
| 1 | பெரியாழ்வார் | பெரியாழ்வார் திருமொழி | 473 |
| 2 | ஆண்டாள் | திருப்பாவை | 30 |
| 3 | ஆண்டாள் | நாச்சியார் திருமொழி | 143 |
| 4 | குலசேகராழ்வார் | பெருமாள் திருமொழி | 105 |
| 5 | திருமழிசையாழ்வார் | திருச்சந்த விருத்தம் | 120 |
| 6 | தொண்டரடிபொடியாழ்வார் | திருமாலை | 45 |
| 7 | தொண்டரடிப்பொடியாழ்வார் | திருப்பள்ளியெழுச்சி | 10 |
| 8 | திருப்பாணாழ்வார் | அமலனாதிபிரான் | 10 |
| 9 | மதுரகவியாழ்வார் | கண்ணிநுண் சிறுத்தாம்பு | 11 |
| | மொத்தம் | | 947 |

இரண்டாம் ஆயிரம் (3 நூல்கள் - இசைப்பா)

| வ. எண் | ஆழ்வார் | அருளிச்செய்தது | பாசுரம் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | திருமங்கையாழ்வார் | பெரிய திருமொழி | 1084 |
| 2 | திருமங்கையாழ்வார் | திருக்குறுந்தாண்டகம் | 20 |
| 3 | திருமங்கையாழ்வார் | திருநெடுந்தாண்டகம் | 30 |
| | மொத்தம் | | 1134 |

மூன்றாம் ஆயிரம் (1 நூல் - இசைப்பா)

| வ. எண் | ஆழ்வார் | அருளிச்செய்தது | பாசுரம் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | நம்மாழ்வார் | திருவாய்மொழி | 1102 |

நான்காம் ஆயிரம் ( 11 நூல்கள் - இயற்பா)

| வ. எண் | ஆழ்வார் | அருளிச்செய்தது | பாசுரம் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | பொய்கையாழ்வார் | முதல் திரு அந்தாதி | 100 |
| 2 | பூதத்தாழ்வார் | இரண்டாம் திரு அந்தாதி | 100 |
| 3 | பேயாழ்வார் | மூன்றாம் திரு அந்தாதி | 100 |
| 4 | திருமழிசையாழ்வார் | நான்முகன் திரு அந்தாதி | 96 |
| 5 | நம்மாழ்வார் | திருவிருத்தம் | 100 |
| 6 | நம்மாழ்வார் | திரு ஆசிரியம் | 7 |
| 7 | நம்மாழ்வார் | பெரிய திருவந்தாதி | 87 |
| 8 | திருமங்கையாழ்வார் | திரு எழுக்கூற்றிருக்கை | 1 |
| 9 | திருமங்கையாழ்வார் | சிறிய திருமடல் | 40 |
| 10 | திருமங்கையாழ்வார் | பெரிய திருமடல் | 78 |
| 11 | திருவரங்கத்தமுதனார் | இராமானுஜ நூற்றந்தாதி | 108 |
| | மொத்தம் | | 817 |

**தமிழ் இலக்கிய வகையுள் நாலாயிரம்**

நாலாயிர திவ்யப் பிரபந்தத்தில் அந்தாதி, தாண்டகம், திருப்பள்ளியெழுச்சி, நூற்றந்தாதி, மடல், மாலை, விருத்தம், உந்தியார், கோத்தும்பி, சப்பாணி, தாலாட்டு, திருவெழுக் கூற்றிருக்கை, பாவை ஆகிய சிற்றிலக்கிய வகைகள் அமைந்துள்ளன.

**அந்தாதி**

முதலாழ்வார்களாகிய பொய்கையார், பூதத்தாழ்வார், பேயாழ்வார் அருளிய முதல் திருவந்தாதி, இரண்டாம் திருவந்தாதி, மூன்றாம் திருவந்தாதி ஆகியனவும், திருமழிசையாழ்வாரின் நான்முகன் திருவந்தாதியும், நம்மாழ்வாரின் பெரிய திருவந்தாதியும் திருவரங்கத்து அமுதனாரின் இராமானுஜ நூற்றந்தாதி ஆகியன அந்தாதி என்னும் சிற்றிலக்கிய வகையினவாகும்.

**திருச்சந்த விருத்தம், மடல்**

திருமழிசையாழ்வாரின் திருச்சந்தவிருத்தம், பல்சந்த மாலை என்னும் இலக்கிய வகையோடு இயைந்து எண்ணத்தக்கதாகும். திருமங்கையாழ்வாரின் பெரிய திருமடல், சிறிய திருமடல் என்பன மடல் என்னும் இலக்கிய வகைக்குரியவை.

**திருத்தாண்டகம், திருவெழுக் கூற்றிருக்கை**

வைணவ ஆழ்வார்களில் திருமங்கையாழ்வார் தாண்டக வேந்தராக விளங்குகின்றார். அவர் பாடிய திரு நெடுந்தாண்டகம், திருக்குறுந்தாண்டகம் என்பன தாண்டகம் என்னும் யாப்புச் சார்பு இலக்கிய வகையைச் சார்ந்தது.

மேலும், திருமங்கையாழ்வார் நாலாயிர திவ்யப் பிரபந்தத்தில் திருவெழுக் கூற்றிருக்கை என்னும் இலக்கிய வகையையும் பாடியுள்ளார்.

**பிள்ளைத்தமிழ்**

குலசேகராழ்வார் பாசுரங்களிலும், பெரியாழ்வார் பாடல்களிலும், ஆண்டாள் பாடல்களிலும் பிள்ளைத்தமிழ் இலக்கிய வகையின் பகுதிகள் அமைந்துள்ளன. இவ்வாறு தமிழிலக்கியத்திற்கு ஆழ்வார்களின் தொண்டு இன்றியமையாத இடத்தைப் பெற்று விளங்குகின்றது.

ஆழ்வார்களின் பாடல்கள் “திராவிட வேதம்”

“வேதந்தமிழ் செய்த மாறன் சடகோபன்”

“வேதத்தை செந்தமிழால் விரித்துரைத்தோன் வாழியே”

-ஆழ்வார்கள் வாழி திருநாமம், அப்பிள்ளை ப.127

நாலாயிர திவ்யப் பிரபந்தம் பாசுரங்களில் தமிழ் மணம் பெருகிப்பாய்கின்றது. வைணவ அன்பர்கள் இப்பாக்களை உச்சிமேல் வைத்துப் போற்றுகின்ற சிறப்புக்குரியதாகும். நம்மாழ்வார் அருளிய பாசுரங்கள் நான்கு வேதசாரமாகும். திருவிருத்தம் ரிக் வேத சாரமாகவும், திருவாசிரியம் யசூர் வேத சாரமாகவும், திருவாய்மொழி சாம வேத சாரமாகவும், பெரிய திருவந்தாதி அதர்வண வேதத்தின் சாரமாகவும் போற்றப்படுகின்றது. திருமங்கையாழ்வார் அருளிய பெரிய திருமொழி, திருக்குறுந்தாண்டகம், திருவெழுக் கூற்றிருக்கை, சிறிய திருமடல், பெரிய திருமடல், திரு நெடுந்தாண்டகம் என்பன வேதத்தின் ஆறு அங்கங்களாக போற்றப்படுகின்றன.

**வேதம் அனைத்திற்கும் வித்து**

ஆண்டாள் நாச்சியார் அருளிய கோதை தமிழ் “திருப்பாவை” முப்பது பாசுரங்களும் வேதங்களுக்கு வித்தாக விளங்குவதாக வேதப் பிரான் பட்டர் அருளிய பின்வரும் பாடலில் அருளியுள்ளார்.

பாதகங்கள் தீர்க்கும் பரமனடி காட்டும்

வேதமனைத்துக்கும் வித்தாகும் — கோதை தமிழ்
ஐயைந்து மைந்தும் அறியாத மானிடரை
வையம் சுமப்பதும் வம்பு. (2)

**திவ்யப் பிரபந்தப் பாடல்களின் சிறப்பு**

திருமங்கையாழ்வார் தமது பெரிய திருமொழி பாசுரத்தில்

ஞாலம் எல்லாம் அமுது செய்து, நான்மறையும்
தொடராத பாலகனாய், ஆலிலையில் பள்ளி
கொள்ளும் பரமனிடம்" - பெரிய திருமொழி (4-1-6)

என்று பரம்பொருளின் வடிவியல்பை குறிப்பிடுகின்றார். பரம்பொருளின் ஸ்வரூபத்தை நாடிச் சொல்லிக் கொண்டே பரம்பொருளைத் தொடர்ந்து சென்ற வேதம் அதன் முடிவை எட்டமுடியாமல் திரும்பி வந்தது.

ஆழ்வார்களின் வரலாற்றில் நான்கு வேதங்களின் சாரமாகிய திவ்யப் பிரபந்தங்களைப் பெற, எம்பெருமான் தானும் ஆழ்வார்களின் பின்னே தொடர்ந்து சென்று பாசுரங்களைப் பெற்று திவ்ய தேசப் பெருமான் ஆனார் (திருநின்றவூர்) என்பது தெளிவாக விளங்கும்.

சுவாமி திருவீதி உலாவின் போது, பெருமாளுக்கு முன்பாக திவ்யப் பிரபந்த கோஷ்டி பாராயணம் செல்ல ஆழ்வார்களின் தமிழைக் கேட்கும் ஆசையினால் பெருமாள் பின்தொடர்ந்து செல்கின்றார். ஆனால், வேதங்களோ பெருமாளைப் பின் தொடர்ந்து வருகின்றது. இந்நிகழ்வு தற்போதும் பெருமாளின் உற்சவ விழாக்களில் திருவீதி உலாவின் போது காணமுடிகிறது. இதனையே பிள்ளைத்தமிழில், பைந்தமிழ் பின் சென்ற பச்சைப் பசுங் கொண்டலே என்றார் குமரகுருபர சுவாமிகள்.

வடமொழி வேதமும் திவ்யப் பிரபந்தமாகிய தமிழ் வேதமும் பொருளொற்றுமையால் ஒன்றே ஆகும். வடமொழியில் பிரமாண நூல்களைக் கொண்டு திவ்யப் பிரபந்த பாசுரங்கட்கும், திவ்யப் பிரபந்தப் பாசுரங்கள் கொண்டு வடமொழி பிரமாண நூல்களுக்கும் இருமொழி வல்லவர்களை உரைவளம் எடுத்துகாட்டும் போது அதன் உண்மை பொருள் நமக்கு விளக்கமாகவும், வியப்பாகவும் இருப்பதை உணரமுடியும்.

**நாலாயிர திவ்யப் பிரபந்தத்தில் பண்கள், தாளங்கள்**

விட்டுச் சித்தன் சொன்னமாலை பத்தும் பண்ணின்பம் வரப் பாடும் பத்தர்
- பெரியாழ்வார் திருமொழி (3-4-11)

கலியன் பண்ணார் பாடல்
- குலசேகராழ்வார், பெருமாள் திருமொழி (1-9-10)

சடகோபன் சொல் சந்தங்கள் ஆயிரம்
- நம்மாழ்வார் திருவாய்மொழி (10-9-11)

இத்தொடர்களால் திவ்யப் பிரபந்த பாசுரங்கள் பண் அமைய இசையுடன் பாடப்பட்டவை என்பதை அகச்சான்றாக அறியமுடிகின்றது. நாலாயிர திவ்யப் பிரபந்த நூலில் 29 பண்களும் 7 வகையான தாளங்களையும் காணமுடிகின்றது. இப்பாசுரங்களை பண்ணிசையாகவும் பல்வேறு இராகங்களையும் கொண்டு இசையரங்குகளாகவும் இறைவன் திருமுன்பு சேவா காலம் என்னும் பாராயணமாகவும், அரையர் சேவை மூலமாக இனிய சந்தத்தோடும், அபிநயத்தோடும் இயல் இசை நாடகம் என்னும் முத்தமிழையும்

போற்றும் வகையில் இப்பாசுரங்கள் இன்றளவும் இசையால் இறைவனுக்கு விண்ணப்பிக்கப்பட்டு வருகின்றது.

"ஆழ்வார்களேற்றம் அருளிச் செயலேற்றம்"

"ஆழ்வார்கள் வாழி அருளிச் செயல் வாழி"

**முடிவுரை**

ஆழ்வார்கள் பாடல்கள் பக்திக்கு வரம்பாக அமைந்திருக்கின்றன. தேனாக, கரும்புச் சாறாக, அமுதாக இனிக்கும் பாசுரங்கள் இவையாகும். நாலாயிர திவ்யப் பிரபந்த பாசுரங்கள் ஆழ்வார்களுடைய ஞான அனுபவ நிலையைப் புலப்படுத்துவன ஆகும். இன்றைக்கு நாம் சேவிக்கும் நாலாயிர திவ்விய பிரபந்தம் நாதமுனிகளின் தவப் பயனாலே நமக்குக் கிடைத்த அரிய செல்வம். "கவி பாட வல்லவர்கள் அவன் புகழையே பாட வேண்டும். அடியார்கள் கூடி ஆரவாரம் செய்து இன்னிசையால் அவன் புகழ் பாடிட வேண்டும்" என்பார் நம்மாழ்வார். அவ்வாறே, அன்பு நிறையப் பெற்ற மனத்தினால் இசையோடு இறைவனைத் தொழுதெழ அவனருளால் அவனை அடையும் பாக்கியத்தை நமக்கு நல்க வல்லதாய் பிரபந்தப் பாசுரங்கள் விளங்குகின்றன.

**துணை நூல்கள்**

1. கமலக்கண்ணன். இரா. - நாலாயிர திவ்யப் பிரபந்தம், மூலமும் தெளிவுரையும், வர்த்தமானன் பதிப்பகம், சென்னை - 600 017. (2011)

2. கார்மேகம் . M. - தமிழிலக்கிய வரலாறு, அழகப்பா பல்கலைக்கழகம், பி.ஏ (தமிழ்),விகாஸ் பப்ளிசிங் கவுஸ் (பி) லிட், உத்திரபிரதேசம் - 201301. (2021)

3. சாம்பசிவராவ் (ப.ஆ) - நித்யாநு சந்தானம் (தென்கலை), ஆழ்வார்களின் பாசுரத் தொகுப்பு) திருமலை திருப்பதி தேவஸ்தானம், திருப்பதி - (2017)

4. சீனிவாசன். ரா. - தமிழ் இலக்கிய வரலாறு, அணியகம் வெளியீடு, சென்னை - 600030. (1997)

5. செயராமன். ந.வீ. - சிற்றிலக்கியத்திறனாய்வு, இலக்கியப்பதிப்பகம், தேனாம்பேட்டை, சென்னை - 18. (1980)

6. மணவாள மாமுனிகள் - உபதேச ரத்தின மாலை, செங்கல்வராய நாயக்கர் ஆர்பனேஜ், அச்சு இயந்திரசாலை, வேப்பேரி, சென்னை. (1907)

7. ஸ்ரீ மந்நிகமாந்த மஹாதேசிகன் - ஸ்ரீ தேசிக பிரபந்தம், ஸ்ரீ ராம தேசிகாச்சார்ய சுவாமி, தி லிட்டில் **பிளவர் கம்பெனி,** சென்னை - 600017. (1996)

# *One Who Found to be Blissfully Abode in the Sacred Strains of Kandar Kalivenba*

***Dr.P.Sekar,*** *Assistant Professor, Institute of Advanced Study in Education, Saidapet,Chennai - 600 015.*

***Abstract:***
*Lord Muruga's appearance is depicted by Saint Nakkeerar, Saint Arunagirinaathar, Devaraya Swamigal, Pamban Swamigal, and Vallli hills Sachidanantha Swamigal as the young handsome six faced Lord Murugan appears along with a red golden Spear, a beautiful peacock and higher order rooster. They wrote many beautiful poems about Lord Muruga which have been explicated in Kanthar kalivenba. One will become spell bound if they wish to talk about Kandavel. Because the reader's heart, the mind and the soul will be mesmerized if they try to depict the God. Kandavel This Kandar Kalivenpa was composed by Kumarakurupara, who lived in the 17th century by the Kalipa type of Tamil poen about Senthil Velan. It was written as an application to God.*
***Keywords:*** *Murugan, kandavel, kumarakurupara,kantharkalivenba,senthilvelan*

# கந்தர் கலிவெண்பாவில் உகந்து உள்ளுறைவோன்

**முனைவர் பூ.சேகர்,** உதவிப்பேராசிரியர், கல்வியியல் மேம்பாட்டு நிறுவனம், சைதாப்பேட்டை, சென்னை - 600 015.

**ஆய்வுச்சுருக்கம்:**
செவ்வேலும் சீர்மயிலும் உயர்தனிச்சேவலும் உடனிருக்க எழுந்தருளிய அறுமுகப்பெருமான் அழகை நக்கீரரும் அருணகிரிநாதப் பெருமானும் தேவராய சுவாமிகளும் பாம்பன் சுவாமிகளும் வள்ளிமலை சச்சிதானந்த ஸ்வமிகளும் உருகி உருகி அமிழ்ந்து அமிழ்ந்து தமிழ்ப்பாமாலைகளால் வந்தனம் செய்ததைப் போல குமரகுருபரரும் தமது கந்தர் கலிவெண்பாவில் எம்பெருமான் முருகவேளை கண்ணெதிரில் காட்சியாய் காட்டுகிறார். கந்தவேளைப் பற்றி பேசப் பேச நாவும், வாசிப்பவர் உள்ளமும், நினைப்பவர் நெஞ்சமும் உவகையில் குளிருமே. கந்தவேள் உகந்து உள்ளுறையும் தெய்வமாயிற்றே. அந்த செந்தில் வேலன் பற்றி கலிப்பா வகை தமிழ்ப்பாவகையால் 17-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த குமரகுருபரரால் இயற்றப்பட்டதே இக் கந்தர் கலிவெண்பா. இது, கந்தக் கடவுளிடம் விண்ணப்பம் செய்து கொள்ளும் முறையில் உருவாக்கப் பெற்றுள்ளது.
**திறவுச்சொற்கள்:** முருகன்,கந்தவேல்,குமரகுருபரர், கந்தர்கலிவெண்பா,செந்தில்வேலன்

**பாடல் தொடக்கம்**

வழுக்கிலார் வாய்மொழியே அழுக்கிலா நன் மந்திரமாகும் (வழிபாட்டுமலர், 2023) என்பர் பெரியோர். அப்படி, ஊமையாய் இருந்த ஐந்து வயது பாலகனான (பண்டிதமணி. சி. கணபதிப்பிள்ளை, 1969) குமரகுருபரருக்குப் முருகப் பெருமான் பூவைக் காட்டியதால் இக்குறை நீங்கப் பெற்று பாபுனையும் வல்லமையைப் பெற்று "பூமேவு செங்கமல" என்ற பாடலைத் தொடங்கினாரென்பர். கற்றவர் உண்ணுங்கனியாக அருளப்பெற்ற கந்தர் கலிவெண்பா 122 வரிகளைக் கொண்டுள்ளது. பாட்டின் பொருள் பஞ்சகிருத்திய சைவசித்தாந்த உண்மையாகும் (பண்டிதமணி. சி. கணபதிப்பிள்ளை, 1969).

உலகம் உவப்ப
வலனேர்பு திரிதரு
பலர்புகழ் ஞாயிறு - திருமுருகாற்றுப்படை

“உலகம் மகிழ்ச்சியடைய வானில் வலப்புறம் எழும் ஞாயிறு எழும்போது கண்டவர்களைப் போல, இமைப்பொழுதும் நீங்காமல் உயரத்தில் சுடர்விடும் ஒளி” என்று நக்கீரர் குறிப்பிடுவதைப்போல, எம்பெருமான் முருகனின் அவதாரமகிமை, அவர்தம் திருவிளையாடல்கள், கேசாதிபாத வருணனை, தந்தைக்கு பிரணவத்தை உபதேசித்தது, பிரம்மனை சிறை வைத்தது, சூரனை வதம் செய்தது, கிரவுஞ்ச கிரியைப் தூள் தூளாக்கியது, தெய்வயானை, வள்ளியை மணம் புரிந்தது ஆகிய பொருண்மைகளைத் தேன் சுவைச் சொல் எடுத்து விவரிக்கிறார். மேலும், அறுமுகச்சிவனான கந்தவேளின் ஆறு முகங்களின் அழகையும் பன்னிரு கரங்களின் பராக்கிரமங்களையும் விவரிக்கிறார்.

**உவப்பவருள் உள்ளுறைவோன்**

ஒன்றென்றிரு; தெய்வம் உண்டென்றிரு...

என்று பட்டினத்தடிகள் கூறுவதைபோல தெய்வம் ஒன்று என்று இரு; தெய்வம் உண்டு என்று இரு. அந்த தெய்வமாம் கந்தவேளைப் பற்றி பேசப் பேச நாவும், வாசிப்பவர் உள்ளமும், நினைப்பவர் நெஞ்சமும் உவகையில் கூத்தாடும். கந்தவேள் உகந்து உள்ளுறையும் தெய்வமாயிற்றே. அந்த முருகனை, எவரெவர் உள்ளதில் வைத்து பூஜிக்கிறார்களோ அவரவர் தம் உள்ளங்களில் உள்ளுறைவோனல்லவா.

கருவின்றி நின்ற கருவாய் அருளே
உருவின்றி நின்ற உருவாய்த் ..

என வரும் வரிகளில் “கருவின்றி நின்ற கருவாய்” என்பது,. நம் இறைவன் உலகில் முதலானவன் என்பதன் உட்பொருள தானே அது. அதாவது ஆதியும் அந்தமும் இல்லா அருட்பெரும் ஜோதி என்று மணிவாசகர் குறிப்பிடுவது இதைத்தானோ! அடுத்த வரியில் அருள், அது அன்ன பருப்பொருளா? அருளுக்கு உருவம் உண்டா என்ன? உருவம் உண்டன்று என நினைத்துக் கொண்டோமானால் அந்த உருவம் நம் கந்தவேளின் திருவுருவம், என்கிறார்.

உருவும் அருவும் உருஅருவும் ஆகிப்
பருவ வடிவம் பலவாய்

என வரும் பாடல் வரிகளில் வரும் “உருவும் அருவும் உருஅருவும்” என்பன சிவனாரின் தோற்றங்களாகும். அதை இங்கு விவரிப்பதன் மூலம் முருகனும் சிவனும் ஒருவனே என்பதை நிறுவுகிறார். மேலும்,

“கரம் குவிவார் உள்மகிழும் கோன் கழல்கள் வெல்க” என மணிவாசகர் எடுத்தியம்புவதும் ‘உள் உறையும்’ நாதனைத்தான் என்று சொல்லவும் வேண்டுமோ!

காரைக்கால் அம்மை குறிப்பிடும் தமிழ் வேத்தில்,

இடர்களையா ரேனும் எமக்கு இரங்கா ரேனும்
படரும் நெறி பணியா ரேனும் — சுடர் உருவில்
என்பறாக் கோலத் தெரியாடும் எம்மானார்க்கு
அன்பறாது என்நெஞ் சவர்க்கு

என்பதிலிருந்தும்

வானத்தான் என்பாரும் என்கமற் றும்பர்கோன்
தானத்தான் என்பாரும் தெமெங்க — ஞானத்தான்
முன்நஞ்சத் தாலிருண்ட மெய்யொளிசேர் கண்ட த்தான்
என் நெஞ்சத்தான் என்பன்யான்

'சிவபெருமான் சிவலோகத்தில் இருக்கிறார் என்று கூறுபவர்கள் கூறட்டும் மற்றும் கயிலாயத்தில் வீற்றிருக்கிறார் என்றும் கூறட்டும். ஆனால் அவர் என் நெஞ்சில் இருக்கிறார் என்பேன் நான்' என்பது அம்மையின் வாக்காகும் (ஆ.பக்தவச்சலம், 2005).

இதையே, நாவுக்கரசு சுவாமிகள்,

.......
காதன்மையால் தொழு மடியார் நெஞ்சி னுள்ளே
கன்றாப்பூர் நடுதறியைக் காணலாமே.... (ஆறாம் திருமுறை)

நெற்றியில் திருநீரும், கழுத்தில் உருத்திராக்க மாலையும் அணிந்தவர்கள் யாராக இருந்தாலும் சிவனடியாராக நினைத்து அன்பு பாராட்ட வேண்டும். இறைவர்க்குச் செய்யும் தொண்டாகவே நினைத்து இவர்கட்கும் அன்பினால் தொண்டு செய்ய வேண்டும். இப்படி வாழும் அடியார் நெஞ்சினுள் இறைவர் குடியிருப்பார்.

.......
கலங்காதே தொழுமடியார் நெஞ்சினுள்ளே
கன்றாப்பூர் நடுதறியைக் காணலாமே.... (ஆறாம் திருமுறை)

யாசிப்பவருக்கு நேரம் காலம் பாராது கொடுக்க வேண்டும். பொய்யை நீக்கி அன்புனால் கொடுக்கவேண்டும். சிவன் ஒருவனே முழுமுதல் தெய்வம் என்றெண்ணி வணங்க வேண்டும். தினமும் பூவும் நீரும் கொண்டு மிகுந்த அன்பினால் தொழும் அடியார் நெஞ்சினுள்ளே இறைவனைக்காணலாம் (ஆ.பக்தவச்சலம், 2005).

கம்பராமாயணத்தில் வரும் வரிகள் சிலவற்றைக் காணலாம்.

உள் உளன்; புறத்து உளன்; ஒன்றும் நண்ணலான்;

என்றும்,

வெய்யார் முடிவு இல்லவர் விசியபோது
"உய்யான்" எனும் வேலையின் "உள் உறைவோன்"

என்றும், கம்பராமாயணத்தில் வரும் வரிகளை ஈண்டு நோக்கத்தக்கது (கிருபாநந்த வாரியார் (2011).

**அழகன்**

எம்பெருமான் முருகனின் உருவத்தைக் குமரகுருபரர், திருமுடியிலிருந்து தொடங்கி திருவடி வரை வருணிக்கும் கேசாதிபாத வருணனை செய்கிறார்.

நவரத்தினங்கள் பதிக்கப் பெற்ற முருகனின் மணி முடிகள் கண் கூசும் ஒளி வீசுகின்றன .நெற்றியில் இலங்கும் திருநீரானது, துண்டமாகிய ஆறு பிறைகளை வரிசையாகப் பதித்தது போன்று உள்ளது . பன்னிரண்டு நயனங்களோ தாமரை பூத்தது போல் அருளுகின்றன. அண்ணலின் காதுகளில் உருளும் மகரக் குழைகளோ பல சூரியர்கள் ஏக காலத்தில் ஒரு சேர உதித்தது போல பளீரிடுகின்றன. இதையே தேவராய சுவாமிகள் தமது கந்த சஷ்டிக்கவசத்தில், செங்கதிர் வேலோன் என விளிக்கிறார். முருகனின் புன்சிரிப்பு நிறைந்த குமுதச்செவ்வாய் நமது பிறவித் தாகத்தைத் தீர்க்கும் !பெருமொழிகள்! பொன்னால் ஆன மணிகளால் அலங்கரிக்கப்பட்ட மார்பும், கழுத்தில் கண்டி என்று சொல்லக்கூடிய உருத்ராக்க மாலையும், மென்பட்டு ஆடையும்இடுப்பில் கட்டிய , அரைஞாணும் அதற்கு மேல் அணிந்துள்ள ,அழகான கச்சையும், அறைஞான் மணியோடு சேர்ந்து ஆடுகின்ற அறைவடங்கள் என்கிற திருவரையும் என இங்கு வர்ணிக்கப்படும் இந்த அழகை குமரகுருபரரின் எழுத்தில் உருவான மற்றுமோர் இலக்கிய அமுது முத்துக்குமாரசாமிப் பிள்ளைத்தமிழ் எனும் நூலின் செங்கீரைப் பருவத்திலும் தேவராய சுவாமிகள் இயற்றிய

கந்த சஷ்டிக் கவசத்திலும், பாம்பன் குமரகுருதாச சுவாமிகளியற்றிய ஷண்முக க் கவசத்திலும் வர்ணிக்கப்படுவதைக் காணலாம்.

........ மின்னுருவம்
தோய்ந்த நவரத்னச் சுடர் மணியாற் செய்த பைம்பொன்
வாய்ந்த கிரண மணிமுடியும்தேய்ந்த பிறைத்—
துண்ட மிருமூன்று நிறை தோன்றப் பதித்தனைய
புண்டரம் பூத்த நுதற் பொட்டழகும்விண்ட—
பருவமலர்ப் புண்டரிகம் பன்னிரண்டு பூத்தாங்கு
அருள் பொழியும் கண்மலர் ஈராறும்பருதி—
பலவும் எழுந்து சுடர் பாலித்தாற் போலக்
குலவு மகரக்குழையும்நிலவுமிழும்—
புன்முறுவல் பூத்தலர்ந்த பூங்குமுதச் செவ்வாயும்
ஜன்ம விடாய் தீர்க்கும் திருமொழியும்

என்று வர்ணிப்பதன் மூலம் அந்த அழகனின் சாட்சியாக அவன் அழகை வர்ணிக்கிறார்.

**அறிவுச்சுடர்**

அறிவுக்கு அறிவாகி அவ்வறிவுக்கு எட்டா
நெறியில் செறிந்தநிலை நீங்கிப் ..

மேற்கூறிய வரியில் "அறிவுக்கு அறிவாகி" என்பதில், ஜீவராசிகளுக்கு அறிவை வழங்கி அந்த அறிவு செயல்பட காரணகாரனாக இருக்கக் கூடியவனாக இருக்கிறான் அந்த முருக்கடவுள் என்கிறார். அதனால் தான் கந்தவேளை உகந்து உள்ளுறையும் தெய்வம் என்கிறோம்.

ஆணவமான படலம் கிழித்து அறிவில்
காணரிய மெய்ஞ்ஞானக் கண்காட்டிப்

இந்த வரிகளில் "அறிவில் காணரிய மெய்ஞ்ஞானக் கண்காட்டி", ஆம், அறிவு என்பது வெறுமனே செய்திகளின் குவியல் / சேகரம் என்றில்லாமல் அது உயர் அறிவாகவும் (மெய்ஞ்ஞானம்) பரிணமிப்பதற்கு அவன் தயவு இருந்தால் மட்டுமே சாத்தியப்படும் அல்லவா. அதை காட்டுவிப்பவனும் அவனே என்கிறார்.

அடிஞானத் தாற்பொருளும் ஆன்மாவும் காட்டிக்
கடியார் புவனமுற்றும் காட்டி...

மேலும், மெய்ஞ்ஞானம் கிடைக்கப் பெற்றவுடன் அந்த தனி உயிரிக்கு (*Organism*) ஆன்மாவைக் காட்டுவிக்கும் வேலையையும் செய்கிறான் கந்தவேள். ஒன்றிற்குள்ளொன்றாக இருக்கும் ஒவ்வொன்றையும் அறியப்படுத்துகிறான். அதாவது, பாலிற்குள் உள் உறைந்திருக்கும் நெய் போல.

**அருட் தொழில்**

இறைவன் என்று ஆன பிறகு அருள் வழங்குவதுதானே அவர்கள் தொழில். இதில் கந்த புராணத்தில்,

"அன்பு சார்ந்திடும் அருளெனும் குழவியு மணையு மாங்கவை... என்று குறிப்பிடுவதைபோல, வள்ளல் பெருமான்,
அப்பாநான் வேண்டுதல்கேட் டருள்புரிதல் வேண்டும்
ஆருயிர்கட் கெல்லாம்நான் அன்பு செயல் வேண்டும்.. என்பார்.
இங்கும்,
அருள் பொழியும் கண்மலர் ஈராறும்பருதி—... என்றும்
....ஈராறு
அருள்விழியும், மாமுகங்கள் ஆறும்விரிகிரணம்—... என்றும்,

கடியேற்கும் பூங்கமலக் கால்காட்டி ஆட்கொண்டு
அடியேற்கும் முன்னின்று அருள்.
என்று முடிக்கிறார் குமரகுருபரர்.

இதையே தான் அருணகிரி நாதப்பெருமான் தம் திருப்புகழில்,

காலமுமுணர்ந்து ஞானவொளிகண்கள்
கான அருளென்று பெறுவேனோ

என்கிறார்.

இதையே,

......வேல்
விடுங்கோ னருள்வந்து தானே யுமக்கு வெளிப்படுமே. ...

என்றும்

பொக்கக் குடிலிற் புகுதா வகைபுண்ட ரீகத்தினுஞ்
செக்கச் சிவந்த கழல்வீடு தந்தருள்....

என்று கந்தக்கடவுளின் கழலே வீடு, அதை தந்தருள் என்கிறார்.

கைவைத்த வீடு குலையுமுன்னே வந்து காத்தருளே. ...

என்றும், கந்தர் அலங்காரத்திலும்,

ஆறுமுகமான பொருள் நீ அருள வேண்டும்
ஆதி அருணாசலம் அமர்ந்த பெருமாளே

என்று திருப்புகழிலும் ஓசைமுனி அருணகிரிநாதப் பெருமான் வேண்டுவதை இங்கு இணைத்துக் காண்பது இன்பம் தரும்.

**முடிவுரை**

பொன் பொருள் போகத்திற்காக இறைவறை வழிபடும் நிலை போக வேண்டும். பயன் கருதாமல் வழிபடும் அன்பர்களின் மனதில் இறைவன் வந்து தங்குவது நிச்சயம்.

'மாசற்ற மனமே ஈசன் கோயில்'

குற்றமற்ற தூய மனதில் இறைவர் குடிகொள்கிறார். மனம் தீயவற்றிலிருந்து விலக வேண்டும். கருவி கரங்கள் எல்லாம் இறைவருக்காகவே பயன்படுத்தப்பட வேண்டும். ஒரே நெறியில் நிற்க வேண்டும். கொடுக்கும் பண்பு உள்ளத்தில் குடிகொள்ள வேண்டும். இப்படியெல்லாம் வாழ்ந்தால் நம் உள்ளத்தில் கந்தன் குடி கொள்வார்! அப்படிக் குடி கொண்டுள்ள முருகனை நாம் கண்டு கொள்ள (உணர) முடியும். கந்தர் கலிவெண்பாவை நித்திய நியம மந்திரமாக ஓதுபவர்கள், இம்மை மறுமை இன்பங்களை யெய்தும் முறையில் எய்தி, வீடுபேரடைவர் என்கிறார், பண்டிதமணி. சி. கணபதிப்பிள்ளை (1969) தமது கந்தர் கலிவெண்பா 1969 பதிப்பின் முன்னுரையில். நாமும் கந்தர் கலிவெண்பாவை நித்திய நியம மந்திரமாக ஓதி, வாழ்வில் உய்வோமாக!

**துணைநூற் பட்டியல்**

கிருபாநந்த வாரியார். (2011). வாரியார் விரிவுரை விருந்து, வானதி பதிப்பகம், சென்னை.

எஸ்.ஜயலக்ஷ்மி. (செப்டெம்பர் 20, 2013). கந்தர் கலி வெண்பா: ஓர் செந்தமிழ்ப் பாமாலை, தமிழ் இந்து. https://tamilhindu.com/2013/09/kandhar-kali-venba/

மயிலை சிவா. (ஆகஸ்டு 7, 2014). முருகவேள் கிரௌஞ்சனை அழித்த வரலாறு, தினமணி. சென்னை. https://www.dinamani.com/weekly-supplements/vellimani/2014/Aug/07/முருகவேள்-கிரவுஞ்சனை-அழித்-953388.html

வழிபாட்டுமலர் (2023). அருள்ஞானப் பெருவெளி அறக்கட்டளை, காஞ்சிபுரம்.

வே.சங்கரப்பிள்ளை. (1969). திருச்செந்தூர் கந்தர் கலிவெண்பா, மாவை முருகன் மார்கழி மாத பஜனை சபை வெளியீடு. மாவிட்டபுரம்.

ஆ.பக்தவச்சலம். (2005). பன்னிரு திருமுறை ஆய்வுக்கட்டுரைகள்.

# *Dance forms Associated with Lord Tygarajar cult of Saptavidanga Temples*

*Author: **S.Divya,** Researcher,*
*No. 4 Vellalar Street, Thirunallar Karaikal, Puducherry*
*Moderator: M.K.Vijayavenugopal, Professor, EFEO Centre, Puducherry.*

***Abstract:***

*Saptavidanga temples are the cluster of seven temples which includes Thiruvarur, Nagapattinam,Thirunallar,Thirukkaravasal,Thirukkuvalai,Thiruvaymoor and vedaranyam located in the Delta region of Tamilnadu and Puducherry.These temples are centres of unique Tygarajar cult in which Lord Tygarajar,a somaskanda form of siva is considered as principle deity of worship.Tygarajar cult which incorporates in its rituals the ideologies of Thirumurai and tirumanthiram to a greater extent is considered to be one of the secretive cult of Tamil land.In these saptavidanga temples Lord Tygarajar worship is also associated with seven unique dance forms which imprints in it the concepts of yoga.Thiruvarur being the important temple centre of Tygarajar cult is associated with ajaba dance (dance form resembling the breathing movement) while other vidanga temples has their own unique dance forms which are exhibited during the festivities of Lord Tygarajar.This essay briefs the unique temple rituals of Tygarajar cult alongside the detailed description on the dance forms associated with it.*

***Keywords:***

*Saptavidanga temples, Tygarajar cult, somaskanda, Thiruvarur temple, Thirumurai, Tirumanthiram,Ajaba dance, Tygarajar rituals, saptavidanga temple festivals,Yoga.*

***References:***

*[1]Sivavadivangal by M sivagurunatha pillai published by tamil university 1991*

*[2]Sivasthala manjari by T.Subramaniya pillai second edition 1912 printed at South Indian press and P.R.Raghavaiyer press*

*[3]Kachiyappa Sivachariya Swami's Kandapuranam presidency press 1908*

*[4]Dr.M.Rajamanickannar's periyapurana research book published by alamu publication 2002*

*[5]Thiruppughal by Arunagirinathar Thiruvarasu book stall release*

*[6]Tamilnadu inscriptions 2004 and 2005 publications by Tamilnadu Archeological department*

*[7]South Indian inscriptions volume 2,3 and volume 17 Archeological survey of India publications*

*[8]Tamil Country Under Vijayanagar by A.Krishnasami published by Annamalai University 1964*

*[9]Thirukkarayil puranam by chidamedition.publishedbaram chettiyar.orginally translated from Sanskrit by veluchamy kavirayar, Ganesh printing press release 1924*

*[10].Thiyagarajar kazhinedil by kamalai gnanaprakasar*

*[11.]Kamalalaya ksetra thatuvam by N.Subramaniya iyer released as kamalalaya special publication 1951*

*[12.]Thiruvarur puranam by sambanda munivar a kalarathnagara press release*

*[13.]Tanjore maratha period politics and social life- K.M.Venkattaramaiyya, A Tamil university publication 1984*

*[14.]The mythology of Tamil Saiva Talapuranam by David Shulman, The Tamil Puranas types and Prototypes, published by Princeton University press*

*[15.] Ottakoothar's moovarula-A kalakshetra edition.published by Dr.U.Ve.Sa library*

*16.Srimath Bhagavad puranam-E.M.Gopalakrishna kone 1936 print*

*[17.]Thirunagaikaronam puranam by Meenakshi Sundaram pillai published by chennai asiatic press*

*[18.]Vedaranyam puranam by Aghoradevar printed at srilalitha printing press a 1898 copy*

*[19.]Kasiaranya mahatmyam by venkatrama ganabathigal printed at Ariyaprakashini press 1915 release.*

*[20.]Chidambaram kankatti sri maraignana sambanda nayanar's kamalalaya cirappa alias Thiruvarur puranam published in 1961 by Dr.U.Ve.Sa library*

*[21]Dr.Mu.Arunachalam's Tamil Ilakkiya varalaru 12th century part 1 and 2,a parker publication edition*

*[22.]Thiruvarur Thirukovil by Kudavayil Balasubramanian -Arulmigu Thiyagaraja swamy temple publication*

*[23.]The Colas - K.A.Nilakanda Sastri -second edition by University of Madras,1955*

*[24]Thirunallar sthala varalaru by Dhandapani Desikar*

*[25].Tygarajar muchukundasahasranamam-sanskritdocument.org dt 18.04.2020*

*[26.]Tyagarajar Cult in Tamil Nadu. A Study in Conflict and Accommodation by Rajeswari Ghose.Motilal banarasidass publishers,1996*

*[27].Panniru Thirumuraigal varalaru by Vellaivarannar, Annamalai University publication 1972*

*[28.]Nagapattinam district inscriptions published by Tamilnadu India department 2007*

*[29.]Thanjai Maratta inscriptions a tamil university publication*

*[30.]Saiva Adheenangal by Ooran adigal*

*[31.]Thirumoolar's Tirumanthiram T.C.Parthasarathy yogi edition printed at vidyarathnagara press 1940*

*[32.]Dr.Mu.Arunachalam's Tamil Ilakkiya varalaru 16th century part 1 and 2,a parker publication edition and gandhi vidhyalayam publication respectively*

*[33.]Tamilagattil vijayanagar aatchi (1446-1530) by Dr.Singaravelan a Saraswathi mahal library publication*

*[34.]Thanjai nayakkars by Kudavayil Balasubramanian, a Saraswathi mahal library publication*

*[35.]Thanjai Marattiya mannar varalaru- K.M.Venkattaramaya a Tamil university publication 1987*

*[36].Maratta Rajas of Tanjore - K.R.Subramanian. published by author 1928*

*37.Nanilam inscriptions volume 1,2,3 publications of Tamilnadu Archeological research department*

*[38].Sivagnanabotham by Sri Meikkanda nayanar-Thiruvavaduthurai Athinam publication 1949*

வாரணம் பன்னாட்டுச் சமய ஆய்விதழ் தொகுதி: 1 இதழ்: 1 மார்ச் 2025
VAARANAM INTERNATIONAL JOURNAL OF RELIGIOUS STUDIES | VOL: 1 ISSUE: 1 MARCH 2025
Published by Niththilam Publications | www.niththilampublications

V I J R S 2 0 2 5

# சப்தவிடங்க திருத்தலங்களில் தியாகராஜர் வழிபாடும் எழுவகை நடனங்களும்

***கட்டுரையாளர்:*** சு.திவ்யா,ஆய்வாளர்,நெ4 வெள்ளாளர் தெரு, திருநள்ளாறு. காரைக்கால், புதுச்சேரி

***நெறியாளர்:*** முனைவர்.கோ.விஜயவேணுகோபால், பேராசிரியர், *EFEO centre*, புதுச்சேரி

**ஆய்வுச்சுருக்கம்**

திருவாரூர் தமிழக சமய வரலாற்றில் மிக முக்கிய இடம் கொண்டிருக்கும் மூதூர். மரமும், புற்றும் வழிப்பாட்டிலிருந்த காலத்திலிருந்தே கோயிலாக நிலைப்பெற்றிருப்பது திருவாரூர் பூங்கோயில். அத்தகைய சிறப்பு வாய்ந்த திருவாரூர் திருகோயிலின் மூலவர் வன்மீகநாதரை விடுத்து முதன்மை வழிப்பாட்டு தெய்வமாக விளங்குவது தியாகராஜர் என்னும் உற்சவர் வடிவே. சிவன் உமை கந்தன் ஆகிய மூன்று தெய்வங்களின் கூட்டு சிலைத் தொகுப்பே சோமாஸ்கந்தமூர்த்தி வடிவமாகிய தியாகராஜர்.

தியாகராஜர் வழிபாட்டு மரபு திருவாரூரை மைய தலமாகக் கொண்டு மேலும் ஆறு திருக்கோயில்களில் முக்கிய மற்றும் தனித்துவமான வழிப்பாட்டு மரபாகத் திகழ்கிறது. திருவாரூர், நாகப்பட்டிணம், திருநள்ளாறு, வேதாரண்யம், திருக்காரவாசல், திருவாய்மூர், திருக்குவளை (திருக்கோளிலி) ஆகிய அந்த ஏழுத் திருக்கோயில்களும் சப்தவிடங்கத் தலங்கள் என்றழைக்கப்படுகின்றன.

திருவாரூர் திருக்கோயிலின் தியாகராஜ சுவாமிக்கு என்று தனித்துவமானது அஜபா நடனம். அதே போன்று ஏனைய சப்த விடங்கத் தலங்களும் தங்கள் தல தியாகராஜர் வழிபாட்டோடு இணைந்த தனித்துவமான நடனங்களை கொண்டுள்ளன.திருமுறைகள் மற்றும் திருமந்திர கோட்பாடுகளோடு நெருங்கிய தொடர்புடைய தியாகராஜர் வழிபாடு குறித்தும் அதன் திருவிழா கால சமய சடங்குகளில் ஆடப்படும் யோகத்தை அடிப்படையாகக் கொண்ட ஏழு சிறப்பு நடனங்கள் குறித்தும் விரிவாக விளக்குவதே இவ்வாய்வு கட்டுரையின் நோக்கமாகும்.

**திறவுச்சொற்கள்:**

சப்தவிடங்கத் தலங்கள், தியாகராஜர் வழிபாடு, சோமாஸ்கந்தர், திருவாரூர் திருக்கோயில், சப்தவிடங்க கோயில் திருவிழாக்கள், அஜபா நடனம், தியாகராஜரின் ஏழு நடனங்கள் திருமுறை,திருமந்திரம்,யோகம்

### சப்தவிடங்க திருத்தலங்கள் - ஓர் அறிமுகம்

திருவாரூரை மைய தலமாகக் கொண்டு மேலும் ஆறு திருக்கோயில்களில் முக்கிய வழிப்பாட்டு மரபாகத் திகழ்வது தியாகராஜர் வழிபாடு.சப்தவிடங்கத் தலங்கள் அனைத்தும் முசுகுந்தன் என்னும்

அரசனின் புராணக்கதையோடு தொடர்புப் படுத்தப்பட்டுள்ளன. முசுகுந்தன் என்னும் சோழ அரசன் தியாகராஜராகிய சோமாஸ்கந்த மூர்த்தியை இந்திரனிடமிருந்து பெற்று திருவாரூர் உள்ளிட்ட ஏழு இடங்களில் பிரதிட்டை செய்து வணங்கினான் என்பதே புராணக் கதையின் சாராம்சம்.

> சீரார் திருவாரூர், தென்னாகை நள்ளாறு
> காரார் மறைக்காடு காறாயில் பேரான
> ஒத்த திருவாய்மூர், உகந்த திருக்கோளிலிங்கத்த
> விடங்கத் தலம்.

திருவாரூர், நாகப்பட்டிணம், திருநள்ளாறு, வேதாரண்யம், திருக்காரவாசல், திருவாய்மூர், திருக்குவளை (திருக்கோளிலி) ஆகிய ஏழுத் திருக்கோயில்களே சப்தவிடங்கத் தலங்களாகும்.இத்தலங்கள் அனைத்தும் காவிரி தென்கரையில் அமைந்திருக்கும் பாடல்பெற்ற சிவாலயங்கள் ஆகும்.

சப்தவிடங்கத் தலங்களாக கருதப்படும் இவ்வேழு தலங்கள் பற்றிய முதல் குறிப்பு கந்தபுரணத்தில் காணக்கிடைக்கின்றது. இத்தலங்கள் அனைத்தும் பெரியபுராணத்தில் தேவாரமூவர் முதலிகளால் அற்புத செயல்கள் நிகழ்த்தப்பட்டதாக அடையாளம் கூறப்படும் திருக்கோயில்கள் .திருமுறைகளின் தாக்கம் அதிகம் உள்ள தியாகராஜர் வழிப்பாட்டு மரபில் திருவாரூர் மையத் தலமாக அமைந்திருக்க அதனை சுற்றியிருக்கும் விடங்கத் தலங்களின் தேர்வு திருவாரூரிலிருந்து தேவார மூவர் முதலிகள் தலயாத்திரையாக சென்ற தலங்களை அடிப்படையாக கொண்டு தொகுக்கப்பட்டிருக்க வாய்ப்புள்ளது. இத்தலயாத்திரை குறிப்புகள் வாயிலாக விடங்கத் தலங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கலாம் என்று அறுதியாக கூறச்சான்றுகளில்லை.

தமிழகத்தில் விஜயநகர ஆட்சி அதிகாரம் நிலைப்பெற்றிருந்த 14ஆம் நூற்றாண்டிலே இத்திருக்கோயில்கள் தொகுக்கப்பட்டு சப்தவிடங்கத் தலங்களாக வகைப்படுத்தப்பட்டிருக்கலாம் என்று நம்பப்படுகிறது. அதே காலக்கட்டத்தில் தமிழகத்தில் பெரும் எண்ணிக்கையில் செயல்பட்டு வந்த மடங்களின் நேரடி தொடர்புடைய தலங்களாகவும் இத்திருக்கோயில்கள் இருந்திருக்கலாம். கிட்டத்தட்ட இதே காலக்கட்டத்தில் சப்தஸ்தான தலங்களும் தொகுக்கப்பட்டிருக்கலாம். சப்த ஸ்தான கோயில்கள் 15ஆம் நூற்றண்டில் இயற்றப்பட்ட அருணகிரிநாதரின் திருப்புகழில் ஏழுத் திருப்பதிகளாக குறிப்பிடப்பட்டிருக்கிறது. மேலும், கல்வெட்டுச் சான்றுகள் படி சப்தஸ்தான கோயில்கள் அனைத்தும் தேவதானமாக வழங்கப்பட்ட ஊர்களில் அமைந்திருக்கின்றன என்பதும் குறிப்பிடத்தக்கது. ஆனால், இதுப் போன்ற பொது தொடர்பினை சப்தவிடங்கக் கோயில்களில் அடையாளம் காண முடியவில்லை.

வழிப்பாட்டு முறை மரபின்படி இணைக்கப்பட்டிருக்கும் இந்த கோயில்கள் சப்தவிடங்கம், சப்தஸ்தானம் என்ற பெயர்களை வெகு பிற்காலத்திலே பெற்றிருக்கலாம். அதே காலக்கட்டத்திலே அவைகளை

ஒருங்கிணைக்கும் தலப்புராண கதைகளும், திருவிழா நிகழ்வுகளும் தோன்றி நிலைப்பெற்றிருக்க வேண்டும் என்றும் கருத இடமுள்ளது.

**தியாகராஜர் - ஓர் அறிமுகம்**

திருவாரூர் பூங்கோயில் சிதம்பரத்திற்கும் மூத்தத் தலமாக கருதப்படுவது,

ஒருவனாய் உலகேத்த நின்றநாளோ
ஒருருவே மூவுருவமான நாளோ

என்ற 6ஆம் நூற்றாண்டை சார்ந்த அப்பரின் தேவார பதிக வரிகள் அதன் தொன்மையை உணர்த்துவதாகும். அத்தகைய சிறப்பு வாய்ந்த திருவாரூர் திருகோயிலின் முதன்மை வழிப்பாட்டு தெய்வமாக விளங்குவது தியாகராஜர் என்னும் சோமாஸ்கந்தர் உற்சவர் வடிவம்.சதாசிவத்தின் ஐந்து திருமுகத்தில் இருந்து உருவாக்கப்பட்ட சிவனின் 25 வடிவங்களில் ஒன்றாக ஈசானத்திலிருப்பதே சோமாஸ்கந்தர் வடிவு என்று ஆகமங்கள் உரைக்கின்றன . இது சச்சிதானந்த வடிவாக கருதப்படுவது. சத் + சித் + ஆனந்தம் - உண்மை + அறிவு + ஆனந்தம். இத்தத்துவத்தை உணர்த்தி நிற்பதே சோமாஸ்கந்த வடிவாகும். இதில் சிவயசிவ என்னும் மந்திர வடிவே சோமாஸ்கந்த மூர்த்தியாக உருவகிக்கப்படுகிறது.

திருவாரூரில் தியாகராஜர் வீதிவிடங்கன் என்னும் பெயரிலும் அழைக்கப்படுகிறார். உடனுறையும் உமை கொண்டி என்று அழைக்கப்படுகிறார்.பிற சப்தவிடங்கத் தலங்களிலும் பின்வரும் பெயர்களில் அத்தலத்திற்குரிய தியாகராஜர் அழைக்கப்படுகிறார்.

திருவாரூர் - வீதிவிடங்கர்
திருக்குவளை - அவனிவிடங்கர்
திருநள்ளாறு - நகவிடங்கர்
திருக்காரவாசல்- ஆதிவிடங்கர்
வேதாரண்யம் - புவனிவிடங்கர்
திருவாய்மூர் - நீலவிடங்கர்
நாகப்பட்டிணம்- சுந்தரவிடங்கர்

தியாகராஜர் வழிப்பாட்டுடன் தொடர்புடையதாக சப்தவிடங்கத் திருத்தலங்களில் இருக்கும் மரகத அல்லது ஸ்படிக லிங்கங்களுக்கும் இவ்விடங்கர் என்ற பெயரே வழங்கப்பட்டு வருகிறது. விடங்கர் என்ற சொல் தேவாரத்தில் முதன்முதலாக காணக்கிடைக்கிறது.

இவள் நமைப்பல பேசத் தொடங்கினாள்
அவண மன்றெனி லாரூ நரனெனும்
பவனி வீதி விடங்கனைத் கண்டிவள்

த்வனி யாயின வாறென்றன் தையலே

தோவார பதிகங்களுக்கு அடுத்தபடியாக விடங்கர் பற்றிய குறிப்பு 9ஆம் திருமுறையில் பூந்துருத்தி காடன் நம்பியின் பதிகத்திலும், திருமாளிகைத் தேவரின் பதிகத்திலும் வந்துள்ளது.

இவ்வாறு இலக்கியங்களில் காணப்படும் விடங்கர் பற்றிய குறிப்புகள் திருமுறைகள் தொகுக்கப்பட்ட 11ஆம் நூற்றாண்டு காலக்கட்டம் தொடங்கி அதன் பின்னான இரு நூற்றாண்டுகளை சார்ந்த எண்ணற்ற கல்வெட்டுக்களில் காணப்படுகிறது.

தியாகராஜர் வழிபாட்டு மரபு ரகசிய வழிப்பாட்டு சடங்குகள் கொண்டுள்ளதால் சோமாஸ்கந்த மூர்த்தியாகிய தியாகராஜரின் மூர்த்தத்தில் சிவன் மற்றும் உமையின் முகம் மட்டுமே வெளித் தெரிய முழு உருவமும் மறைத்து (கந்தன் வடிவம் உட்பட) அலங்கரிக்கப்பட்டிருக்கும்.

**தியாகராஜர் வழிபாட்டு முறைமைகள்:**

தியாகராஜர் வழிபாட்டு மரபில் பின்பற்றப்படும் சமய சடங்குகள் பல்வேறு சித்தாந்தங்களின் தாக்கங்களையும், அது கடந்து வந்த ஒவ்வொரு நூற்றாண்டிலும் நிகழ்ந்த அரசியல் மாற்றங்களையும் உள்வாங்கியே உருவாகியிருக்கிறது.இன்று உள்ள தியாகராஜர் வழிபாட்டு முறைமைகளில் பெரும்பாலான சடங்குகள் ரகசியமாகவே வைக்கப்பட்டுள்ளது. சப்தவிடங்கத் தலங்களில் இருக்கும் தியாகராஜர் திருமேனிகள் ஏழும் முழுவதும் மறைக்கப்பட்டு சிவன் மற்றும் உமை முகம் மட்டும் வெளித் தெரியுமாறு அலங்கரிக்கப்பட்டுள்ளது. விடங்கத் தலங்களுக்கு உரித்தான தியாகராஜர் வழிபாட்டில் 16 உபசார பொருட்கள் தனித்துவமானதாக அடையாளப்படுத்தப்படுகிறது.

அவை முறையே.

| | | |
|---|---|---|
| பரிவட்டம் | - | தியாகவிநோதம் |
| கிண்கிணி | - | ஆடரவக்கிண்கிணி |
| வாள் | - | வீரகண்டயம் |
| தேர் | - | ஆழித்தேர் |
| மாலை | - | இண்டைமாலை |
| மத்தளம் | - | சுத்த மத்தளம் |
| நாதசுரம் | - | பாரி நாயணம் |
| வாத்தியம் | - | பஞ்சமுக வாத்தியம் |
| பிள்ளைத்தண்டு | - | மாணிக்கத்தண்டு |
| நடனம் | - | அசபை |
| கொடி | - | தியாகக்கொடி |

| | | |
|---|---|---|
| காலம் | - | திருவந்திக்காலம் |
| சாளரம் | - | தென்னந்திருவாசல் |
| சிம்மாசனம் | - | ரத்தின சிம்மாசனம் |
| சபை | - | தேவ |
| விழா | - | பங்குனி உத்திரம் |
| கச்சு | - | ரகசியம் |

இந்த 16 உபசார பொருள்களும் இவ்வழிப்பாட்டு மரபு கடந்து வந்த நூற்றண்டுகளின் ஏதோ ஒரு முக்கிய நிகழ்வின் அடையாளமாக எஞ்சியிருப்பவை.

தியாகவிநோதன் என்ற பெயர் முதலாம் குலோத்துங்கன் கால கல்வெட்டுக்களில் காணப்படுகிறது. தியாகவிநோதன் மாடை, தியாகவிநோதன் பண்டாரம் என்று அவை பல கல்வெட்டுக் குறிப்புகளில் பதிவாகியுள்ளது. முதலாம் இராஜேந்திரன் காலத்திற்கு பிறகு மிக திறமையான அரசனாக தன்னை நிரூபித்த முதலாம் குலோத்துங்கன் நேரடி சோழ அரச வம்ச வாரிசாக அரியணை ஏறவில்லை. எனவே தன் அடையாளத்தை தன் அரசை சட்டப்பூர்வமாக்குவதற்கு மக்களிடையே அன்று மிக உயரிய செல்வாக்கு பெற்றிருந்த திருவாரூர் திருக்கோயில் விடங்கத் திருமேனிக்கு சமய சடங்குகளில் குறிப்பிடத்தகுந்த மாற்றங்களை உருவாக்கி தன் முன்னோர் வழியில் தன்னை முன்னிருத்தியிருக்க வேண்டும். அதன் வெளிப்பாடாகவே பரிவட்டம் அவனின் சிறப்பு பெயரில் குறிப்பிடப்பட்டு வருகிறது என்று நம்பப்படுகிறது.

ஆடரவக் கிண்கிணி இண்டைமாலை ஆகியவற்றின் குறிப்புகள் தேவாரத்தில் கையாளப்பட்டிருக்கிறது. திருவந்திக் காலம் என்னும் சாயரட்சை பூசை திருவாரூர் திருக்கோயிலில் மிகவும் புகழ்பெற்ற ஒரு சமய சடங்காகும். திருவாரூர் பங்குனி உத்திரத் திருவிழா ஏறத்தாழ 30 நாட்கள் நடைபெறும். விழா நிகழ்வுகளில் தொடக்கம் முதல் இறுதி வரை தனித்துவமான பல நடைமுறைகள் பின்பற்றப்படும். திருவிழா காலங்களில் தியாகராஜர் தேவாசிரிய மண்டபம் வரை அஜபா என்னும் தனித்துவமான நடனமாடியபடி ஊர்வலமாக எடுத்து வரப்படுகிறார். அசபை ஆடும் தியாகராஜர் விழா நிகழ்வுகளில் ஊர்வலம் செல்வதற்கான உரிமையை சந்திரசேகர மூர்த்திக்கு கையளிப்பதாக சடங்குகள் உள்ளன. திருவாரூர் தியாகராஜர் கோயில் வழிபாட்டுக்கு என்றே பிரத்தியேகமாக உபயோகப்படுத்தப்படும் இசைக்கருவிகள் பாரி நாயணம், சுத்த மத்தளம் மற்றும் பஞ்சமுக வாத்தியம் என்னும் குடமுழா ஒவ்வொரு திருவந்திக்காப்பு காலத்திலும் வாசிக்கப்படும். இந்த இசைக் கருவிகளை இசைப்பது பாரசைவர் என்னும் மரபினர் இவர்கள் யாமள தந்திரத்தை போற்றுபவர்கள் முன்பு சாக்த வழிபாடு நம்பிக்கை உடையவர்களாக இருந்திருக்கலாம் என்று கருதப்படுகிறது.

பிள்ளைத்தண்டு என்பது ஊர்வலத்தின் போது சுவாமி மூர்த்தம் வைக்கப்பட்டிருக்கும் ஆசனத்தை தாங்கும் நீண்ட மரத் தண்டுகளை இணைக்கும் சிறிய வாரைகளை குறிப்பதாகும். இது பரம்பரையாக குறிப்பிட்ட சில சமூகத்தினரால் மட்டும் கட்டுப்படுவதால் "புள்ளத்தண்டு ரகசியம்" என்று குறிப்பிடப்படுகிறது. தென்னந்திருவாசல் என்பது சிறிய அளவிலான கல் சாளரம் தியாகராஜர் சிம்மாசனம் அமைந்திருக்கும் மண்பத்தின் பக்கவாட்டிலிருக்கும். இதன் மூலம் வேதங்கள் ஓதுவதையும், மூவர் முதலிகளின் தேவார பதிகங்கள் பாடப்படுவதையும் தியாகர் கேட்பார் என்று கூறப்பட்டுள்ளது.

இவை அனைத்துடனும் தியாகராஜருக்கான தனித்துவமான வழக்கங்களாக பச்சை கற்பூரம் அணிதல், செவ்வந்தி தோடணிதல், செங்கழுநீர் மாலையணிதல், தியாகர் என்ற பெயர் பொறித்த ஆடையணிதல், பாகற்காய் பறித்தல், தென்னந் திருவாசல் வழியாக இசை கேட்டல் ஆகியவை இருந்து வருகிறது.

தியாகராஜர் வழிப்பட்டில் இசை முக்கிய இடம் வகிக்கிறது. கோயில் விழாக்களுக்கு என்று தனித்த இசை மரபும் இருந்து வந்திருக்கிறது. தற்போது இது வழக்கொழிந்துவிட்டது (எ.கா. யதாஸ்தானத்தில் சுவாமியை இறக்குகையில் தவில் இன்றி வெறும் நாதஸ்வரம் மட்டும் கண்ட மல்லாரி ராகத்தில் இசைக்கப்பட வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது.)

சப்தவிடங்கத் தலங்களிலும் இந்த வழிபாட்டு முறைகள் பின்பற்றப்பட வேண்டும் என்று வகுக்கப்பட்டிருந்தாலும் இன்றைய காலக்கட்டத்தில் திருவாரூர் திருக்கோயிலில் இவற்றில் பெரும்பான்மையான வழக்கங்கள் பின்பற்றப்படுகிறது. இதற்கு அடுத்தாற்போல் விடங்கத் தலங்களில் திருநள்ளாறில் குறிப்பிடத்தகுந்த அளவில் இந்த நடைமுறைகள் பின்பற்றப்படுகிறது. ஏனைய விடங்கத் தலங்களில் பல தனித்துவமான சடங்குகள் மறக்கப்பட்டுவிட்டன.

தியாகராஜர் வழிபாடு என்னும் தனித்துவமான வழிபாட்டு மரபினை கொண்டுள்ள சப்தவிடங்கத் தலங்கள் திருவிழா காலங்களில் அவ்வழிபாட்டு சடங்குகளோடு இணைந்த ஏழு வகை தனி நடனங்களையும் பெற்றுள்ளன.

**சப்தவிடங்கத் தலங்களான ஏழுத் திருக்கோயில்களுக்குமான தனித்துவமான நடனங்கள்,**

| | | | |
|---|---|---|---|
| 1. | திருவாரூர் | - | அஜபா நடனம் |
| 2. | திருக்காராவாசல் | - | குக்குட நடனம் |
| 3. | நகப்பட்டிணம் | - | தரங்க நடனம் |
| 4. | திருநள்ளாறு | - | உன்மத்த நடனம் |
| 5. | திருக்குவளை | - | பிருங்க நடனம் |
| 6. | திருவாய்மூர் | - | கமல நடனம் |
| 7. | வேதாரண்யம் | - | ஹம்ஸபத நடனம் |

தியாகராஜர் வழிப்பாட்டு மரபில் தொடர்புடைய திருக்கோயில்களில் சமூக மாற்றம் முற்றமைந்த காலமாக 17ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி அல்லது 18ஆம் நூற்றாண்டின் முற்பகுதியினை கருதலாம். இந்த காலக்கட்டத்தில் தான் விடங்கத் தலங்களின் நடன வடிவங்கள் வடிவமைக்கப்பட்டு முன்னர் நடைமுறையிலிருந்த திருவிழா மரபோடு இணைக்கப்பட்டிருக்கலாம் என்று நம்பப்படுகிறது. சப்தவிடங்கத் தலங்களில் திருவாரூர் நீங்கலாக ஆறு நடனவடிவங்களும் யோக நெறிகளை விளக்கும் ஆறு ஆசனங்களை உணர்த்துவதாக வடிவமைக்கப்பட்டிருக்கிறது. சப்தவிடங்கத் தலங்களின் எழுவகை நடனங்களும் யோக நெறியை அடிப்படையாக கொண்டே வகுக்கப்பட்டிருப்பதாக நம்பப்படுகிறது.

**அஜபா நடனம்**

சப்தவிடங்கத் தலங்களில் முதன்மையான தலமாகிய திருவாரூர் மூலாதார தலம் என்று அழைக்கப்படுகிறது. திருவாரூர் திருக்கோயிலின் தியாகராஜ சுவாமிக்கு உரியது அஜபா நடனம். அஜபா நடனம் அல்லது ஹம்ஸ நடனம் பற்றிய குறிப்புகள் 16ஆம் நூற்றாண்டு இலக்கியங்களில் காணப்படுகின்றது. முசுகுந்த சகஸ்ரநாமம் தியாகராஜரை,

ஸ்ரீ அஜபா தாண்டவப்ரியாய!
ஹம்ஸதாண்டவ ஸீப்ரீதாய!
ஸ்ரீ ஹம்ஸ நடநேஸ்வராய!

என்று குறிப்பிடுவதன் மூலம் அவர் அஜபா நடனம் / ஹம்ஸ நடனம் ஆடுபவபராக உருவகிக்கப்படுவது நன்கு விளங்கும். அஜபா என்பதற்கு ஜபிக்கப்படாதது என்று பொருள். உயிர்சக்தியின் அடிப்படையான மூச்சுக்காற்றின் அசைவை நகலெடுத்து ஆடுவதே அஜபா நடனமாகும். அஜபா நடனத்தை பற்றிய விரிவான விளக்கம் அஜபா கல்பம் என்ற நூலில் காணக்கிடைக்கிறது. அஜபா நடனப் பதிகம் என்ற நூலும் இந்நடனத்திற்கானது. சப்த விடங்கத் தலங்களின் எழுவகை நடனங்களில் அஜபா நடனமே காலத்தில் முந்தையது. அஜபா நடனம் ஆடித் தியாகராஜர் எழுந்தருளுகிறார் என்று 16ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த கமலை ஞானப்பிரகாசர் குறிப்பிடுகிறார்.

‘காலுக்கிசைய வசபை நடனம்
காட்டிக் கனகா சனத்திருக்கம்
கருணாநிதியை யாரூரிற் கண்டார்
பிறவிக் காணாரே’ -

யோக நெறியின் அடிப்படை தத்துவத்தை முன்வைக்கும் அஜபா நடனத்தை பின்பற்றியே பிற சப்த விடங்கத் தலங்களின் நடனங்களும் வடிவமைக்கப்பட்டிருக்கிறது.

**குக்குட நடனம்**

திருக்காரவாசல் திருத்தலத்திற்கு உரிய நடனம் குக்குட நடனம். கோழியின் நடையினை ஒத்திசைந்த அசைவுகளை உடையது குக்குட நடனம். குக்குடம் என்னும் ஆசனம் பற்றிய குறிப்பு திருமந்திரத்தில் காணப்படுகிறது. ஆதிவிடங்கன் என்றழைக்கப்படும் தியாகராஜர் ஏனைய விடங்கத் தலங்களை கருத்தில் கொள்கையில் இங்கு அளவில் சிறிய மூர்த்தமாக காணப்படுகிறார். இக்கோயிலின் திருவிழாவின் போது நடைபெறும் நடனத்தில் தற்போது அனைத்து சமூகத்தினரும் பங்குக் கொள்கின்றனர்.

ஒக்க அடியினை யூடுவில் ஏறிட்டு
முக்கி யுடலை முழங்கைத்தனில் ஏற்றித்
தொக்க அறிந்து துளங்கா திருந்திடிற்
குக்குட ஆசனங் கொள்ளாமாமே.

**பாராவாரா தரங்க நடனம்**

இந்த நடனம் நாகப்பட்டிணம் விடங்கத் தலத்திற்கு உரியது. கடலலைகள் எழுந்து வீழ்வது போன்ற அமைப்பை ஒத்த நடனமிது. யோகமரபில் குண்டலினி சக்தி ஆறு ஆதாரங்களை கடக்கையில் யோக சாதகர்கள் சில ஒலிகளை கேட்டுணர முடியும் என்று திருமந்திரம் விவரிக்கிறது. நெய்தல் நிலமான நாகையில் கடலலை ஓசை வெளிப்படும் யோகநெறி கருத்தை அடியொற்றி இந்நடனம் வடிவமைக்கப்பட்டிருக்கலாம்.

கடலொடு மேகங் களிறொடும் ஓசை
அடவெழும் வீணை அண்டரன்டத்துச்
சுடர்மன்னு வேணுக் கரிசங்கின் ஓசை
திடமறி யோகிக்க லாற்றெறி யாதே.

- திருமந்திரம்

**உன்மத்த நடனம்**

இது திருநள்ளாறு தலத்திற்குரியது. உன்மத்த நடனம் பித்துக் கொண்டு தன்னிலை மறந்த நிலையின் மன உச்சத்தை கோடிட்டு காண்பிக்கும் அசைவை ஒத்திருக்கும். திருவாரூருக்கு அடுத்தபடியாக தியகராஜர் வழிபாடு மிகுந்த சிறப்போடு திருநள்ளாறு திருக்கோயிலில் நடக்கிறது. யோக சாதகத்தின் ஒரு நிலையாக உன்மத்த நிலையை திருமந்திரம் குறிப்பிடுகிறது. அந்த கருத்தை முன்வைப்பதாக இந்நடன வடிவம் அமைக்கப்பட்டிருக்கலாம்.

சோதி இரேகைச் சுடரொளி தோன்றிழற்
சோதிப் பிரானந்தம் என்றே குறிக்கொண்பின்
நேர்திகழ் கண்டத்தே நிலவொளி எய்தினால்
ஓதுவரன்னுடல் உன்மத்த மாமே.

- திருமந்திரம்

**பிருங்க நடனம்**

திருக்குவளை தலத்திற்குரிய நடனம் பிருங்க நடனம். மலரில் வண்டு நுழைந்து வெளியேறுவதை ஒத்த அசைவினை வெளிப்படுத்துவதே பிருங்க நடனவடிவாகும். இதுவும் யோக சாதகத்தில் சாதகர்களால் கேட்கப்படும் பத்து ஓசைகளில், ஒன்றான வண்டொளி ரீங்காரத்தை ஒத்திசைத்து அமைக்கப்பட்ட நடன வடிவாக இருக்கலாம் என்று யூகிக்கப்படுகிறது.

மணிக்கடல் யானை வார்குழல் மேகம்
அணிவண்டு தும்பி வளைபேரி கையாழ்
தனிந்தெழு நாதங்கள் தாமிவை பத்தும்

- திருமந்திரம்

**கமல நடனம்**

திருவாய்மூர் விடங்கத் தலத்திற்குரிய நடனம் கமல நடனமாகும். நீர்நிலையில் அசைந்தாடும் தாமரை மலர்களின் அசைவினை ஒத்து இந்நடனம் வடிவமைக்கப்பட்டு இருக்கிறது. பத்மாசனத்தை குறிக்கும் விதமாகவோ அல்லது ஆயிரம் தாமரை இதழ்கள் கொண்டதாக விரிந்திருக்கும் சகஸ்ரராமம் ஆதார தலத்தின் குறியீடாகவோ இந்நடனம் அமைக்கப்பட்டிருக்கலாம்.

**ஹம்ஸபத நடனம்**

மிக பழமையான திருக்கோயில்களில் ஒன்றாக கருதப்படும் வேதாரண்யத்திற்கு உரியது ஹம்ஸபத நடனம். ஹம் மற்றும் ஸம் என்னும் உச்சரிக்கப்படாத மந்திரமாக மூச்சுக்காற்றிலிருக்கும் லயங்களின் அடிப்படையில் அமைந்ததே ஹம்ஸநடனம் என்று அழைக்கப்படும் அஜபா நடனம். அதுவே மூலாதாரம் தலமான திருவாரூர் தலத்திற்குரியது. மூலாதாரத்திலிருந்து சகஸ்ரராமம் வரையான ஆறு ஆதாரங்களில் பயணிக்கும் இந்த ‘‘ஹம்‘‘ ‘‘ஸம்‘‘ என்னும் மூச்சுக்காற்று அன்னவடிவ பறவையென உருவகிக்கப்படுகிறது.

இத்தத்துவத்தை முன்னிறுத்தி உருவாக்கப்பட்டதே அன்னம் நடைப்பயிலுவது போன்ற அசைவினை ஒத்திருக்கும் ஹம்ஸபத நடனம் என்று நம்பப்படுகிறது.

சப்தவிடங்கத் திருத்தலங்களின் நடனங்களின் தோற்ற பின்புலம் யோக நெறியோடு ஒத்திசைந்த தரவுகளின் அடிப்படையில் ஆராய்ந்து எழுதப்பட்டது. இந்நடன வடிவங்கள் இத்தன்மையது, இத்தோற்றத்தினை அடிப்படையாக கொண்டது என்று இதுவரை ஆராய்ந்தறிந்த நூல்களில் நேர் குறிப்புகள் இல்லை தியாகராஜர் ரகசியம் குறித்தும், இந்நடனங்கள் குறித்தும் எடுத்துரைக்கும் நூல்களில் , ஒவ்வொரு தலத்திற்குரிய நடன வடிவங்கள் என்று இந்த நடனங்கள் குறிப்பிடப்படுகின்றனவே தவிர எதன் அடிப்படையில் அவை வடிவமைக்கப்பட்டுள்ளது என்ற தகவல்கள் நூல்களில் நேரடியாக இல்லை. தியாகராஜ வழிபாட்டின் ரகசியம் கருதியோ, யோக நெறியில் உணரப்படுபவை தனிநபர் அனுபத்தின் தன்மையது என்பதலோ அவை விளக்கப்படாது இருந்திருக்கலாம் என்று கருதுவதற்கு இடமுள்ளது.

**தியாகராஜர் வழிபாடு மற்றும் சப்தவிடங்க நடனங்களில் ஸ்ரீவித்யா தத்துவம்**

17ஆம் நூற்றாண்டு தஞ்சை நிலப்பகுதியில் ஒரு பெரும் மாறுதலை ஏற்படுத்திய காலக்கட்டம். இயல், இசை, நாடகம் என்று கலைகள் அபார வளர்ச்சியடைய பெரும் பங்காற்றிய மராட்டிய ஆட்சிக் காலம் தொடங்கிய நூற்றாண்டு இது மராட்டிய மன்னர்களில் மிக முக்கிய அரசராக கருதப்படுபவர் ‘அபிநவபோஜன்'' என்று அழைக்கப்பட்ட சகசி மன்னர். இவர் காலக்கட்டத்தில் தியாகராஜர் வழிபாடு மீண்டும் மிக உன்னத நிலைக்கு எடுத்துச்செல்லப்பட்டது. சகசி மன்னர் தியாகராஜரை குலதெய்வமாக வழிப்பட்டார். இவர் காலக்கட்டத்தில் கலையும் இலக்கியமும் அபார வளர்ச்சிக் கண்டது திருவிசநல்லூர் என்னும் கிராமத்தை சகசிராஜபுரம் என்று பெயர் மாற்றம் செய்து 46 சிறந்த அறிஞர்களை அங்கு குடியமர்த்தினார். 18ஆம் நூற்றாண்டு சகசி, முதலாம் சரபோசி, இரண்டாம் சரபோசி ஆகிய சிறந்த கலை ஆர்வமுள்ள அரசர்களை பெற்றிருந்தது. இந்நிலத்தின் அபரிதமான செல்வ செழிப்பும் மற்றும் கலைகளுக்கு கிடைத்த அரச ஆதரவும் நாடு முழுவதும் இருந்த சிறந்த அறிஞர்களையும், கலைஞர்களையும் தஞ்சை நோக்கி ஈர்த்துள்ளது. சாக்தம் சார்ந்த தேவி வழிபாடு குறிப்பிடத்தக்க தாக்கத்தை இக்காலக்கட்டத்து வழிபாடுகளில் செலுத்தியிருப்பதை அப்போது இயற்றப்பட்ட இலக்கியங்களின் மூலம் அறியலாம்

1717ஆம் அண்டு முதலாம் சரபோசி ஆட்சியாண்டில் பொறிக்கப்பட்ட திருவாரூர் கோயில் கல்வெட்டு “தியாகராஜர்'' என்ற சொல் குறிப்பிடப்பட்டு திருவாரூர் கோயிலை புணர்நிர்மாணம் செய்தது குறித்த செய்திகளை உரைக்கிறது. சகசி மற்றும் ஏகோஜி மன்னர்களின் பெயரும் அதில் காணப்படுகின்றன. 1694ஆம் ஆண்டு சகசி மன்னர் செப்பேட்டில் தியாகராஜர் திருவடிவம் மறைக்கப்படாமல் முழுமையான வண்ண ஓவியமாக தீட்டப்பட்டுள்ளது. 1733ஆம் ஆண்டு ரகுநாத மெய்க்கன் என்பவரின் செப்பேட்டில் தற்போது உள்ளது போல் திருவடிவம் முழுவதும் மூடப்பட்டு ஓவியமாக தீட்ட்பட்டுள்ளது. எனவே

இடைப்பட்ட 40 ஆண்டுகளில் அஃதாவது 18ஆம் நூற்றாண்டு தொடக்கத்தில் தியாகராஜ வழிபாடு ரகசிய வழிபாடாக மாறியிருக்கிறது. இதற்கு அக்காலக்கட்டத்தில் தஞ்சையில் பரவியிருந்த ஸ்ரீவித்யா வழிபாடு முறை முக்கிய காரணியாக அமைந்திருக்கலாம் என்று நம்பப்படுகிறது.

சகசி மன்னரால் சகசிராஜபுரத்தில் குடியமர்த்தப்பட்ட 46 பண்டிதர்களும் பண்டைய சமஸ்கிருத, தமிழ் நூல்கள் குறித்த உரைகளையும் இலக்கணம் - சமய தத்துவங்கள் குறித்த விரிவுரைகளையும், இயல் - இசை - நாட்டியம் ஆகிய கலைகள் குறித்த விரிவான ஆய்வுகளையும் திறம்பட செய்து வந்தனர். இதே காலக்கட்டத்தில் பிராமணீய சமூக ஆதிக்கம் அரசர்களின் ஆதரவுடன் மீண்டும் வளர்ச்சியடைய தொடங்குகிறது. 16ஆம் நூற்றாண்டு வாக்கில் மிக அதிகளவில் தமிழகத்தில் வளர்ந்திருந்த வெள்ளாளர், பிற சமூக மடங்கள் 17ஆம் நூற்றாண்டில் தங்கள் செல்வாக்கை இழந்தன. கோயில்களில் குறிப்பிடத்தக்க அளவில் வெள்ளாளர், செட்டியார், முதலியார் ஆதிக்கங்கள் இருந்தாலும் சடங்குகளும், சம்பிரதாய நடைமுறைகளும் மீண்டும் அதிகரிக்கத் தொடங்கியது. வேதம் பயிலும் பிராமணர்களிடையே 16ஆம் நூற்றாண்டில் ஒரு குறிப்பிடத்தகுந்த மாறுதல் நிகழ்ந்தது. விஜயநகர, வேலூர், தஞ்சை, நாயக்கர்களால் ஆதிக்கப்பெற்ற அப்பைய்யா தீட்சிதர் முன்வைத்த சிவாத்வைதம் தத்துவத்தின் வழி வேதாந்திரிகள், ஆகமாந்த தத்துவங்களை பயிலத் தொடங்கி அவர்களின் வழக்கங்களையும் கைக்கொள்ள தொடங்கினார்கள். இக்காலக்கட்டத்தில் தான் ஆகமத்தை முன்வைத்த சிவனின் எண்ணற்ற மானுடவியல் உருவ வழிபாடு வேதாந்தீக சைவர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டு அவர்களின் பஞ்சாட்சர மந்திரத்தையும் வேத பிராமணர்கள் தியானிக்கத் தொடங்கினார்கள்.

இந்த இணக்கமான சூழ்நிலைகளும், ஆகமத்தின்பால் அவர்களுக்கு ஏற்பட்ட ஞான வளர்ச்சியும், கோயில் அமைப்பில் அவர்களை மீண்டும் முன்னிலைப்படுத்த உதவியது. பிராமணிய எதிர்ப்பு இயக்கமாக தங்களை முன்னிறுத்திக் கொண்ட காயசித்தர்கள் சக்தி வழிபாட்டினை முதன்மையாகக் கொண்டவர்கள். இதே காலத்தில் சைவ சமய சமூக அமைப்பில் உயரிய இடத்தில் தங்களை இருத்திக்கொள்ளும் வேத சைவர்களும் சாக்த நெறியை முன்னெடுக்கும் வழிபாட்டு நெறிகளை பெரிதும் பின்பற்றத் துவங்கினார்கள்.

சகசி மன்னரின் அவையினை அலங்கரித்த ஞான பண்டிதர்களின் பெரும்பான்மையானவர்கள் சாக்த மரபை பின்பற்றியவர்களாக இருந்திருப்பதை அறியலாம். சகசி ஆட்சியில் ராமபத்ர தீட்சிதர், ஸ்ரீதர் அய்யர்வாள் ஆகியோர் மிகுந்த செல்வாக்குடன் திகழ்ந்திருக்கிறார்கள். ராமபத்திர தீட்சிதர் 'நவீன பதஞ்சலி'' என்று புகழப்பட்டிருக்கிறார். பாஸ்கரராயர் சாக்த உரைகள் எழுதுவதிலும் சாத்திரங்கள் இயற்றுவதிலும் பெயர் பெற்றவர். இவரது படைப்புகள் சாக்த பிரிவு அறிமுகத்திற்கு நல்ல அடித்தளமாக அமைந்திருக்கிறது. இந்த நூற்றண்டிலே அத்வைத கொள்கைகளும் மீட்டுருவாக்கம் செய்யப்பட்டு பரவத் தொடங்கின. பரமேஸ்வேந்திர சரஸ்வதி, கிருஷ்ணாந்தா சதாசிவ பிரம்மேந்திரர் முதலானோர் அதற்கு ஊக்கம் அளித்துள்ளனர். நாம சித்தாந்தம் மற்றும் பஜனை பதாதிகள் ஆகியவை போதேந்திரர் மற்றும்

ஸ்ரீதர வேங்கடேச அய்யர்வாள் அவர்களால் முன்னெடுக்கப்பட்டு தஞ்சை முழுவதும் பரவலாக்கப்பட்டது. ராமபத்ர தீட்சிதரால் பதஞ்சலி வியாக்ரண மகாபாஷ்யம் என்ற நூலை தழுவி இயற்றப்பட்ட பதஞ்சலி சரிதம் இலக்கணத்தில் முக்கிய நூலாகக் கருதப்படுகிறது. சகசி மன்னர் காலத்தின் மிக முக்கியமான ஒரு நூல் சதர்சணி சித்தாந்த சங்கரஹா என்ற மரபான ஆறு வேதாந்த தத்துவங்களின் தொகுப்பாகும். இதை ராமபத்ர தீட்சிதர் உட்பட ஏழு அறிஞர்கள் தொகுத்துள்ளனர்.

சாக்த ஆச்சாரியர்களில் முக்கியமானவராக கருதப்படும் பாஸ்கரராயாவின் குருவான கங்காதர வாஜ்பேயின் சகசி மன்னரால் திருவாலங்காடு என்ற கிராமத்தை பரிசாக பெற்ற பெருமையுள்ளவர். சமஸ்கிரத இலக்கண ஆசிரியர்களில் சொக்கநாத மக்கின் என்பவர் ‘சஞ்சாரிபாஷ்யா’’ என்று அழைக்கப்படும் அளவிற்கு மிகுந்த இலக்கண ஞானம் கெண்டவராக இருந்துள்ளார். இவர் பாஷ்யரத்னாவளி என்ற இலக்கண நூலை திருவாரூர் தியாகராஜருக்கு சமர்பித்ததில் இருந்து தியாகராஜர் மீதான இவரது பக்தி நன்கு புலப்படும்.

சகசி மன்னரின் அரசவையை சேர்ந்த எண்ணற்ற அறிஞர்களாலும் அவரால் ஆதரிக்கப்பட்ட ஞான பண்டிதர்களாலும் அவரது ஆட்சி காலத்தில் சைவ சமயம் அதிலும் குறிப்பாக அவரால் குலதெய்வமாக கருதப்பட்ட தியாகராஜர் வழிப்பாட்டு மரபு பல குறிப்பிடத்தகுந்த மாற்றங்களை சந்தித்துள்ளது. அக்காலக்கட்டத்தில் அவர் ஆதரித்த பல ஆச்சாரியார்களால் ஸ்ரீவித்யா வழிபாடாகிய சாக்த வழிபாடு தஞ்சை மண்ணில் பரவியிருந்ததை அறியலாம்.

எனவே ஆகமங்களை முன்னிறுத்திய சைவ சித்தாந்த தத்துவங்களின் மையமாக இருந்த, திருவாரூர் வேதாந்த தத்துவங்களின் பெரும் வளர்ச்சியை சந்தித்தது. இக்காலக்கட்டத்திலே சைவ சித்தாந்த மடங்களின் எண்ணிக்கை அரச ஆதரவின்றி அதற்கான முக்கியத்துவத்தை இழக்க வேதாந்த சித்தாந்தம் சகசி மன்னர் ஆதரித்த சகசிராஜபுரத்து அறிஞர்களால் தஞ்சை முழுவதும் பரப்பப்பட்டுள்ளது.

தியாகராஜர் ரகசியம் எனப்படும் ஸ்ரீவித்யா சக்கரம் இக்காலக்கட்டத்திலே (18ஆம் நூற்றாண்டு) சோமாஸ்கந்த மூர்த்தத்தில் பதிக்கப் பெற்று அவ்வழிபாடு மரபு ரகசிய வழிபாடாக உருமாற்றப்பட்டிருக்கிறது. இலக்கண நூல்களின் வளர்ச்சி இவ்வழிபாட்டு மரபில் பதஞ்சலி மற்றும வியாக்ரபாதர் ஆகியோர் இணைக்கப்பட்ட காரணமாக இருந்திருக்கலாம். இக்காலக்கட்டத்து சித்தர் சித்தாந்தத்தின் தாக்கமும் தியாகராஜர் வழிபாட்டில் காணப்படுகிறது.

பரவலாக ஆராயப்பட்ட இலக்கியங்களிலும், செப்பேட்டுகளிலும் ஆவணங்களின் மூலமும் சப்தவிடங்க திருத்தல நடனங்கள் 18ஆம் நூற்றாண்டு வாக்கில் உருவாக்கப்பட்டிருக்கலாம் என்று நம்ப இடமுள்ளது. இவை அக்காலத்து பரவலாக்கப்பட்ட ‘சப்த பிரம்மன்’’ ‘சப்த பிரபஞ்சன்’’ என்னும் இலக்கண தத்துங்களையும், சைவ சமயத்தின் முக்கிய சித்தாந்தங்களின் மைய சரடாக உள்ள யோகநெறியையும் அடிப்படையாக கொண்டு வடிவமைக்கப்பட்டிருக்கலாம். ஆனால் தியாகராஜர் வழிப்பாட்டு மரபு ரகசிய

வழிபாடாக நிலைக்கொண்டதால் இந்நடனங்களின் தன்மை குறித்தும் தோற்றம் குறித்தும் நேரடியான தரவுகள் இலக்கியத்திலோ, இதர ஆவணங்களிலோ பெரிதும் பதிவாகவில்லை. அதன் பின்னான நூற்றாண்டுகளின் தலபுராணங்களின் இந்நடனங்கள் பற்றிய குறிப்புகள் இடம் பெறுகின்றனவே தவிர அவற்றின் விளக்கங்கள் பதிவாகவில்லை.

**முடிவுரை**

தியாகராஜர் என்றும் விடங்கர் என்றும் அழைக்கப்படும் இந்த சோமாஸ்கந்த மூர்த்த வழிப்பாட்டு மரபு ஏறத்தாழ 1400 ஆண்டுகளின் சமய மாறுதல்களையும், நம்பிக்கைகளையும், தத்துவங்களையும் உள்வாங்கி வளர்ந்திருக்கும் ஒரு தொன்மையான மரபாக இன்றும் நம்மிடையே நிலைப்பெற்றிருக்கிறது. இவ்வாய்வின் குறித்து ஆராயப்பட்ட தரவுகளின் அடிப்படையில் நோக்குகையில் சைவ சமயத்தின் மிக தொன்மையான பிரிவுகளில் ஒன்றான பாசுபதத்திலிருந்து தமிழ் நிலத்திற்கான தனி சித்தாந்தமாக முன்வைக்கப்படும் சைவ சித்தாந்தம், மாயாவாதம் நிறைந்த சித்தர் சித்தாந்தம், உக்கிரமான வழிப்பாட்டு நடைமுறைகளை கொண்ட காளாமுகம், காபாலிகம், சோம சித்தாந்தம், பெண் தெய்வ வழிபாட்டை தாந்திரீக முறையில் முன்னெடுத்த ஸ்ரீவித்தியா தத்துவம் வேதங்களின் உபநிடதங்களின் அடிப்படையில் தோன்றிய வேதாந்தம், இந்நிலத்திற்குரிய தொல்குடிகளின் மரபான நம்பிக்கைகள் என்றனைத்தையும் இத்தியாகராஜர் வழிப்பாட்டு மரபு உள்வாங்கி விரிவடைந்திருப்பதை அறியலாம்.

தியாகராஜர் வழிப்பாட்டு மரபில் சாதிய அடுக்குகளின் தாக்கம் மற்றைய அனைத்து சமய மரபுகளிலும் இருப்பதற்கிணையாகவே இருக்கின்றது. ஆனால் இம்மரபு ஒவ்வொரு சமூக அடுக்குகளில் உள்ளவர்களிடையே அவரவர்குரிய பங்களிப்பை கோருவதன் மூலம் கோயில் என்னும் பொது மைய அமைப்பில் அவர்களை முக்கியத்துவம் கொண்டவர்களாக உணர வைத்துள்ளது. இம்மாறுதல் ஒவ்வொரு நூற்றாண்டிலும் சிறிது சிறிதாக உருவாகி இறுதியில் முழுமைக் கொண்டுள்ளது. இம்மரபின் தனித்துவமான சிறு சடங்குகளும், அவற்றுள் நெடிய வரலாற்று பிண்ணனியை கொண்டுள்ளது. விடங்கர் என்ற தனி சொல் தெய்வ வடிவென, அரச சின்னமென, நெடிய மரபென தன்னை ஒவ்வொரு நூற்றாண்டிலும் தகவமைத்துக் கொண்டு இறுதியில் அத்தனை மாற்றங்களிலும் தனக்கான நெறியென ஒன்றை உள்வாங்கிக் கொண்டு தியாகராஜர் வழிப்பாட்டு மரபென தமிழகத்தின் தனித்த வழிப்பாட்டு மரபாக நிலைப்பெற்று உள்ளதை இக்கட்டுரை வழி அறியலாம்.

**அடிக்குறிப்புகள்**

1 சிவஸ்தல மஞ்சரி- த.சுப்பிரமணிய பிள்ளை.

2 கச்சியப்பரின் கந்தபுராணம் - கந்தவிரதப் படலம் - திருவிழா சருக்கம்.

3 பெரிய புராண ஆராய்ச்சி - மா.இராசமாணிக்கனார்.

4 அருணகிரிநாதரின் திருப்புகழ் - பாடல் 886 'மருவுலாவிடு குலைப்பவர்''

5 தமிழ்நாடு கல்வெட்டுகள் தொகுதி-8, பக்கம்-34 (திருப்பூந்துருந்தி) பக்கம்-128 திருநெய்த்தானம்.

6 சிவவடிவங்கள் - சிவகுருநாதப்பிள்ளை - இயல் இரண்டு.

7 திருநாவுக்கரசர் தேவாரம் - திருவாரூர் கோயில் பதிகம்.ஐந்தாம் திருமுறை பதிகம் 7

8 திருவாரூர் திருக்கோயில் - குடவாயில் பாலசுப்பிரமணியன், திருவாரூர் கல்வெட்டு எண்.52, முதலாம் குலோத்துங்கன் 44ஆம் ஆட்சியாண்டு கி.பி.1113-14.

9 *The Colas - K.A.Nilakanda Sastri - Kulothunga-I, A.D* (1070-1120)

10 திருவாரூர் திருக்கோயில் - குடவாயில் பாலசுப்பிரமணியன், ஆரூரின் சிறப்பு அம்சங்கள் - இண்டை மாலை.

அப்பர் தேவாரம் ஐந்தாம் திருமுறை திருவாரூர் பதிகம்

11 திருவாரூர் திருக்கோயில் - குடவாயில் பாலசுப்பிரமணியன், ஆரூரின் சிறப்பு அம்சங்கள் - பாரசைவர்.

12 திருவாரூர் திருக்கோயில் - குடவாயில் பாலசுப்பிரமணியன், ஆரூரின் சிறப்பு அம்சங்கள் - விழுப்பு அரையர் - விழுப்பிரம்மர் பக்கம்-19.

13 தியாகராஜர் கழிநெடில் - கமலை ஞானப்பிரகாசர்,

14 திருவாரூர் திருக்கோயில் - குடவாயில் பாலசுப்பிரமணியன், ஆரூரின் சிறப்பு அம்சங்கள்.

15 திருநள்ளாறு தல வரலாறு - தண்டபாணி தேசிகர், பகுதி. கோயில் விழா இசை மரபு.

16 திருக்காறாயிற் புராணம்.

17 சம்பந்த முனிவரின் திருவாரூர் புராணம் - திருவிழாச் சருக்கம் பக்கம்-116.

18 கமலாலய ஷேத்ர தத்துவம்.

19 தியாகராஜர் கழிநெடில் - கமலை ஞானப்பிரகாசர்,

20 திருக்காறாயிற் புராணம் - புராணத்து நிருத்த தரிசனச் சருக்கம்.

21 திருமூலரின் திருமந்திரம் பாடல் 543

22 திருமூலரின் திருமந்திரம் பாடல் 587

23 திருமூலரின் திருமந்திரம் பாடல்

24 திருமூலரின் திருமந்திரம் பாடல் 586

25 கமலாலய ஷேத்ர தத்துவம் - அஜபா நடன விமர்சனம்

26 கமலாலய ஷேத்ர தத்துவம் - அஜபா நடன விமர்சனம், அஜபா கல்பத்தின் விளக்கம்.

27 *Marathas rule in Carnatic by C.K.Srinivasan*

28 தஞ்சை மராட்டியர் கல்வெட்டுகள் - தமிழ் பல்கலைக்கழக வெளியீடு, பக்கம்.160,திருவாரூர்த் தியாகராஜர் கோயில் கல்வெட்டு.

*29 Appaya dikshita by N.Ramesan*

*30 Maratta Rajas of Tanjore - K.R.Subramanian.*

*31 Tyagarajar Cult in Tamil Nadu. A Study in Conflict and Accommodation by Rajeswari Ghose.*

**துணை நின்ற நூல்கள்:**

*1.சிவவடிவங்கள் - வித்துவான் மா.சிவகுருநாதப்பிள்ளை, தமிழ் பல்கலைக்கழக வெளியீடு 148,1991*

*2.சிவஸ்தல மஞ்சரி - த.சுப்பிரமணிய பிள்ளை.,சவுத் இந்தியன் அச்சுக்கூடம்,பி.ஆர்.இராமய்யர் அச்சுக்கூடம், இரண்டாம் பதிப்பு,1912*

*3.கச்சியப்ப சிவாச்சாரிய சுவாமிகளின் கந்தபுராண மூலமும், இராமசாமி நாயுடவர்களின் வசனமும்.பிரசிடென்சி அச்சு 1908*

*4.பெரிய புராணம் ஆராய்ச்சி ஆய்வு நூல் - மா.இராசமாணிக்கனார்.அலமு பதிப்பகம்,2002*

*5.அருணகிரிநாதரின் திருப்புகழ் திரு.கிருபானந்த வாரியார் உரையுடன்,திருவரசு நூல் நிலைய வெளியீடு*

*6.தமிழ்நாடு கல்வெட்டுகள் 2004,2005 தொகுதி, தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை பதிப்பு.*

*7.South Indian inscriptions volume 2,3 and volume 17 Archeological survey of India publications*

*8.Tamil Country Under Vijayanagar by Annamalai University publication 1964*

*9.திருக்காறாயிற் புராணம்-சிதம்பரச் செட்டியார் இயற்றியது வேலுச்சாமிக் கவிராயர் மொழிபெயர்ப்பு,கணேச அச்சு இயந்திர சாலை,1924*

*10.தியாகராஜர் கழிநெடில் - கமலை ஞானப்பிரகாசர்*

*11.கமலாலய ஷேத்ர தத்துவம்-ந.சுப்பிரமணிய அய்யர் கமலாலய சிறப்பு வெளியீடு 2 வருடம் 1951*

*12.திருவாரூர் புராணம் - சம்பந்த முனிவர்-கலாரத்னாகர அச்சு*

*13.தஞ்சை மராட்டிய மன்னர் கால அரசியலும். சமுதாய வாழ்க்கையும் - கே.எம்.வேங்கடராமையா, தமிழ் பல்கலைக்கழக வெளியீடு -1984*

*14.The mythology of Tamil Saiva Talapuranam by David Shulman, The Tamil Puranas types and Prototypes, published by Princeton University press*

*15.ஒட்டக்கூத்தரின் மூவருலா.-கலாஷேத்ரம் பதிப்பு டாக்டர் உ.வே.சாமிநாதய்யர் நூல் நிலைய வெளியீடு*

*16.பாகவத புராணம் பதிப்பு இ.மா.கோபால கிருஷ்ணன் கோன்,1936*

*17.திருநாகைக்காரோணம் புராணம்-மீனாட்சிசுந்தரம் பிள்ளை, சென்னை ஏஷியாட்டிக் அச்சுக்கூடம்*

*18.வேதாரண்ய புராணம் - அகோரதேவர். உரையாசிரியர் திரு.வேற்பிள்ளை,*

*ஸ்ரீலலிதா அச்சு யந்திர சாலை 1898*

*19.காசியாரணிய மகாத்மியம் -வெங்கட்ராம கனபாடிகள் ஆரியபிரகாசினி அச்சு 1915*

20.சிதம்பர கண்கட்டி ஸ்ரீ மறைஞானசம்பந்த நாயனாரின் கமலாலய சிறப்பு(எ), திருவாரூர் புராணம்,உ.வே.சா நூல் நிலையம் வெளியீடு 1961

21.மு.அருணாச்சலம் - தமிழ் இலக்கிய வரலாறு. 12ஆம் நூற்றாண்டு பாகம் 1,2-தி பார்க்கர் வெளியீடு

22.திருவாரூர் திருக்கோயில் - குடவாயில் பாலசுப்பிரமணியன்-அருள்மிகு தியாகராஜ சுவாமி திருக்கோயில் வெளியீடு

23.The Colas - K.A.Nilakanda Sastri -second edition by University of Madras,1955

24.திருநள்ளாறு தல வரலாறு - தண்டபாணி தேசிகர்

25.முசுகுந்த சகஸ்ரநாமம். - sanskritdocument.org dt 18.04.2020

26.Tyagarajar Cult in Tamil Nadu. A Study in Conflict and Accommodation by Rajeswari Ghose.Motilal banarasidass publishers,1996

27.பன்னிரு திருமுறைகளின் வரலாறு -வெள்ளைவாரணர், அண்ணாமலை பல்கலைக்கழக வெளியீடு 1972

28.நாகப்பட்டின மாவட்ட கல்வெட்டுகள், தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை வெளியீடு 2007

29.தஞ்சை மராட்டியர் கல்வெட்டுகள் - தமிழ் பல்கலைக்கழக வெளியீடு, பக்கம்.160, திருவாரூர்த் தியாகராஜர் கோயில் கல்வெட்டு.

30.சைவ ஆதீனங்கள் - ஊரன் அடிகள், தமிழ் விக்கிபீடியா.

31.திருமூலரின் திருமந்திரம் T.C.பார்த்தசாரதி யோகி,வித்யாரத்னாகர அச்சு,1940

32.மு.அருணாசலம் தமிழ் இலக்கிய வரலாறு 16ஆம் நூற்றாண்டு பாகம்-1 மற்றும் பாகம்-2. முறையே தி.பார்க்கர் மற்றும் காந்தி வித்யாலயம் வெளியீடு

33.தமிழகத்தில் விஜயநகர ஆட்சி (1336-1530)முனைவர் சிங்காரவேலன், சரசுவதி மகால் நூலகம்,

34.தஞ்சை நாயக்கர்கள் - குடவாயில் பாலசுப்பிரமணியன், சரசுவதி மகால் நூலகம் வெளியீடு

35.தஞ்சை மராட்டிய மன்னர் வரலாறு -கே.எம்.வேங்கடராமையா ,தமிழ் பல்கலைக்கழக வெளியீடு 1987

36.Maratta Rajas of Tanjore - K.R.Subramanian. published by author 1928

37.நன்னிலம் கல்வெட்டுக்கள் தொகுதி 1,2,3 தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத் துறை வெளியீடு

38.சிவஞான போதம்-ஸ்ரீமெய்கண்ட தேவ நாயனார், திருவாவடுதுறை ஆதீன வெளியீடு 1949

# *Social work done by Vallalar and Vivekananda*

***Dr N. Deepa Rani***, *Assistant professor, Tamil department,*
*vels University, Chennai 117*

V I J R S 2 0 2 5

***Abstract***

*The spiritual principles established by Vallalar, along with his social ethical doctrines, together form the unified and harmonious philosophy known as the Samarasa Suddha Sanmargam. Vallalar sincerely wished that these noble principles would reach the broader society and elevate the people. To implement these ideals, he established three institutions: the Sangam, the Saalai, and the Sabai. According to Vallalar, Sanmargam (the righteous path) is nothing but a philosophy of love that advocates for spiritual bravery. He clearly explained that a true Sanmargi is one who attains immortality, and not someone who merely dies.*

*The sixth Thirumurai (a prose work by Vallalar) outlines the pathways to attain Sanmargam through Nithya Karuma Vidhis (eternal duties), which are classified into three chapters: General Rules, Common Rules, and Special Rules - prescribing daily duties to be followed. On one hand, Vallalar guided society through his spiritual and ethical teachings; on the other hand, a historic event that occurred 100 years later - on September 11, 1893, in Chicago, USA - was a remarkable milestone in the cultural history of humankind: the World Parliament of Religions. The objective of this gathering was to understand and appreciate the special features and differences of various religions without rejecting any.*

*Representing the inclusive and broad-minded Hindu tradition, a monk from India participated in the Parliament and emerged as a leading voice. At the conclusion of the Parliament, he glorified the greatness of Hinduism and, through that, showed a miraculous path towards the unity of all religions. That monk was none other than Swami Vivekananda. Though he participated as an ordinary Indian, today the world continues to celebrate his presence at that Parliament.*

*Receiving the grace of his guru, Bhagavan Sri Ramakrishna, Swami Vivekananda beautifully presented India's spiritual wealth to the world in an organized and disciplined manner. Thus, both Vallalar and Swami Vivekananda are widely known for implementing social service through the*

*essence of their respective religions. This article examines the social contributions of these two spiritual leaders.*

***Keywords:*** *Sanmargham, sabha, salai, religion, paravai.*

***References:***

/1] Ṭākṭar cupa. Āṇṇamalai, vaḷḷalār vāḻvum tattuvamum carvōtaya ilakkiya paṇṇai, maturai 1980.

[2] Vaḷḷalār ōr aṟimukam, pērāciriyar mā.Pā kurucāmi maturai palkalaikkaḻakam 1977.

[3] Āṟām tirumuṟai, tirunāvukkaracar, tarumai'ātīṉam 1963.

[4] Vivēkāṉantar vīra iḷaiñarukku śrī rāmakiruṣṇā maṭam veḷiyīṭu ceṉṉai 2000.

[5] Vaḷḷalār tiruvaruṭpā āṟām tirumuṟai.Tiruvaruṭpirakācar vaḷḷalār tēvanēya veḷiyīṭu 2004)

[6] Vivēkāṉantar varalāṟu, rā. Kaṇapati rāmakiruṣṇa maṭam veḷiyīṭu.



## வள்ளலாரும் விவேகானந்தரும் செய்த சமுக பணிகள்

***முனைவர் நா. தீபாராணி***, *உதவி பேராசிரியர், தமிழ்த்துறை,*

*வேல்ஸ் பல்கலைக்கழகம், சென்னை.117*

**ஆய்வுச் சுருக்கம்**

*வள்ளலார் உருவாக்கிய இறைநெறி கோட்பாடுகள் சமூக நெறி கோட்பாடுகளும் இணைந்து ஒன்றே சமரச சுத்த சன்மார்க்கம் ஆகும் பெற்ற கொள்கைகள் மக்கள் சமுதாயத்தின் நன்கு பரவி அவர்களை உயர்த்த வேண்டும் என்று அவர் உளமாற விரும்பினார். எனவே அக் கொள்கையை செயல்படுத்த சங்கமும் சாலை சபை என்ற மூன்று பேரும் நிறுவனங்களை கண்டார். சன்மார்க்கம் என்றாலே அவை சாகச கல்வியை அறிவிப்பது அன்பின் வேறொன்றும் இல்லை என்றும் சாகா வரம் பெறுபவனே சன்மார்க்கி என்றும் செத்தவன் சன்மார்க்கி அல்ல என்றும் விளக்கியுள்ளார் வள்ளலார் சன்மார்க்கத்தை அடையும் வழிமுறைகளாக வள்ளலாரின் ஆறாம் திருமுறை உரைநடை நூலின் வாயிலாக வள்ளலார் பெருமானே கூறுகின்ற நித்திய கரும விதிகளில் சாதாரண விதி பொது விதி சிறப்பு விதி என மூன்று அத்தியாயங்களில் நாம் தினமும் செய்ய வேண்டியவர்களை தெரிவிக்கின்றன.இப்படி வள்ளலார் ஒருபுறம் சமுதாயத்திற்கு வழிகாட்ட மறுபுறம் இன்றைக்கும் 100 வருடங்களுக்கு முன்னால் 1983 செப்டம்பர் 11ஆம் நாள் அமெரிக்காவில் சிகாகோ நகரில் கூடிய சர்வ சமய பேரவை மானிட ஜாதியின் பண்பாடு வரலாற்றில் ஈடு இணையற்ற நிகழ்ச்சியாகும் வெவ்வேறு மதங்களின் சிறப்பு அம்சங்களை பரஸ்பர வேற்றுமைகளையும் புரிந்து கொள்வது அந்த பேரவையை கூட்டியவர்களின் நோக்கமாக இருந்தது எந்த மதத்தையும் விலகாமல்*

சொந்த மதம் ஆக்கிக் கொள்கின்ற பரந்த இந்துக்களின் பிரதிநிதியாக இந்தியாவிலிருந்து ஒரு துறவி அந்த பேரவையில் கலந்து கொண்டார். அவரே அந்த பேரவையில் முதன்மையாக திகழ்ந்தார். பேரவை நிறைவுறும் வேலையில் இந்து மதத்தின் பெருமையை உணர்த்தி அதன்மூலம் அனைத்து மதங்களின் ஒற்றுமைக்கும் ஒரு அற்புத வழியை காட்டி இருந்தார் அவர் சுவாமி விவேகானந்தர் ஆவார் இன்று உலகம் எல்லாம் பேசப்பட்டாலும் அன்று அந்த பேரவையில் ஒரு சாதாரண இந்தியராகவே கலந்து கொண்டிருந்தார். நமது குருவான பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணா அருளை பெற்று அவர் இந்த உலகிற்கு பாரத திரு நாட்டின் கொடையாகிய ஆன்மீக செல்வத்தை அழகான நெறிமுறைகளின் படி எடுத்து உடைத்திருந்தார் இதன் மூலம் இருவருமே சமூகப் பணியை தன் சார்ந்த மதங்களின் மூலம் செயல்படுத்தினார்கள் என்பது அனைவரும் அறிந்த ஒன்று ஆகும் அதனால்தான் இவ்விருவருக்கான சமூகப் பணியை இவ்வாறு கட்டுரை ஆராய்கிறது.

**திறவுச்சொற்கள்:** சன்மார்க்கம், சபை, சாலை, மதம், பேரவை.

**முன்னுரை:**

ஆருயிர்களுக்கு எல்லாம் அன்பு செயல் வேண்டும் என்று எண்ணி உயிர்களிடம் அளவற்ற கருணையையும் இறைவனிடம் இணையற்ற பக்தியையும் கொண்டு வாழ்ந்தவர் வள்ளலார் அவர்கள் தர்மசாலையும், ஞானசபையும் நிறுவி சன்மார்க்க சங்கம் கண்டவர் வள்ளலார் இந்தியாவின் அருட்பெருஞ் செல்வர்களுள் தலைசிறந்தவரும் இந்தியாவின் மீது அளவற்ற பாசம் கொண்டவரும் தத்துவ ஞானி ஆகவும் திகழ்ந்தவர் சுவாமி விவேகானந்தர் இவர் ராமகிருஷ்ணா மடத்தை நிறுவியவர் ஆவார் இவர்கள் இருவரின் வாழ்க்கையும் கொள்கை மற்றும் சமய சமுதாய சிந்தனைகளை ஒப்பிட்டு இக் கட்டுரை கூறுகின்றது.

சாதி வேற்றுமைகளையும் தீண்டாய் நோய்களையும் அறவே கலையும் வள்ளலாரும் விவேகானந்தரும் பாடுபட்டனர் உயிர்கள் அனைத்திலும் இறைவனைக் கண்டு மக்கள் தொண்டு மகேசன் தொண்டு என பறைசாற்றினர் ஆன்மநேய ஒருமைப்பாட்டு உரிமையை வளரவும் ஓங்கவும் இருவரும் பாடுபட்டனர் சமுதாயத்தில் மலிந்து கிடந்த மூடநம்பிக்கைகள் பெண் அடிமைகள் சடங்குகளையும் எதிர்த்து போராடினர் இவற்றையே கட்டுரையில் நாம் வள்ளலாரின் சமுதாய சிந்தனையும் விவேகானந்தரின் சமுதாய சிந்தனையையும் நாம் காணலாம்.

**சாதி சமய மத பிரிவினைகள்**

மக்களைக் கடந்து உயிர்கள் அனைத்தையும் ஒருமைப்பாட்டுடன் வாழ வேண்டும் என்று கருதிய வள்ளலாருக்கும் சாதிப்பிரிவுகளும் சமய வேறுபாடுகளும் மதப் பிணக்குகளும் மக்கள் இடையே ஒருமைப்பாடு குறைவதற்கு காரணங்களாக அமைந்த பாங்கு வெறுப்பினை தந்தது எனவேதான் அவர்

சமயம் மதம் சாதியால் வருண வேதம் ஆசிரம ஆதாரம் எல்லாவற்றையும் புறக்கணித்து ஒதுக்க வேண்டும் என்று பாடுகின்றார் வள்ளலார். உயிருக்கு உருவம் இல்லாமையால் அது நிற்கும் உடம்பை கொண்டதுதான் உலக வாதங்கள் குலத்தவர் தங்கள் இனத்தவர் என்று சிலரையும் தங்கள் இனம் குலம் அல்லாதவர் என்று சிலரையும் வேறுபடுத்தி காண்கின்றனர். குலப்பிரிவும் இனப்பிரிவும் ஆன்மாவுக்கு இல்லை என்று வழகாடியவர் வள்ளலார்.

எங் குலம் எம்மினம் என்பதொண்ணூற்றாறு

அங்குலம் என்றருள் அருளட்பெருஞ்சோதி1(வள்ளலார் திருவருட்பா ஆறாம் திருமுறை பா.எண்740 திருவருட்பிரகாசர் வள்ளலார் தேவநேய வெளியீடு 2004) என்று தெரிவிக்கின்றார்.

சாரி சமய மதங்கள் மக்களை பிரித்து வேறுபாட்டினை வளர்த்து அவர்களுள் பூசல் உண்டாகி அவர்கள் வீணாகி போக காரணமாகின்றது என்பதனை வள்ளலார்

மதங்களிலே சமய நெறி களிலே

சாத்திரஞ்சந் தடிகளிலே தோத்திரச் சண்டையிலே

ஆதியிலே அபிமானித்து அலைகின்ற உலகீர்

அலைந்தலைந்து வீணே நீர் அழிதல் அழ சுலவே2 (வள்ளலார் திருவருட்பா ஆறாம் திருமுறை பா.எண் 105 திருவருட்பிரகாசர் வள்ளலார் தேவநேய வெளியீடு 2004) இங்கே தெரிவிக்கின்றார்

நாட்டில் நிலவிய சமய மதம் போன்றவற்றின் நெறிகள் எல்லாம் பிள்ளை விளையாட்டு என்று வள்ளலார் குறிப்பிட்டுள்ளார். மேலும் என்றும் சாதிசமைய சலக்கை விட்டுவிட்டு அருட்பெருஞ்ஜோதி வள்ளலார் கண்டதை மிக அழகாக பாடலில் குறிப்பிட்டுள்ளார்.

சாதி சமய சழக்கை விட்டேன்

அருட் ஜோதியைக் கண்டேனடி அக்காச்சி

சோதியை க்கண்டேனடி3 (வள்ளலார் திருவருட்பா ஆறாம் திருமுறை பா.எண் 4949 திருவருட்பிரகாசர் வள்ளலார் தேவநேய வெளியீடு 2004)

என்று வள்ளலார் குறிப்பிட்டதில் இருந்து அறிய முடிகின்றது சாதி சமயம் இல்லாத ஒரு நிலையை ஏற்படுத்த வள்ளலார் தீர்மானித்தார். அதற்காகவே சாதிசமயம் பாராமல் எல்லா சமயபுத்தவருக்கும் எல்லா சாதி இருக்கும் பொதுவான ஒரு ஞான சபையை நிறுவினார். இதில் சாதி சமய அறக்கட்ட சதக்கற்ற நிலையை உணர்த்துகின்றார் .எல்லா வகையிலும் மக்களுக்கு உதவும் எண்ணதினை வள்ளலார் விதைத்தார் அதனால் சத்திய சன்மார்க்கத்தை நிறுவினார்.

சாதி சமய சழக்கெல்லாம் அற்றது சன்மார்க்க ஞான சபை நிலை பெற்றது4 (வள்ளலார் திருவருட்பா ஆறாம் திருமுறை பா.எண் 4913திருவருட்பிரகாசர் வள்ளலார் தேவநேய வெளியீடு 2004)

சாதி சமயம் கட்டுப்பாட்டினை தன்னுடைய பல உரைகளிலும் சொற்பொழிவுகளிலும் விவேகானந்தர் கூறியுள்ளதை ஈரா கணபதி அவர்கள் தனது கட்டுரையில் கூறியுள்ளார்

வேத அத்தியாயம் ஒரு குறிப்பிட்ட சாராருக்கு மட்டும்தான் உரியது என்பதனை விவேகானந்தர் ஒப்புக்கொண்டதில்லை ஆத்ம விசாரம் செய்து பிரம்மா நுபவம் பெறுவதற்கு யாவரும் உரிமை பெற்றிருக்கும் போது அதற்கு உபாயம் மட்டுமேயான வேதத்தில் எல்லோருக்கும் அதிகாரம் இல்லை என்பது சரியாகாது என்பதே அவரின் கருத்தாக உள்ளது ஞானக்காண்டம் ஆகிய உபநிஷத்தில் எல்லோருக்குமே அதிகாரம் உண்டு என்று அவர் திட்டவட்டமாக கூறியுள்ளார்5 (விவேகானந்தர் வரலாறு ரா. கணபதி ராமகிருஷ்ண மடம் வெளியீடு பக்கம் 210) என்பதனை இவரின் கட்டுரையை வாசிக்கும் போது தெரிகின்றது.

மேலும் பிறப்பு ஆனால் சமூகம் அந்தஸ்து பெரும் நிலை மாறி தகுதியால் அந்தஸ்து பெரும் நிலை ஏற்பட வேண்டும் என விரும்பினார் எல்லோருக்கும் பொதுவான உண்மைகளே உபநிஷதம் கூறுகிறது. வேதமும் எல்லோருக்கும் பொதுவானதே இவற்றைக் கொண்டுதான் நவபாரதம் நிர்மாணிக்க வேண்டும் என்று விவேகானந்தர் கருதினார். எந்த நாடும் பெற்றிராத உன்னத தத்துவங்களை பெற்றது நம் இந்திய நாடு மற்ற நாடுகள் நையாண்டி செய்யும் பழக்க வழக்கங்களை பின்பற்றி ஹிந்து மதத்துக்கு அவப்பெயர் தேடி தருவதாக கண்டித்து கூறினார்.6 (விவேகானந்தர் வரலாறு ரா. கணபதி ராமகிருஷ்ண மடம் வெளியீடு பக்கம் 307)

தீண்டாமையை கண்டித்த சுவாமி விவேகானந்தர் இந்த தகாதவர்கள் என்று மக்களில் ஒரு சாராரை ஒதுக்குவதை அறவே கண்டித்தார் அவர்களும் கல்வி பெற்று எழுச்சி பெற வேண்டும் என்று முழங்கினால் அவர் தம்முடைய ஒரு உரையில் பின்வருமாறு கூறுகின்றார் தீண்டதாக தவர்களிடம் செல்லுங்கள் தோட்டிகளிடம் செல்லுங்கள் இவர்கள் போன்ற எல்லோரிடமும் செல்லுங்கள் நீங்கள் இந்த நாட்டின் ஆத்மா உங்களுக்குள் உலகத்தையே புரட்ட கூடிய எல்லை விட்டு சக்திகள் இருக்கின்றது. நிமிர்ந்து எழுங்கள் தடைகளை உரித்து தள்ளுங்கள். உலகம் முழுவதும் உங்களை கண்டு அதிசயக்கும் என்று அவர்களிடம் எழுச்சியான வார்த்தைகளை கூறியதாக காண முடிகின்றது இவ்வாறு தாழ்த்தப்பட்டவர்களையும் எழுச்சி பெற வேண்டும் என்றும் கடவுள் குடிகொண்டுள்ள ஆன்மாக்களில் உயர்வு தாழ்வு இருக்கக்கூடாது என்பதனை வள்ளல் ஆறும் சுவாமி விவேகானந்தரும் கூறி இருப்பதை காண முடிகின்றது.

**பாமர முன்னேற்றமும் சிவகாருணியமும்**

பசியினால் வருந்துகின்றவர்கள் எந்த தேசத்தராயினும் எந்த சமயத்தவராயினும் எந்த சாதியராயினும் எந்த செய்கையாராயினும் அவர்கள் தேச ஒழுக்கம் சமய ஒழுக்கம் சாதி ஒழுக்கம் செய்கை ஒழுக்கம்

முதலானவைகளை போதித்து விசாரியாமல் எல்லா சீவகர்களுக்கும் கடவுள் விளக்கம் பொதுவாக விளங்கியதை அறிந்து பொதுவாக பார்த்து அவரவர் ஒழுக்கத்திற்கு தக்கம்படி அவர்களின் பசியை நிவர்த்தி செய்வதே சீவகாருணியம் என்று வள்ளலார் தெரிவிக்கின்றார். இதன் வாயிலாக பசி கொடுமையை மாந்தர் யாவருக்கும் உள்ள பண்பை அறிந்து மக்களுக்குள்ளே வேறுபாடு பாராட்டாது அக்க கொடுமையை போக்குவதேகடமையாக கொள்ளுதல் வேண்டும் என அவர் வலியுறுத்துகின்றார்.

வாடிய பயிரை கண்டபோதெல்லாம் வாடினேன் பசியினால் இளைத்தே
வீடு தோ றிந்தும் பசியாற துயர்ந்த வெற்றாரைக் கண்டுளம் பகைத்தேன்
நீடிய பிணியால் வருந்துகின்றோர் என் றேர்உறக் கண்டுத்துடித்தேன்
ஈடின் மானி களாய் ஏழைகளாய் நெஞ்சே சிளைத்தவர் தமைக்கண்டே இளைத்தேன்.7 (வள்ளலார் திருவருட்பா ஆறாம் திருமுறை பா.எண் 274 திருவருட்பிரகாசர் வள்ளலார் தேவநேய வெளியீடு 2004)

இதனையே சுவாமி விவேகானந்தரும் தன் முறைகளின் பல இடங்களில் கூறியுள்ளார். பசியால் நிறைந்து வாழும் மக்களிடையே சென்று சமய பிரச்சாரம் செய்வது அவர்களை அவமதிப்பது ஆகும் பட்டினி கிடக்கும் மனிதனை அழுகி அவனுக்கு தத்துவ போதனைகள் செய்வது அவனை அவமதிப்பது ஆகும் 8(விவேகானந்தர் வீர இளைஞருக்கு ஸ்ரீ ராமகிருஷ்ணா மடம் வெளியீடு சென்னை 2000 பக்கம் எண் 59)

நமது நாடு ஏழைகள் உணவில்லாமல் பட்டினி கிடப்பதை காணும்போது பூஜை முதலியவற்றையும் கல்வியையும் தூர எறிந்து விட்டு சாதனையாளர்கள் புலன் நடக்கத்தாலும் வந்த ஆற்றலால் பணக்காரர்களின் மனதை திருப்பி பணம் திரட்டி ஊர் ஊராகச் சென்று ஏழைகளுக்கு தொண்டு புரிவதில் வாழ்நாள் முழுவதையும் கழிக்க வேண்டும் என்ற எண்ணம் நமக்கு உண்டாகின்றது விவேகானந்தர் வீர இளைஞருக்கு ஸ்ரீ ராமகிருஷ்ணா மடம் வெளியீடு சென்னை 2000 பக்கம் எண் 59)

இவ்வாறு விவேகானந்தரும் வள்ளல் ஆறும் பசியால் வாடியவர் ஏழைகளுக்கும் வறியவர்களுக்கும் உதவ வேண்டும் என்ற இரக்க குணத்தை கொண்டவர்கள் என்பதனை நம்மால் காண முடிகின்றது.

**பெண் கல்வி மற்றும் பெண் சமத்துவம்**

சென்ற நூற்றாண்டில் பெண்களை சிறுவயதிலேயே திருமணம் செய்து கொடுத்தாலும் கணவன் இறந்தால் மனைவி உடன்கட்டை ஏறுதலும் இளம் விதவை பெண்கள் மறுமணம் செய்ய இயலாமல் தவிப்பதும் கணவன் இறந்த பின்பு வாழ்க்கை கூறிய சொத்து கிடைக்காத நிலையில் பெண் சமுதாயம் இருந்த காலமாகும் பெண்கள் பிறந்தது முதல் இறக்கும் வரை துன்பத்திலும் துயரத்திலும் மூழ்கும் நிலையை நம் நாட்டின் வழக்கத்தில் இருந்தது சமுதாயத்தில் பெண்களின் நிலை இவ்வாறு இருந்தும் வந்த காலத்தில் வள்ளலார் பெண்களுக்கு சமத்துவம் வழங்க வேண்டும் என்பதற்காக பல பாடல்களை பாடியுள்ளார்.9 (வள்ளலார் திருவருட்பா உரைநடை பகுதி பக்கம் எண் 426)

இனி சுவாமி விவேகானந்தரின் உரைகளில் பெண்களைப் பற்றி அவர் கூறிய நோட்டை தொகுக்கலாம் எங்கே பெண்கள் மதிப்பிடப்படுகிறார்களோ அங்கேயே தெய்வங்கள் மகிழ்ச்சி அடைகின்றன இங்கே அவர்கள் மதிக்கப்படவில்லையோ அங்கே கால காரியங்களும் முயற்சிகளும் நாசமாகின்றன எந்த நாட்டின் குடும்பத்தில் பெண்களுக்கு மேன்மையிடம் இல்லையோ அங்கேயே அவர்கள் துயரத்தோடு வாழ்கிறார்களோ அந்த நாடும் குடும்பமும் உயர்வடைவதற்கான நம்பிக்கையே இல்லை என்று இந்த காரணங்களால் நமது நாட்டுப் பெண்கள் முதலில் உயர்வு பெற வேண்டும் என்று கூறுகின்றார் 10 (விவேகானந்தர் வீர இளைஞருக்கு ஸ்ரீ ராமகிருஷ்ணா மடம் வெளியீடு சென்னை 2000 பக்கம் எண் 53) சமயம் கலைகள் சுகாதாரம் இப்படிப்பட்ட பாடல்களை நமது பெண்களுக்கு கற்பிக்க வேண்டும் நாவல்களையோ கற்பனை கதைகளையும் அவர்கள் படிக்க அனுமதிக்க இது நல்லது அல்ல 11 (விவேகானந்தர் வீர இளைஞருக்கு ஸ்ரீ ராமகிருஷ்ணா மடம் வெளியீடு சென்னை 2000 பக்கம் எண் 53)

**முடிவுரை**

வள்ளலார் எவ்வாறு ஆங்கில ஆட்சியை குறை சொல்லாமல் மக்கள் தம் தனிமனித வாழ்வில் உயர அடைய வேண்டும் மரணம் இல்லா பெருவாழ்வை பெறவேண்டும் என்று எண்ணினாரோ அதேபோன்ற சுவாமி விவேகானந்தரும் நம் நாடு தாழ்வற்று ஆங்கிலேயர் காரணம் என்று நினைக்கவில்லை நமது இணைந்த நிலைமைக்கு வருமைக்கும் காரணம் நாமே அன்றே ஆங்கிலேயர்கள் காரணம் அல்ல என்று ஒவ்வொரு தடவையும் என் இதயம் கூறுகின்றது என்று கூறுகின்றார் நமது மேல் சாதியை மக்கள் அகம்பாவத்தோடும் ஏழை எளிய மக்களை தங்கள் காலடியில் போட்டு துவைத்து மிதித்து மனித உணர்வு அறவே சற்று போகும் படி அவர்களை கொடுமைப்படுத்தினார்கள். அதுதான் நமது இழிந்த நிலைக்கு காரணமே தவிர ஆங்கிலேயர்கள் காரணம் அல்ல என்பதை நிச்சயம் என்று சுவாமி விவேகானந்தர் கூறுவதில் இருந்து இருவரும் ஒரு கருத்தோடு செயல்பட்டுள்ளனர் என்பதனை நம்மால் அறிய முடிகின்றது இவ்வாறு விவேகானந்தரும் வள்ளலாரும் பல சிந்தனைகளில் ஒத்துப் போகின்ற நிலையை நம்மால் பார்க்க முடிகின்றது.

**பார்வை நூல்கள்**

1. டாக்டர் சுப.ஆண்ணமலை,வள்ளலார் வாழ்வும் தத்துவமும் சர்வோதய இலக்கிய பண்ணை,மதுரை 1980.

2. வள்ளலார் ஓர் அறிமுகம் ,பேராசிரியர் மா.பா குருசாமி மதுரை பல்கலைக்கழகம் 1977.

3. ஆறாம் திருமுறை ,திருநாவுக்கரசர் ,தருமைஆதீனம் 1963 .

4.விவேகானந்தர் வீர இளைஞருக்கு ஸ்ரீ ராமகிருஷ்ணா மடம் வெளியீடு சென்னை 2000 .

5.வள்ளலார் திருவருட்பா ஆறாம் திருமுறை .திருவருட்பிரகாசர் வள்ளலார் தேவநேய வெளியீடு 2004)

6.விவேகானந்தர் வரலாறு, ரா. கணபதி ராமகிருஷ்ண மடம் வெளியீடு.

***

V I J R S

Journal Title (In Regional):
வாரணம் பன்னாட்டுச் சமய ஆய்விதழ்

Journal Title (In English):
Vaaranam International Journal of Religious Studies

Publication Language:
Tamil (தமிழ்) & English (ஆங்கிலம்)

Publishing Frequency:
Quarterly *(March,June,Septumber,December)*

Journal Coverage:
International

Publication:
Journal

Subject Category:
Research Area

Subjects Coverage:
Multidisciplinary

Publication Type:
Online

Publishing Model:
Open Access

Publication Release Process:
Peer Reviewed

Call for papers
Last date: 10th of every - March, June, September & December

vaaranamjournal@gmail.com
Visit: niththilampublications.com